THE SUDAROLI
சுடர் ஒளி
REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA
30.00
பக்கங்கள் -28
வாரமலர்
ஒகஸ்ட் 22- ஒகஸ்ட் 28, 2012
August 22 - August 28, 2012



# துரோகத்துக்கு ஆலோசனை!




## நல்லாட்சி நடக்கிறதா?

## எலி ஏற்படுத்திய கிலி!

உண்மைச் சம்பவம்

## இலங்கைத் தமிழர்களும் டெசோ மாநாடும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



e Sampath ரெமிட்டன்ஸ்

# பணப் பரிசுகள்

## ரமஸான் காலத்தில் சம்பத் வங்கி மூலம் பணம் பெற்று கைநிறைய பரிசுகளை

# வென்றிடுங்கள்!

ஜூலை 17ம் திகதி முதல் ஆகஸ்ட் 19ம் திகதி வரை உங்களுக்கு வெளிநாட்டிலிருந்து அனுப்பும் பணத்தினை எந்தவொரு சம்பத் பிரதிநிதி மூலமும் சம்பத் வங்கிக்கு பெற்றுக்கொடுத்து கை நிறைய பரிசுகளை வென்றிடுங்கள்.

- **இறுதி சீட்டிழுப்பில் ஒரு மில்லியன் ரூபா**
  **500,000 ரூபா** வெற்றியாளர் மற்றும் **100,000 ரூபா** வெற்றியாளர்கள் 5
  2012 ஜூலை 17 முதல் ஆகஸ்ட் 19 வரையான கொடுக்கல் வாங்கல் செல்லுபடியாகும்
- **தினமும் 15,000 ரூபா வீதம் 02 வெற்றியாளர்கள்**
  2012 ஆகஸ்ட் 1 முதல் 18 வரையான தினமும் செய்யும் கொடுக்கல் வாங்கல் செல்லுபடியாகும்

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் 0773 933 833

வெற்றியாளர்களுக்கான முதல் குலுக்கல் ஆகஸ்ட் 9ம் திகதி மற்றும் இறதிக்குலுக்கல் ஆகஸ்ட் 21ம் திகதி நடைபெறும்

e Sampath remittance service
රෙමිටන්ස් සේවාව ரெமிட்டன்ஸ் சேவை

அக்கரையின் அன்பு உடனேயே இக்கரைக்கு

நிபந்தனைகளுக்கு உட்பட்டது

www.sampath.lk

சம்பத்

සම්පත් බැංකුව
சம்பத் வங்கி
SampathBank

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துரோகத்துக்கு ஆலோசனை!

• சந்திரசேகர ஆசாத்

❛ இன்று தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் படுமோசமான பின்னடைவை எட்டியுள்ள நிலையில் போர் முடிவடைந்த பின்பு குடியேற்றங்கள் மூலம் இன அடையாளங்களைச் சிதைத்து இன அழிப்பு நடத்தும் கைங்கரியம் தீவிரமாக ஆரம்பிக்கப்பட்டு விட்டது. ❜

'பைத்தியக்காரன் பத்தும் சொல்வான் போகட்டும் விட்டுவிடு' என ஒரு சினிமாப்பாடலின் வரிகள் உண்டு. அதாவது பைத்தியக்காரன் சொல்பவை பொருட்படுத்தப்பட வேண்டியவை அல்ல என்பதே அதன் அர்த்தமாகும்.

ஆனால், பைத்தியக்காரன் சொல்பவற்றில் ஒன்றிரண்டு ஊரையே எரிக்கும் வலிமை பெற்றவையாக இருந்தால் அவற்றைப் பொருட்படுத்தாமல் இருந்து விட முடியுமா?

இந்திய அரசியலில் ஒரு கோமாளி என வர்ணிக்கப்படும் ஜனதாக் கட்சித் தலைவர் திரு.சுப்பிரமணிய சுவாமி அடிக்கடி தமிழ்மக்கள் விரோதக் கருத்துக்களை வெளியிட்டு வருவதுண்டு. அவர் வெளியிடும் நச்சுக் கருத்துக்களை இந்திய அரசியல்வாதிகள் பெரிதாக எடுத்துக்கொள்ளாமல், 'போகட்டும் விட்டு விடு' என்ற பாணியில் விட்டுவிடுவது உண்டு.



ஆனால், அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற சர்வதேச பாதுகாப்பு மாநாட்டில் அவர் உரையாற்றும் போது வெளியிட்ட கருத்துகளை உளறல் என ஒதுக்கி விட முடியாது. ஒரு சர்வதேசப் பாதுகாப்பு மாநாட்டில் இராணுவத்துடனோ அல்லது படை நடவடிக்கைகளுடனோ தொடர்பு அற்ற அவர் ஏன் பங்குகொள்ள அழைக்கப்பட்டார் என்பதற்கான பதிலில் சில உள்நோக்கங்கள் புதைந் திருக்கும்.

அதேவேளையில், அவர் உரையாற்றிய போது ஒரு இராணுவ நடவடிக்கையை விடப்பயனுள்ள திட்டத்திற்கு அவர் வழங்கிய ஆலோசனை அந்த உள்நோக்கத்தை அம்பலப்படுத்தி விட்டது.

சிங்கள மக்களைத் தமிழ்ப் பிரதேசங்களிலும், தமிழ் மக்களை சிங்களப் பிரதேசங்களிலும் குடியேற்றுவதன் மூலம் தமிழ், சிங்கள மக்கள் மத்தியிலான நல்லிணக்கத்தை உருவாக்க முடியும் என அங்கு அவர் கருத்து வெளியிட்டிருந்தார். இந்த மாநாட்டை ஏற்பாடு செய்திருந்த பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச அவர்களுக்கும் இலங்கை அரசுக்கும் இக் கருத்துக்கள் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருக்கும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. ஏனெனில் 1950ம் ஆண்டு தொடக்கம் இலங்கையின் ஆட்சியாளர்களால் தமிழ் பகுதிகளில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும் சிங்களக் குடியேற்றங்கள் போர் முடிந்த பின்பு பெரும் எடுப்பிலும், வேகமாகவும் இன்றைய அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சிங்களப் பகுதிகளில் தற்சமயம் தமிழர்கள் குடியேற்றப்படாவிட்டாலும், அதன் மூலம் குடியேற்றப்படும் தமிழ் மக்களின் இனத்தனித்துவத்தைச் சிதைத்து விடலாம் என்பதை இன்றைய ஆட்சியாளர்கள் அறிவார்கள்.

எனவே தான், திரு.சுப்பிரமணியசுவாமி ஒரு இராணுவத் தொடர்பு அற்றவராக இருந்த போதிலும் அவர் சர்வதேசப் பாதுகாப்பு மாநாட்டில் உரையாற்ற அழைக்கப்பட்ட காரணம் தெளிவுபடுத்தப்படுகிறது. மேலும் போர் வெற்றியின் அனுபவங்களைப்பகிர்ந்து கொள்வது மாநாட்டின் நோக்கம் என்று கூறப்பட்ட போதிலும் அதற்கும் அப்பால் ஒரு தமிழரின் வாயால் சர்வதேச சமூகத்தின் முன் இலங்கை அரசின் தமிழ் மக்கள் விரோத நடவடிக்கையை நியாயப்படுத்தும் சதியும் நிறைவேற்றப்பட்டுள்ளது. அடிப்படையில் தேசிய நல்லிணக்கம் என்ற பேரில் தமிழ் இனத்தையே அழிக்க முயலும் ஒரு முன்னோடியாக திரு.சுப்பிரமணிய சுவாமி இன்று தன்னை நிலை நிறுத்தியுள்ளார்.

ஐரோப்பியரின் குடியேற்றங்கள் மூலம் தொன்று தொட்டு நாகரீகம் மிக்க இனங்களாக இருந்த பல பழங்குடிகள் இருந்த இடமே தெரியாமல் அழிக்கப்பட்டதை நாமறிவோம்.

அவுஸ்ரேலியா இன்று முழுமையிலும் வெள்ளையரின் நாடாகி விட்டது. காலம் காலமாக அங்கு வளமுடன் வாழ்ந்து வந்த பழங்குடியினர் வகைதொகையின்றி வெள்ளையரால் அழிக்கப்பட்டனர். அவர்களின் வளமான பூமி கைப்பற்றப்பட்டு பெரும் பண்ணைகளாகவும், கனிமவளங்கள் கொள்ளையின் அரங்கங்களாகவும் மாற்றப்பட்டன. அவர்களில் எஞ்சிய பழங்குடியினர் அவர்களின் தாயகப் பூமியிலேயே அடிமைகளாக்கப்பட்டுக் கடுமையாக வேலை வாங்கப்பட்டனர். இன்றும் கூட அந்த மக்கள் முன்னேற்றமடையாத கூலி உழைப்பாளிகளாக வறுமையில் வாட, குடியேறிய வெள்ளையர்கள் எஜமானர்களாகப் பவனி வருகின்றனர்.

இந்தியாவுக்கு புதிய கப்பல் மார்க்கத்தைத் தேடிப் போன கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டு பிடித்தார். அவர் இறங்கிய போது மாயா, இன்கா ஆகிய பழங்குடியினர் மிகவும் செல்வச் செழிப்புடன் வாழ்ந்து வந்தனர். அவர்கள் கணிதம், வானசாஸ்திரம் போன்ற துறைகளில் மிகவும் முன்னேறிய இனமாக நாகரீகமடைந்திருந்தனர். கொலம்பஸ்ஸைத் தொடர்ந்து அங்கு சென்ற ஸ்பெயின், போர்த்துக்கல், பிரிட்டன், பிரான்ஸ் போன்ற ஐரோப்பிய நாட்டினர் அப்பழங்குடியினரைக் கொன்று குவித்தனர். முழு அமெரிக்காவும் பிரிட்டனின் அதிகாரத்துக்கே வந்தது. கொல்லப்பட்டவர்கள் போக எஞ்சிய செவ்விந்தியர்கள் இனக்கலப்பு மூலம் ஐரோப்பியர்களால் குறைக்கப்பட்டு தங்கள் உயரிய இன அடையாளங்களை இழந்தனர். இன்று அமெரிக்கா ஆங்கிலம் பேசும் வெள்ளையர்களின் நாடாக மாறி விட்டது.

இவ்வாறு பல நாடுகளில் ஐரோப்பிய குடியேற்றங்கள் மூலம் அந்த நாட்டின் சொந்த இனங்கள் அடையாளமே இன்றி அழிக்கப்பட்டு விட்டன.

இன்றும் கூட, இரண்டாம் உலகப் போரின் போது பாலஸ்தீன மண்ணில் மேற்கொள்ளப்பட்ட குடியேற்றங்களும் 1948ல் பாலஸ்தீனத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்புப் போரும் அரபு மக்களைத் அவர்களின் தாயக பூமியிலிருந்து விரட்டி இஸ்ரேல் என்ற ஒரு புதிய தேசத்தை உருவாக்கின. எஞ்சியிருக்கும் பாலஸ்தீனத்தின் மேற்குக்கரை, ஜெருசலம் போன்ற பகுதிகளும் குடியேற்றங்கள் மூலம் தொடர்ந்து ஆக்கிரமிக்கப்பட்டு வருகிறது.

இப்படியாகக் குடியேற்றங்களை அடிப்படையாகக் கொண்டு நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டதும், இனங்கள் அழிக்கப்பட்டதும் வரலாறு முழுவதுமே பதிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறே இலங்கையை பௌத்த சிங்கள மயப்படுத்தும் முன்னெடுப்புக்கான தத்துவார்த்தக் கோட்பாடுகள் 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே அநகாரிக தர்மபாலவினால் ஆரம்பிக்கப்பட்டு விட்டன. அதன் ஒரு பகுதியாகவே இலங்கை சுதந்திரம் பெற்ற கையோடேயே 1948ல் மலையகத் தமிழ் மக்களின் பிரஜாவுரிமை பறிக்கப்பட்டது.

ஆனால், குடியேற்றங்கள் மூலமான ஆக்கிரமிப்பு என்பது 1950ல் டி.எஸ். சேனநாயக்க அவர்களினாலேயே ஆரம்பிக்கப்பட்டது. கல்லோயாவில் மேற்கொள்ளப்பட்ட இது ஒரு கண்துடைப்பாக இன விகிதாசார அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டது. ஆனால் மோதல்கள், முரண்பாடுகள், இனக் கலவரங்கள் என்பன காரணமாக இங்கு குடியேற்றப்பட்ட தமிழ் மக்கள் முற்றாகவே விரட்டப்பட்டு விட்டதைத் தொடர்ந்து அம்பாறை, கந்தளாய், சேருவில, மணலாறு எனத் தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்த நிலப்பகுதிகள் குடியேற்றங்கள் மூலம் அபகரிக்கப்பட்டு சிங்கள மயப்படுத்தப்பட்டு விட்டன. இலங்கை சுதந்திரம் பெற்றபோது கிழக்கு மாகாணத்தில் 4 வீதமாக இருந்த சிங்களவர்கள் தொகை இப்போ 36 வீதமாகி விட்டது.

எனினும், இக்குடியேற்றங்கள் மூலம் நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு தமிழ் மக்களின் இன விகிதாசாரம் குறைக்கப்பட்டாலும் கூட இனக்கலப்பின் மூலமாக தமிழ் இன அடையாளங்களைச் சிதைக்கும் இன அழிப்பு நடவடிக்கையில் வெற்றி பெற முடியவில்லை. அது இலங்கையைச் சிங்கள பௌத்த மயப்படுத்தும் ஒரு முக்கிய வழிமுறையாகும்.

இன்று தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் படுமோசமான பின்னடைவை எட்டியுள்ள நிலையில் போர் முடிவடைந்த பின்பு குடியேற்றங்கள் மூலம் இன அடையாளங்களைச் சிதைத்து இன அழிப்பு நடத்தும் கைங்கரியம் தீவிரமாக ஆரம்பிக்கப்பட்டு விட்டது.

தற்சமயம் இராணுவக் குடியிருப்புக்கள், அபிவிருத்தித் திட்டங்கள் என்ற பெயரில் தமிழ் மக்கள் வாழும் பகுதிகளின் மையத்தில் சிங்களக் குடியேற்றங்கள் அமைக்கப்படுகின்றன. இவை படையினரின் அனுசரணையுடன் அரசின் உதவிகளுடனும் நாலு பக்கங்களாலும் விரிவடையச் சாத்தியம் உண்டு. அவர்களின் பெரும்பான்மை பலம் காரணமாக, சுற்றிவர உள்ள தமிழ் மக்கள் மேல் செலுத்தப்படும் மேலாதிக்கம் மூலமாக, அவர்களின் கலாசாரங்கள், மத வழிபாட்டு முறைகள், மொழி என்பன திணிக்கப்படும் என்பதை எவரும் மறுத்து விடமுடியாது. இப்போதும் ஒரு பௌத்தன் கூட வாழாத தமிழ்ப் பகுதிகளெங்கும் புத்தர் சிலைகள் நிறுவப்படுவதை நாம் அவதானிக்க முடியும்.

அதேவேளையில், சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் தமிழ் மக்களைக் குடியேற்றினால் வரும் ஆபத்தும் ஒருவித இன அழிப்பே. உதாரணமாக நீர்கொழும்பில் உள்ள தமிழர்கள் இன்று தமிழ் தெரியாத, சிங்களம் பேசும் தமிழர்களாக மாறிவிட்டனர். அவர்களின் ஆடைகள் முதற்கொண்டு அடிப்படைக் கலாச்சாரமே மாறி விட்டது. இதுவும் ஒரு இனச்சிதைப்பின் ஒரு வடிவம் தான். புத்தளத்தின் ஒரு பகுதியிலும் அம்பாறையில் சில இடங்களிலும் இதே நிலைமையைக் காண முடியும்.

அடிப்படையில் சிங்களவரைத் தமிழர்கள் வாழும் இடங்களில் குடியேற்றுவதும், தமிழர்களைச் சிங்களவர் வாழும் இடங்களில் குடியேற்றுவதும், சிறுபான்மை மக்களைப் பெரும்பான்மை இனத்துக்குள் கரைத்து இலங்கையைச் சிங்கள பௌத்த மயப்படுத்தும் ஒரு நீண்டகால முயற்சியாகும். இது தொடர்பாகத் தமிழ் மக்கள் மிகமிக விழிப்பாக இருக்க வேண்டியது அவசியமாகும்.

சுப்பிரமணிய சுவாமி போன்றவர்கள் இத்தகைய இன அழிப்பு நடவடிக்கைகளுக்குத் துணைபோகும் நயவஞ்சகத்தையே தேசிய நல்லிணக்கம் என்ற பேரில் மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழர் தமிழராகவும், சிங்களவர் சிங்களவராகவும் ஒருவரின் உரிமைகளில் ஒருவர் கைவைக்காமல் வாழும் போது இயல்பாகவே தேசிய நல்லிணக்கம் உருவாகும் என்பதே உண்மையாகும்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாட்சி நடக்கின்றதா?

நாட்டின் இறையாண்மையைப் பாதுகாப்பது, நாட்டிலுள்ள அனைத்து சமூகங்களின் மத்தியில் கௌரவமான நடத்தையுடைய ஒற்றுமையைப் பாதுகாப்பது, அத்துடன் நாட்டு மக்கள் அனைவரும் மகிழ்ச்சியுடனும், வசதிகளுடனும் வாழ்வதற்குச் சுலபமான வழிவகைகளை ஐயத்திற்கிடமின்றி ஏற்படுத்திக் கொடுப்பது. நாட்டின் விவகாரங்களை நேர்மையுடனும் நெறி முறை தவறாத இயல்பு கொண்ட நடுநிலைமையுடனும் நடப்பதை ஐயத்திற்கிடமின்றி உறுதி செய்வது போன்றவை ஓர் நடுநிலைமையான, நியாயமான, பொறுப்புடைய அரசாங்கத்தின் முதன்மையான அடிப்படைப் பொறுப்பாகும்.

இந் நோக்கத்திற்காக அரசாங்கம் சில குறிப்பிட்ட பிரமாணங்களைத் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். நாட்டில் முழுமையானதும், நிலையானதுமான சமாதானம் நிலவ வேண்டும். நல்லாட்சி, மற்றும் சட்டம், ஒழுங்கு என்பன நிலையான உறுதித் தன்மையுடன் பேணப்படல் வேண்டும். நாட்டின் அபிவிருத்தி மற்றும் மூல வளங்கள் பேணப்பட வேண்டும். அத்துடன் அரசாங்கம் நாட்டு மக்களின் தொழில் வாய்ப்பு, பொருளாதார முன்னேற்றம் மற்றும் மக்களின் பொது நலன்கள் போன்றவற்றிற்கான சாதகமான நிலைமைகளை உருவாக்குதல் வேண்டும்.

பெரும்பாலும் மூன்று தசாப்தங்களாக நாட்டில் இரத்தம் சிந்த வைத்த நீண்ட கால யுத்தத்தினை ஆயுதப்படைகளின் அர்ப்பணிப்பு மற்றும் முயற்சியினால் அரசாங்கம் முடிவுக்கு கொண்டு வந்ததையால் சமாதானத்தின் முதற் குறிக்கோளினை வெற்றிகரமாக ஈட்டிக் கொண்டது.

இக்கடும் முயற்சியில் ஈடுபட்டதன் காரணமாக நல்லதற்கோ அன்றிக் கெட்டதற்கோ அரசாங்கம் மக்கள் மத்தியில் சாதனையாளராகி விட்டது. மக்களும் ஆளும் தரப்பிற்கே தமது நன்றியுணர்வை வெளிப்படுத்தினார்கள். நாட்டில் நீண்ட நிலையான சமாதானம், அபிவிருத்தி, மற்றும் வளங்கள் பொழியும் என நம்பினார்கள். போர் முடிவுற்றதன் பின்னரான இந்த மூன்று வருடங்களுக்குள் மக்கள் பெருமளவில் எதிர்பார்ப்புகளைக் கொண்டிருந்தனர். ஆனால் ஐயகோ! அரசாங்கம் மக்களின் நலனுக்கான அத்தியாவசிய தேவைகளை அலட்சியப்படுத்துவதின் மூலம் மக்களின் நம்பிக்கையை இழந்து விட்டனர். அத்துடன் மக்களின் அபிலாசைகளைச் சந்திப்பதிலும் தவறி விட்டனர்.

தமது அபிலாசைகள் கைகூடாத நிலையில் விரக்தியடைந்து சலிப்படைந்த மக்கள் அதற்கு வடிகாலாகச் சந்தர்ப்பம் வாய்க்கும் போதிலெல்லாம் அவை குறித்து அரசுக்கெதிராகக் குரலெழுப்புகின்றனர். அவர்கள் நாட்டில் நல்லாட்சி நடக்கின்றதென்பதையும் அத்துடன் மக்களை முன்னேற்றுவதற்கான சரியான பாதையில்தான் அரசாங்கம் பயணிக்கின்றதென்பதையும் மனநிறைவுடன் ஏற்றுக் கொள்ள முடியாத நிலையிலுள்ளனர்.

நாட்டில் சட்டம் ஒழுங்குகளின் நிலைமைகள் மக்களுக்குத் திருப்தியளிப்பதாக இல்லை. நியாயமற்ற கைதுகளும், சட்டபூர்வமற்ற வகையிலான தடுத்து வைத்தல்களும், மற்றும் அரசியல் மாற்றுக் கருத்தாளர்கள், காணாமற் போதல்கள் என்பன அன்றாடம் இடம் பெற்ற வண்ணமுள்ளன. சட்டத்தை நடைமுறைப்படுத்துபவர்களால் கொள்ளையர்களை, கற்பழிப்பவர்களை, கொலையாளிகளை மற்றும் ஆட்கடத்தல்காரர்களைக் கைது செய்ய இயலாமல் உள்ளது. அத்தகையவர்களை மக்களாகவே பிடித்து அவர்களிடம் ஒப்படைத்தாலும் அதிகாரிகளால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எதுவும் எடுக்கப்படுவதில்லை.

இவை யாவும், அரசாங்கம் இவ்வாறான சட்டத்தை மீறுபவர்களுடன் பின்புலத் தொடர்புகளைக் கொண்டுள்ளனரோ என்று மக்களே மக்கள் கொண்டுள்ள ஐயப்பாட்டிற்கு உரமேற்றுபவையாகவே உள்ளன.

சட்டமும், விதிகளும் அவற்றினைப் பேணிப் பாதுகாக்கப்படல் வேண்டும் எனக் கருதப்படுபவர்களாலேயே அலட்சியப்படுத்தப்பட்டும், புறக்கணிக்கப்பட்டும் அப்பட்டமாக மீறப்படுகின்றன.

காவல்துறையினர் தாங்களாகவே தங்களுக்குள் சட்டத்தை நடைமுறைப்படுத்துபவர்களாக மாறிவிட்டனர். அரசாங்கம் நியமித்த சுயாதீன ஆணைக் குழுக்களின் பணிகளுக்குள் தலையீடுகளை மேற்கொள்வதன் மூலமாக நீதியின் நடைமுறைகளை மறைமுகமாக ஒழித்துக்கட்டும் முயற்சியில் ஈடுபட்டு வருவதை காண முடிகின்றது.

நியாயபூர்வமானதும் அத்துடன் ஏற்புடையதுமான ஓர் அரசாங்கம் இலங்கையில் இருப்பதாகத் தெரியவில்லை.

உணவுப் பொருட்கள் போன்ற வாழ்க்கைக்கு அத்தியாவசியமான தேவைகளின் விலைகள் ஏணிப்படி போல் உயர்ந்து ஒரு சராசரிப் பொது மகனால் வாழ்க்கைச் செலவினத்தைத் தாங்க இயலாதுள்ளது. உண்மையில் பெரும்பாலான மக்களுக்கு அன்றாட ஜீவனமே பெரும் சவாலாக உள்ளது.

முற்றிலும் மாறுபட்ட விதத்தில், பொதுவில் அறுவடைக் காலத்தில் தேவைக்கு அதிகமாக அரிசி சந்தையில் புழக்கத்தில் உள்ள நிலைமைகளிலும் கூட மக்களின் பிரதான உணவான அரிசி மலிந்த விலையில் மக்களுக்குக் கிடைப்பதில்லை. அதேபோன்று விவசாயிகளும் தமது உற்பத்திகளுக்கான சந்தைப்படுத்தும் வாய்ப்புகளின்மையால் தங்களது உழைப்பின் பயனைப் போதிய அளவில் அடைய முடிவதில்லை.

அரசின் திறைசேரிகளை நிரப்புவதற்காக வரிச்சுமைகளை மக்கள் மீது சுமத்தியதன் பயனாக மின்சார சேவை, நீர்வழங்கல் மற்றும் சமையல் எரிவாயு என்பவற்றின் கட்டணங்களும், விலைகளும் மட்டுமீறிய வகையில் உயர்ந்துள்ளன. இதன் நிமித்தம் பாதிக்கப்பட்டவர்கள் அப்பாவிப் பொதுமக்களே. இவ்வாறான அத்தியாவசிய சேவைகள் யாவும் எமது அண்டை நாடுகளில் கூட மலிவான செலவிலேயே மக்களுக்கு வழங்கப்படுகின்றன.

கடந்த காலங்களில் அரசாங்கத் திறைசேரிக்கு பெருமளவில் பணத்தை வழங்கி உதவிய பெற்றோலியக் கூட்டுத்தாபனம், மின்சார சபை, துறைமுகக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய கூட்டுத்தாபனங்கள் பலவும் இன்று பாரிய நட்டங்களுக்குள்ளாகியதன் பின்விளைவாகச் சுமைகள் யாவும் நாட்டுமக்களின் தலைகள் மீது விழுந்துள்ளன.

எவ்வளவுதான், வரிகளை மக்களிடம் அறவிட்ட போதிலும் அதுவும்



அரசின் திறைசேரிகளை நிரப்புவதற்காக வரிச்சுமைகளை மக்கள் மீது சுமத்தியதன் பயனாக மின்சார சேவை, நீர்வழங்கல் மற்றும் சமையல் எரிவாயு என்பவற்றின் கட்டணங்களும், விலைகளும் மட்டுமீறிய வகையில் உயர்ந்துள்ளன. இதன் நிமித்தம் பாதிக்கப்பட்டவர்கள் அப்பாவிப் பொது மக்களே . இவ்வாறான அத்தியாவசிய சேவைகள் யாவும் எமது அண்டை நாடுகளில் கூட மலிவான செலவிலேயே மக்களுக்கு வழங்கப்படுகின்றன.

போதாதெனில் அரசாங்கம் நம்பத்தகாத விதத்தில் மட்டுமீறிய அளவில் வீண்விரயமாகும் வழிகளில் பணத்தைச் செலவிடுகின்றதென்பதே உண்மையாகும்.

அதிகாரம் வாய்ந்த பதவிகளை நிரப்பிக் கொண்டிருப்பவர்களினால் பெருமளவில் நிதிமோசடிகளும், வீண்விரயங்களும் இடம்பெறுவதாக நாளுக்குநாள் வெளிவந்து கொண்டிருக்கும் பத்திரிகைச் செய்திகளின் மூலமாக அறியக் கூடியதாக உள்ளது.

நொடிந்த நிலையில் அமைப்புகளின் பங்குகளை ஊழியர் சேமலாப நிதியம், தேசிய சேமிப்பு வங்கி மற்றும் இன்னும் பல அரசாங்க அமைப்புகளுக்குச் சந்தை விலைக்கு மேலாக விற்பனை செய்யப்பட்டமையானது அவ்வமைப்புகளை நடத்துவதற்காக நியமிக்கப்பட்டவர்களின் உண்மைத் தன்மை மீது கேள்விக்குறியை ஏற்படுத்தியுள்ளது. அவ்விதமாகக் கொள்ளையடித்த பணத்தை செய்தவர்களும் நியமித்தவர்களும் பங்கிட்டுக் கொண்டனரா என்ற சந்தேகமும் எழுகிறது.

அரசாங்க வைத்தியசாலைகளில் நவீன சிகிச்சை உபகரணங்கள், அத்தியாவசிய மருந்து வகைகள், ஆய்வுகூடப் பரிசோதனைகள் என்பன இன்மையால் இலவச மருத்துவ சேவை முறைமையும் அலங்கோல நிலையில் உள்ளது. எனவே, நோயாளர்கள் தனியார் வைத்தியசாலைகளுக்குச் செல்ல உந்தப்படுகின்றனர்.

ஒரு சாதாரண நோய்க்கு தனியார் வைத்தியசாலையில் ஆலோசனை பெறுவதற்கும், மருந்துவகைகளுக்கும் ஆயிரக்கணக்கில் செலவிட வேண்டியுள்ளது. ஒரு சராசரிக் குடிமகனால் இதனைத் தாங்கிக் கொள்ள முடியுமா?

இலவசக் கல்வியும் கூட பல இடர்களின் மத்தியிலேயே உள்ளது. வசதி படைத்த செல்வந்தர்களினால் மட்டுமே அவர்களது பிள்ளைகளைப் படிக்க வைக்க இயலும் என்ற நிலைமையே நாட்டில் நிலவுகின்றது. ஏழைக் கிராமத்தவர்களின் பிள்ளைகளின் கல்வியென்பது கடினமானதொன்றாகவே உள்ளது. ஆட்சியாளர்கள் இலவசக் கல்வி என்பதன் உன்னத நோக்கங்களைப் பாழடித்துவிட்டனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் சற்றும் ஐயத்திற்கு இடமளிக்காத வகையில் ஒரு அமைச்சர் மூன்று நபர்களைக் கொண்ட ஒரு குடும்பம் மாதம் ரூபா 7500/- உடன் அவர்களது மாதாந்த ஜீவனத்தை ஓட்ட முடியும் எனக் கூறியிருந்தார். இது அவரது அறியாமையையும் அத்துடன் அரசாங்க அமைச்சர்கள் எவ்வளவு தூரம் நாட்டிலுள்ள கள யதார்த்தங் களுடனான தொடர்புகளை இழந்துவிட்டனர் என்பதை உறுதி செய்வதாகவே அமைகின்றது.

இவையாவும் ஒட்டு மொத்தத்தில், அரசாங்கம் நல்லாட்சி புரிவதிலும் அத்துடன் நாட்டு மக்களின் நலன்களுக்குச் சாதகமான நிலைமைகளை ஏற்படுத்திக் கொடுப்பதிலும் இருந்து எவ்வளவு தூரம் தவறிவிட்டதென்பதனையே சுட்டிக்காட்டுகின்றன. இந்நிலையில் ஆசியாவின் அதிசயமாக இலங்கை மாறுமா? மாற்றம் தொடர்பாக மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையும் தகர்ந்த வண்ணமேயுள்ளது.

*சண்டே லீடரில் நிகால் பெர்னாண்டோ எழுதிய கட்டுரை.*

**தமிழில் ஜஸ்ரின்**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுடர்ஒளி

22, ஓகஸ்ட் - 28 ஓகஸ்ட், 2012

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு–14. டெலிபோன்: 0115738005
பக்ஸ்: 0115817944 –5
E-mail: editorial@sudaroli.com


## நடுநிலையாளர் அனுமதிக்கப்படுவரா?

தீர்விற்கான நகர்வுகள் முடங்கிப்போயுள்ள நிலையில் இன்று ஒரு நடுநிலையாளரின் வகிபாகத் தேவை உணரப்படுகின்றது.

அண்மையில் இலங்கைக்கு வருகை தந்த தென்னாபிரிக்கக் குழுவினர் அரசாங்கத் தரப்பினருடனும், தமிழர்தரப்புடனும் கலந்துரையாடல்களை மேற்கொண்டனர். கலந்துரையாடப்பட்ட விடயங்களை முன்வைத்து, இனப்பிரச்சினைத் தீர்வு பற்றிய பேச்சுக்களில் நடுநிலை வகிக்கும் பங்கினை தென்னாபிரிக்கா மேற்கொள்ளலாம் என்பதாவ சில ஊகங்கள் ஊடகங்களில் வெளிவந்துள்ளன. ஆனால், அவ்வாறு ஏதுவும் இல்லை என அரசாங்கம் கூறியுள்ளது.

தென்னாபிரிக்க அனைத்துலக உறவுகளுக்கான பிரதி அமைச்சர் தலைமையிலான இக்குழுவினர் இலங்கையின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் அவர்களின் ஏற்பாட்டிலேயே இங்கு வந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை அரசாங்கத்தின் நல்லிணக்க முயற்சிகளுக்கு தென்னாபிரிக்கா உதவுவது குறித்து அரசாங்கத்துடனான பேச்சுக்களின் போது கலந்துரையாடப்பட்டதாகத் தெரிகின்றது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ச, தமிழ்தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், எதிர்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை இக்குழுவினர் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். தமிழ் தேசியக்கூட்டமைப்பை இக்குழுவினர் இரு தடவைகள் சந்தித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

போரின் பின்னரான காலகட்டத்தில் தென்னாபிரிக்கா தனது அனுபவங்களை இருதரப்பினருடன் பகிர்ந்து கொள்ளும் நோக்கிலேயே சந்திப்புக்களை நடத்தியதாகவும் எவ்வாறு இம்முயற்சி தொடரும் என்பது தெரியவில்லை எனவும் கூட்டமைப்பு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு தரப்பினரிடமும் பேச்சுக்களை நடத்தி தற்போது ஏற்பட்டுள்ள இறுக்கத்தைத் தளர்த்துவதற்கு தென்னாபிரிக்கக் குழுவினர் முயன்றாலும், அது மத்தியஸ்தம் என்ற வகையிலடங்காது. ஏனெனில், தமிழருக்கான தீர்வு தொடர்பில் எந்தவொரு வெளிநாட்டு அனுசரணையினையும் மகிந்த அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும் நிலையில் இல்லை.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் மூலமாகவே தீர்வுகள் குறித்து ஆராயப்படும் எனவும், எந்தவொரு நாட்டினதும் அனுசரணைகளோ ஆலோசனைகளோ தேவையில்லை எனவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச உறுதியாகவே தெரிவித்துள்ளார்.

தமிழர் பிரச்சினைக்கு நியாயமானதொரு தீர்வுத் திட்ட வரைவோ, பேச்சுவார்த்தைகளை எங்கிருந்து தொடங்குவது என்பது குறித்த நிகழ்ச்சிநிரலோ கூட தற்போது அரசாங்கத்திடமில்லை. காலம் கடத்துவதற்கான திட்டங்களும் நிகழ்ச்சிநிரலுமே உள்ளன.

வெளிநாட்டு ஆலோசனைகள், அனுசரணைகள் இந்த நிகழ்ச்சிநிரலைப் பாதிக்குமென்பதால் அரசாங்கம் இவ்வாறானதொரு தலையீட்டை நிச்சயம் விரும்பாது. ஆனால், தென்னாபிரிக்கா போன்ற நாடுகளினூடாக தமிழ் தேசியக்கூட்டமைப்பை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிற்கு வரச் செய்வதற்கான சில நகர்வுகளை அரசாங்கம் மேற்கொள்ளலாம்.

இக்குழுவினரின் வருகை இலங்கையின் வெளியுறவு அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததும், தமிழ் தேசியக் கூட்டமைப்பை அவர்கள் இருதடவைகள் சந்தித்திருப்பதும் இவ்வாறானதொரு ஊகம் வெளிப்படக் காரணமாகின்றது.

போர் கடுமையாக நடைபெற்றுக்கொண்டிருந்த காலங்களில் அதிலிருந்து தப்பிக்கொள்வதற்காகவோ அல்லது அடுத்த கட்டத்திற்கான தயார்படுத்தல்களுக்காகவோ தான் பேச்சுவார்த்தைகள், வெளிநாட்டு மத்தியஸ்தம் எல்லாம் தேவைப்பட்டது.

இப்போது போர் இல்லை. பேச்சுக்களும் இல்லை. அரசாங்கம் நினைத்தால் எதனையும் செய்யலாம் என்கிற நிலையே மேலோங்கிக் காணப்படுகின்றது. அதனால், தமிழர் பிரச்சினைத் தீர்வில் எந்தவொரு நடுநிலையாளர் பாத்திரத்தையும் இலங்கை அரசாங்கம் அனுமதிக்கப்போவதில்லை.

# வற்றிப் போகும் வடபகுதிக் குளங்கள்



— ரிஷிகேசன்

நீர் வளம்மிக்க ஆறுகளையும் குளங்களையும் தன்னகத்தே கொண்ட இயற்கை எழில் நிறைந்த நாடுதான் இலங்கைத் தீவு. அதிலும் குறிப்பாக கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னிப் பெருநிலப் பரப்பு குளங்களுக்கு பெயர் போன இடமாக விளங்குகின்றது. வன்னிப் பகுதியில் மேற்கொள்ளப்படுகின்ற நெற்செய்கைகள் மற்றும் தானியப் பயிர்ச் செய்கைகள் என்பவற்றிற்கு குறித்த குளங்களின் நீர்வளம் பெரும் பங்கு வகிக்கின்றது. கோடைக் காலங்களில் சில சமயங்களில் மழை பெய்யாது கடும் வரட்சி நிலவுகின்ற பட்சத்தில் குளங்களில் நீர் வற்றி விடுவதால் நெல் வயல்களுக்கும் தானியப் பயிர்செய்கைக்கும் போதியளவு நீர் கிடைக்காதவிடத்து பயிர்கள் கருகிப் போகின்ற துர்ப்பாக்கிய சூழ்நிலை ஏற்படுகின்றது. இதனால் விவசாயிகள் அதிக தொகையான முதலீட்டு இழப்புக்களைச் சந்திக்க நேரிடுகின்றது. எனவே, வடபகுதியில் அமையப் பெற்றுள்ள குளங்களை புனரமைத்து மாரிகாலங்களில் பெய்யும் மழைநீரை உரிய முறையில் தேக்கி வைத்து கோடைகாலங்களில் சிறுபோகப் பயிர்ச்செய்கைகளுக்கு வழங்குவதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை இது வரையிலும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை. இந்த விடயத்தில் நீர்ப்பாசனத் திணைக்களத்தினரும் அரசாங்கத்திற்கு போதிய வலியுறுத்தல்களைப் பிரயோகிப்பதற்கு தவறிவிட்டனர்.

தற்போது நாட்டில் நிலவும் கடும் வரட்சி நிலை காரணமாக இரணைமடுக் குளம் உள்ளிட்ட வடக்கில் அநேகமான குளங்களில் நீர் வற்றிய நிலையே காணப்படுகின்றது. இதனால் கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடுக் குளத்தை நம்பி மேற்கொள்ளப்பட்ட சிறுபோக நெற்செய்கைகள் கருகிப் போய்விட்டதாகத் தெரிய வருகிறது. இதன்விளைவாக விவசாயிகள் பொருளாதார ரீதியில் பெரும் பாதிப்புக்களைச் சந்தித்துள்ளனர். அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஏற்றுமதிப் பயிர்ச்செய்கைத் திட்டத்தில் வன்னி மாவட்டமும் உள்ளடங்குகின்றது. இறக்கமைவாக வன்னியில் பெருமளவு ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயிகள் சிறுபோக நெற்செய்கையினை மேற்கொண்டிருந்தனர். இந்த நிலையில் கோடைகாலத்தில் மழை முற்றாகவே பெய்யாது விட்டதால் அநேகமான நெல்வயல்கள் கருகிவிட்டன. எனவே குறித்த விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்குவதற்கும் எஞ்சியுள்ள பயிர்களை பாதுகாப்பதற்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் அவர்கள் வேண்டுகோள் விடுத்து விவசாயத்துறை அமைச்சருக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பியிருந்தார்.

இலங்கையில் இடம்பெற்று வந்த ஆயுதப் போர் முடிவுக்கு வந்ததையடுத்து யுத்தத்தால் கடுமையாகப் பாதிப்புற்ற வடக்கு - கிழக்கு பகுதிகள் துரித அபிவிருத்தி கண்டு வருகின்றது என்று மார்தட்டுகின்ற அரசு வடக்கில் வற்றிப் போயுள்ள குளங்களை கண்டு கொண்டதாகத் தெரியவில்லை. இது இவ்வாறிருக்க இரணைமடுக் குளத்து நீரை யாழ்குடாநாட்டிற்கு விநியோகிக்கப் போவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களும் அமைச்சர்களும் பல தடவைகள் பகிரங்கமாகவே அறிவித்திருந்தார்கள். ஆனால் அது சாத்தியப்படாத காரியம் என்பதை வடக்கு தமிழ்மக்கள் விளங்காமல் இல்லை. ஏனெனில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள நெல்வயல்களுக்கும் தானியப் பயிர்களுக்கும் கோடைகாலங்களில் கிளிநொச்சி மாவட்டத்திலேயே அமையப் பெற்றுள்ள இரணைமடுக் குளத்திலிருந்து நீர் வழங்க முடியாத சூழ்நிலை ஏற்படுவதுண்டு. இந்த நிலையில் இரணைமடுக் குளத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு நீர் வழங்கும் அரசின் திட்டம் சாத்தியப்படுமா என்பதுதான் மக்கள் மத்தியில் எழுந்துள்ள கேள்வியாகும். விவசாயத்துறை அமைச்சும் வரட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் விடயத்திலும் நீர் வற்றிப் போயுள்ள குளங்களை புனரமைக்கும் விடயத்திலும் இது வரையில் அக்கறை காட்டியதாகத் தெரியவில்லை. புனர்நிர்மாணப் பணிகளில் வடபகுதிக் குளங்கள் புறக்கணிக்கப்பட்டிருப்பது அரசின் திட்டமிட்ட செயலாக இருக்கலாம் என்ற சந்தேகமும் மக்கள் மத்தியில் எழாமல் இல்லை. ஆகவே, வடபகுதியில் அமையப் பெற்றுள்ள நீர்த்தேக்கங்களை புனரமைத்து மாரிகாலத்து மழைநீரை உரிய முறையில் தேக்கி வைத்து விவசாயத்தை விருத்தி செய்து விவசாயத்திற்கு குறித்த நீர்த்தேக்கங்களிலிருந்து நீரைக் கிரமமாக வழங்குவதன் மூலம் அதிகூடிய தன்னிறைவுப் பொருளாதார வருமானத்தை வன்னியில் ஈட்டமுடியும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

மாரிகாலங்களில் பெய்யும் மழைநீரைத் தேக்கி வைப்பதற்கு ஏற்ற வழிவகைகள் இன்மையால் அது கடலைச் சென்றடைவதை அவதானிக்க முடிகிறது. இந்த விடயத்தில் நீர்ப்பாசனத் திணைக்களமும் விவசாயத்துறை அமைச்சும் அதீத பிரயத்தனம் எடுத்து வடபகுதி குளங்களை புனரமைத்து மழைநீரை போதியளவு தேக்கி வைத்து கோடைகாலங்களில் சிறுபோக நெற்செய்கைக்கும் தானியப் பயிர்ச் செய்கைக்கும் உரிய முறையில் நீர் வழங்குவதன் நிமித்தம் வரட்சிக் காலங்களில் விவசாயிகளுக்கு ஏற்படுகின்ற வீழ்ச்சியினை தவிர்த்துக் கொள்ள முடியும். இந்தவிடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அரசாங்கத்திற்கு அழுத்தங்களை பிரயோகிக்கின்ற பட்சத்தில் சாதகமான சமிக்ஞைகள் அரசாங்கத்திடமிருந்து வெளிப்படலாம் என்ற எதிர்பார்ப்பும் மக்கள் மத்தியில் நிலவுகின்றது. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவுப்பகுதி

# ஜீ.ஜீ.

# மேதமையின் இன்னொரு பெயர்



● எஸ்.தியாகராஜா

'ட்ரையல் அட் பார்' வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் 1976 யூலை 12ந் திகதி ஆரம்பமானது. 76 வயதாயிருந்த பொன்னம்பலம் அப்போது நோய்வாய்ப்பட்டிருந்தார். அவரது சகவழக்கறிஞராக விளங்கிய ஏ.எச்.சி.டி.சில்வா க்யூ.சி. பொன்னம்பலம் அவர்களை 'ட்ரையல் அட் பார்' வழக்கில் பிரயாசை எடுத்துக்கொள்ள வேண்டாமெனத் தான் அவருக்கு ஆலோசனை கூறியதாக அவர் மரணமானதின் பின் சொன்னார்.

கிட்டத்தட்ட இறந்து விட்டார் என எண்ணுமளவுக்கு கடுமையான ஒரு சுகவீனத்திற்கு அவர் ஆளாகியிருந்தார் என்ற உண்மை தொடர்பில் அவர் மீது கரிசனை கொண்டவனாய் "ட்ரையல் அட்பார்" வழக்கில் அவர் தனது விடயத்தை எடுத்து வாதிடுவதால் ஏற்படும் அழுத்தம் அவருக்கு ஆபத்தாகும் என உணர்ந்து அவ் வழக்கில் முன்னிலை வகித்துத் தடுப்பாவது பாகத்தை ஆற்றாது ஆலோசனை வழங்கும் பாகத்தை மட்டும் ஏற்று சட்டம் சம்பந்தப்பட்ட முக்கிய விடயங்களைத் தொடுத்து வாதாடுவதை வேறொரு வழக்கறிஞருக்கு விடலாம் தானே என்று கூறி அவரைத் (பொன்னம் பலத்தை) தடுப்பதற்கு நான் எவ்வளவோ முயற்சி செய்தேன் என சில்வா தெரிவித்திருந்தார்.

பலநாட்கள் நீடிக்கக் கூடிய இவ்விவாதம் அவருக்குப் பாரதூரமான அழுத்தத்தை ஏற்படுத்தும் எனவும் நான் உணர்ந்தேன். ஆனால் அவரோ தான் இவ்வழக்கை ஏற்கனவே பாரமெடுத்து விட்டதால் அதை ஏற்று நடத்தியே ஆகவேண்டுமெனக் கூறி அவ்வாறே செய்தார். அநேக நாட்கள் பிடித்த அவரது முயற்சி அவரது உடல் நலத்தை மோசமாகப் பாதித்திருக்குமென்பதில் சந்தேகமில்லை. மரண வாசல் வரை சென்றுவிட்டு வந்த ஒருவரின் அதிசயிக்கத்தக்க ஒரு செயல் நிறைவேற்றம் அது. அது தான் கடமையின் மீது அவருக்கிருந்த பக்தி.

தமிழ்மக்களின் விவகாரத்திற்காக முன்னெடுக்கப்படும் போராட்டமொன்றில் பாராட்டுக்குரிய இறுதி வழக்கு ஒன்றில் பதிலளிக்க வேண்டுமென்று அவருக்கிருந்த விருப்பத்துடன் பிணைந்திருந்த இக்கடமை மீதான பொன்னம்பலத்தின் பக்தியானது பிரயத்தனமின்றி வாதம் புரியுமாறு அவரது சிங்கள நண்பர்கள் அவருக்குக் கூறிய முன்யோசனைகள் மீதும் கூட மேலாதிக்கம் செய்து விஞ்சி நின்றது.

1976 செப்ரெம்பர் 10ஆம் திகதி அட்பார் மேல் நீதிமன்றமானது அவசரகால விதிமுறைகளின் செல்லுபடித்தன்மைகுறித்துப் பிரதிவாதிகள் தரப்பு எழுப்பிய ஆட்சேபனைக்கு ஆதரவளித்ததுடன் த.வி.கூ.வின் செயலாளர் நாயகமான அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கமும் அரசுக்கெதிராக தூண்டுப் பிரசுரங்களைத் தயாரித்து விநியோகித்த குற்றச்சாட்டிலிருந்து விடுதலையானார். வழக்கின் முதலாவது எதிரியான அமிர்தலிங்கம் வழக்கின் முடிவில் விடுதலையான போது பொன்னம்பலத்தின் ஆற்றலுக்கு மரியாதை செலுத்துகையில் பின்வருமாறு கூறினார்.

"வழக்கின் போது அவசரகால நிலை பிரகடனம் செய்யப்பட்ட விதத்தை நாம் எதிர்க்க வேண்டும் என்பது குறித்து ஜீ.ஜீ.பொன்னம்பலம் எம்மைத் தெளிவுபடுத்தினார். சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் எரிச்சலூட்டிய அவசரகால நிலை வெகுவாக வெறுக்கப்பட்டது. அதன் செல்லுபடித் தன்மைக்கெதிராக நாம் வாதிட்டபோது எமது விவகாரத்திற்குச் சிங்கள மக்களின் அனுதாபத்தையும் வென்றெடுப்போம் என்ற நம்பிக்கை எமக்கிருந்தது. ஏனெனில் அவர்களுக்காகவும் நாம் போராடிக் கொண்டிருப்போம்."

வழக்கை விசாரித்த மேல்நீதிமன்ற நீதிபதி மூவரும் 67 பக்கங்களில் ஏகமனதாக வழங்கிய தீர்ப்பில் வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டிருப்போரை விசாரிப்பதில் சட்டவாட்சியைத் தம்மால் தொடர்ந்து பிரயோகிக்க முடியாதிருப்பதாகக் குறிப்பிட்டிருந்தனர். எவ்விதியின் மூலமாகக் குறித்த நீதிமன்றமானது உருவாக்கப்பட்டதோ 1975 மேமாதம் வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டிருந்த 59ஆம் இலக்க அவசரகால விதியானது சட்டத்தில் அங்கீகாரத்தையோ அல்லது செல்லுபடித் தன்மையையோ கொண்டிருக்க முடியாது என்றும் அதில் தெரிவித்திருந்தனர்.

## நோய்வாய்ப் பட்டும் கடமையில் பக்தி

### கலைஞர் கருணாநிதியின் வழக்கில் ஆஜரானார்

தமிழனுக்கு எங்கு இடர் ஏற்படுகின்றதோ அங்கு சென்று அவன் துன்பத்தைக் களைபவர் தான் திரு.பொன்னம்பலம்.

கருணாநிதிக்கு எதிராக இந்திய அரசால் நியமிக்கப்பட்ட சர்க்காரிய ஆணைக்குழு முன் ஜீ.ஜீ.பொன்னம்பலம் க்யூ.சி., தனது மைந்தன் குமார் பொன்னம்பலத்துடன் ஆஜரானார்.

1976ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30ஆம் திகதியன்று கலைஞர் கருணாநிதியின் தமிழ்நாடு அரசு ஊழல் குற்றச்சாட்டுகளின் பேரில் இந்திரா காந்தியின் மத்திய அரசினால் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்திய உயர்நீதிமன்றத்தின் ஒரு நீதிபதியான நீதியரசர் சர்க்காரியா தலைமையில் தனிமனித விசாரணை ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது.

சட்டத்துறைக்கு மரபுவழிக் கதைகளால் புகழ் பெற்ற ஜீ.ஜீ.பொன்னம்பலம் கருணாநிதியின் பேரில் ஆணைக்குழுவின் தோன்றினார்.

டில்லி அதன் மத்திய மாநில அரசு உறவில் (பஞ்சாப் தொடர்பிலும் தமிழ்நாடு தொடர்பிலும்) பின்பற்றுகின்ற இரட்டைத் தரங்களை ஆழமாக ஆராய்ந்து விளக்கினார்.

[illegible] இருப்பவர்கள் எல்லோரும் பொய்யர்களென்று காண்பிப்பதற்கு அவர்கள் ஒவ்வொருவரையும் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கும்படி நீதிபதியிடம் கேட்டுக்கொண்டார்.

அவரின் கோரிக்கையை நீதிபதி உடனடியாக நிராகரித்தார். கருணாநிதி மீது அரசியல் பழிவாங்குவதென்று இந்திரா காந்தி முடிவுசெய்த பின்னர் எவ்வாறு அதனைச் சரிக்கட்டும் நோக்குடையதாக 'காங்காரு' நீதிமன்றத்தின் இயல்பும் தொழிற்பாட்டு நடைமுறைகளும் இருக்கின்றனவென்று தகர்க்க முடியாத சட்ட வாதங்களுடன் ஜீ.ஜீ. வெளிப்படுத்தினார்.

அதன் பின்னர் அவர் தமிழ் நாட்டு முன்னணி சட்டத்தரணிகளைக் கொண்டதான தமது உயர் சட்டத்தரணி குழுவினருடன் வெளிநடப்புச் செய்து அந்நீதிமன்ற விசாரணைகளை தொடர்ந்தும் பகிஷ்கரித்தார். அதுவே சட்டப்படி ஆணைக் குழுவின் தற்கொலைக்குக் காரணமாகியதைத் தொடர்ந்து கருணாநிதி வெற்றியீட்டினார்.

ஜீ.ஜீ. கட்டணமாகவோ பயணச் செலவுகளாகவோ கருணாநிதியிடமிருந்து ஒரு சதமேனும் பெற்றுக்கொள்ள மறுத்ததுடன் தங்கியிருந்த தற்கான செலவைக் கூடத்தாமே கொடுக்க வேண்டுமென வற்புறுத்தினார்.

பின்னர் மெரினா கடற்கரையிலுள்ள சீரணி அரங்கத்தில் கலைஞர் கருணாநிதி நடத்திய நன்றி பாராட்டும் மாபெரும் கூட்டத்தில் உண்மையான நட்புக்கு சங்கத் தமிழ் இலக்கியம் வகுத்துரைத்துள்ள உயர் ஒழுக்க விழுமியங்களை ஜீ.ஜீ. முழுமையாகப் புதுப்பித்தெழுதி உள்ளாரென்று கருணாநிதி அவரைப் பாராட்டினார்.

இச்சந்தர்ப்பத்தில் சட்டத்துறை மூலம் வெளிநாடுகளிலும் தமிழ்த் தேசிய இனத்திற்குத் துன்பம் வரும்போது குரல் கொடுக்கக் கூடிய முறையில் ஜீ.ஜீ. தனது மைந்தனையும் தனது வழியில் செயற்படுத்தினார் என்பதை அறியக் கூடியதாக இருக்கின்றது.

ஜீ.ஜீ. தனது வழக்கை முடித்துக் கொண்டு மலேசியாவுக்குத் தனது ரப்பர் தோட்டத்துக்குச் சென்றார். பின் தனது வேலைகள் முடிந்ததும் பின் அங்கிருந்து கருணாநிதியின் வழக்கு சம்பந்தமாகச் சில சட்ட நுணுக்கங்களை ஆராய்வதற்காக இங்கிலாந்து செல்வதற்காக மலேசியா விமானநிலையத்தில் நின்ற போது அவர் உயிர் பிரிந்தது. மலேசியாவிலிருந்து அவ்வீரபுருஷனின் பூதவுடல் கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்தது. அன்னாரின் பூதவுடலை அவரின் புதல்வர் குமார் பொன்னம்பலம் அவர்களும் ஏனைய கட்சிப் பிரமுகர்களான நா.திருநாவுக்கரசு, கு.மோதிலால் நேரு, வீ.ஆனந்தசங்கரி, சிவாஜிலிங்கத்தின் மாமனார் ஆகியோர் பொறுப்பேற்றார்கள்.

பின்னர் அவரது பூதவுடல் குயின்ஸ் வீதியிலுள்ள அவரது இல்லத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. அங்கு அவரது பூதவுடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. பிரதமர், தேசாதிபதி, மந்திரிமார், மற்றும் பாராளுமன்றப் பிரதிநிதிகள், தளபதிகள், வெளிநாட்டுப் பிரதிநிதிகள், அரசியல்வாதிகள், சட்டத்தரணிகள், புத்திஜீவிகள் எனப் பல்லாயிரக் கணக்கில் அதில் பங்குபற்றினர்.

பின்னர் அவரது பூதவுடல் யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவரப்பட்டு தமிழர் விடுதலைக் கூட்டணி காரியாலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. தமிழினத்தையே கலங்கவிட்டு விண்ணகம் சென்ற ஜீ.ஜீ. பல்லாயிரக்கணக்கான மக்கள் கண்ணீர் சொரிந்து கதறி அழ இறுதி யாத்திரையாக கொண்டு செல்லப்பட்டு அவரது சொந்த ஊரான பருத்தித்துறைக் கடற்கரையில் அ.அமிர்தலிங்கம் மற்றும் தலைவர்களுடைய இரங்கலுரைகளுடன் அவருடைய சிதைக்கு அவரது ஒரே ஒரு மகன் குமார் பொன்னம்பலம் தீ மூட்ட, அவரது பூதவுடல் அக்கினியுடன் சங்கமமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# ஒப்பனைகள்

இராமசாமி ரமேஸ்
அளம்பில்

விடிவெள்ளி பிரகாசமாய் எரிந்து கொண்டிருந்தது. அங்கொன்றும் இங்கொன்றுமாய் விண்மீன்கள் கண்சிமிட்ட, இவனுக்குள் பயங்கர துயரப் போராட்டம். வழமையாக தொழிலுக்கு வந்து வலை படுத்து விட்டு படகிலேயே தூங்கிப் போகின்றவன் கடந்த இருநாட்களாக கடலுக்கு வந்து கொட்டக் கொட்ட விழித்துக் கொண்டிருந்தான். தாரணியோடு பேசி இரண்டு நாளாகி விட்டது. அவளோடு பேசாத இந்த இரண்டு நாட்களுமே இவனுக்கு பல யுகங்களாகத் தெரிகிறது. "என்னை நினைக்கக் கொண்டு... அழுதபடி தான் இருப்பாள்" அடிக்கடி மதியனின் மனச்சாட்சி சொல்லிக் கொண்டிருந்தது. அவள் பிடிவாதக்காரி. சாப்பிடவும் மாட்டாள். நினைக்கும் போதே வேதனை மனதைத் துண்டு துண்டாகப் பிய்த்தெறிந்தது. சரியாகத் தூங்காவிட்டால் காலையில் போய் மரம் ஏறவும் முடியாது. தூக்கம் தானே தொலைந்து விட்டது... இனி பனியுமடி எப்போது வெயுப் போகிறேன்... அவனுக்கு மூன்றுமட்டும் தான் மீண்டும் மீண்டும் உறுத்தலாய் மனதுக்குள் ஒலித்துக் கொண்டிருந்தது.

"இலவோயடி உனக்கு மாப்பிள்ளை? நான் இருக்கும் மட்டும் உது நடக்காது..." பாதும் தேனும் ஒழுகப் பேசி உறவாடுகின்றவர்கள் ஒரு சின்ன விடயத்துக்காக உடனே எப்படி மாறிப் போகிறார்கள்?. சீவல்த் தொழில் செய்வதால் நாங்கள் நாய்களாகிப் போவோமா? மனுஷன் பணம் காசால் பணக்காரனாகி விட முடியாது. நல்ல மனிதர்களைச் சேர்த்துக் கொண்டவன்தான் பணக்காரன். இந்த வார்த்தைகளைத் தான் இவன் நம்பினான். ஆனாலும் மோசமான இந்த வார்த்தை கத்தியாகவல்லவா குத்துகின்றது? யோசித்துக் கொண்டே கிழக்கை நோக்கினான். வெளுக்கத் தொடங்கிவிட்டது கீழ்வானம். கடலுக்குள் படுத்திருந்த (போட்டிருந்த) வலைகளை ஏற்றத் தொடங்கினான். அத்து அறக் கொட்டியான் வலை பாறைகளுக்குள் உள்ள நல்மீன்கள் எனப்படுகின்ற சறா, விளைமீன், ஓட்டி, பூந்சகண்ணி போன்றவை பிடிபடுகின்ற வலையில் இன்றும் ஓரளவு பிடிபட்டிருந்தன. எல்லா வலைகளும் ஏற்றிமுடிய படகை கரைக்குச் செலுத்தத் தொடங்கினான் மதியன். இவனது சகாக்களும் தூரத்தில் கரையை நோக்கி வந்து கொண்டிருப்பது தெரிந்தது.

எப்போதும் போல கடற்கரை சனக்கூட்டத்தால் நிரம்பிக் கிடந்தது. "தாரணியும் வந்திருப்பாள்!" எண்ணிக் கொண்டவனுக்குள் புதிய உற்சாகம் ஏற்பட்டது. பேச முடியாதுதான்! ஆனால் பார்த்துக் கொள்ளலாம் தானே? படகு கரையை அண்மித்ததும் மதியனின் விழிகள் அவள் எங்காவது நிற்கிறாளா என்று தான் தேடின. நிற்பதாகத் தெரியவில்லை. அவளது தகப்பனின் படகு இன்று தொழிலுக்குப் போகவில்லை என்பதை உறுதிசெய்யும் முகமாக கரையில் தூரமாக இழுத்து விடப்பட்டிருந்தது. ஏமாற்றமே மிஞ்சிப் போக, படகு கரையில் ஏறியது. இழுத்துவிட, ஏனைய தொழிலாளிகள் ஓடிவர வியாபாரிகள் மீன் கிடக்கிறதா என்பதைப் பார்க்கும் ஆவலில் படகைச் சூழ்ந்து எட்டிப் பார்த்தபடி பேரம் பேசத் தொடங்கினார்கள்.

"மதியன்! இருநூறு படி... உடனே நிறு மீனை" வழக்கம் போல இவனது மீன்களை எடுக்கும் தவராசா அவசரப்பட்டான். "அம்மாட்ட பேசி எடுத்துக் கொள்ளுங்கோ அண்ணை..." என்றவன் தாய் கொண்டு வந்திருந்த பனிசை கடித்துக் கொண்டு தேநீரையும் பருகத் தொடங்கினான். சுறுசுறுப்பு ஓடிவந்தது. மனதிலும் ஒருவித உற்சாகம் பிறக்க இந்தப் பிரச்சினைக்கு இண்டைக்கு ஒரு முடிவு எடுத்தே ஆகனும்... உள்ளூர எண்ணியபடி எழுந்துகொண்டான். இனிப் போனால்தானே நான் சீவும் மரங்களைப் பார்த்து கள் எடுத்துக் கொண்டு... புதிதாக இரண்டு மரமும் கிடைத்திருந்தது. அதையும் தட்டி, முட்டி கட்டிவிட்டு வரலாம். மீனை சரியா கரையில் போகும் விலைக்குக் கொடுக்கத் தாயிடம் சொல்லிவிட்டு வீட்டை நோக்கி நடந்தான். தாரணியை எப்படிச் சந்திப்பது என மனதும் திட்டம் வகுத்துக் கொள்ளத் தவறவில்லை.

அன்றாடம் மரமேறி சீவிக்கும் குடும்பத்தில் மூத்தவனாய்ப் பிறந்து, ஒருநாள் மரத்திலிருந்து தவறிவிழுந்து மரணித்துப் போன தந்தையின் பொறுப்பைச் சுமப்பதற்காக, சின்ன வயதிலேயே படிப்பை இழந்து குடும்ப வண்டியை நகர்த்த வருமானம் போதாததால் கடலோடும் போராடுகின்ற சாதாரண வர்க்கத்துக்குள் அடங்கிவிட்டான் இந்த மதியன். அம்மாவோடு சேர்த்து இரு தங்கச்சிகள். தன் விருப்பு, வெறுப்புக்களை சின்ன வயதிலிருந்தே குடும்பத்துக்காகத் தியாகம் செய்துவிட்டவன். இப்போதும் அப்படியே வாழ்கிறான். இந்தக் காலத்து இளம் தலைமுறை போல இல்லாத ஒன்றை நோக்கி ஓடிப்போய்க் கொண்டிருக்கின்றவன் இவன் கிடையாது. பதினைந்து வயதிலேயே மரமேற ஆரம்பித்து விட்டான். ஒவ்வொரு பனையாய் ஏறி பாளை தட்டி தடக்கயிற்றிலேயே நின்றுகொண்டு முட்டி கொழுவி, கள்ளை தன்னுடைய குடுவைக்குள் எடுத்துக் கொண்டு இறங்கும் வரை தன்னுடைய தொழிலை கச்சிதமாய் செய்யக் கற்றுக் கொண்டவன் மதியன்.

மரமேறியதால் வலிமையடைந்து, புஜங்கள் புடைத்த இறுக்கமான உடல்வாகுதான். வெயில் குளித்து வேலை செய்பவனாயிற்றே. நிறம் குறைவாக இருந்தாலும் நேர்த்தியான கட்டுடல் கொண்ட அழகன். படிப்பறிவு மத்திமம்தான். எட்டாம் ஆண்டோடு படிப்புக்கு முழுக்குப் போட்டுவிட்டான். ஆனாலும் தன் தாய், சகோதரிகளுக்கு எந்தவிதமான குறையும் விடக் கூடாதென்பதில் கவலைப்படுபவன்.

நடுச்சாமத்தில் தன்னுடைய படகைக் கொண்டு கடலுக்கு மீன்பிடிக்கப் போவான். காலையில் கரைக்கு வந்து மரங்கள் சீவ ஆயத்தமாகி விடுவான். "நான் தான் இடையில படிப்பை நிப்பாட்டிப் போட்டன்! தங்கச்சியாக்களாவது வடிவாப் படிச்சு... அரசாங்க உத்தியோகம் பார்க்கோணும்..." தாயிடம் அடிக்கடி இப்படித்தான் சொல்லிக் கொள்வான். சமூகத்தில் தன் குடும்பமும் தலைநிமிர்ந்து அடுத்தவர்களுக்கு இணையாய் வாழவேண்டும் என்ற ஆசை இவனிடத்தில் கொட்டிக் கிடந்தது. வாலிபனாயிற்றே. அவனது வசந்த காலமும் பூக்கத் தொடங்கியது. அவன் மரம் சீவும் வீட்டுக்கார தேவனின் மகள்தான் தாரணி. ஆரம்பத்தில் இவனோடு அந்த வீட்டிலுள்ளவர்களில் தேவனைத் தவிர யாரும் பேசமாட்டார்கள். தாரணி இவனைக் கண்டால் ஒரு புன்னகையை வீசிவிட்டு நகர்ந்து போவாள். இவனும் வீட்டுக்குப் பின்பக்கமாகவே வந்து மரத்திலேறி சீவிவிட்டு அப்படியே போய்விடுவான். அவர்களிடம் தானாக எதுவும் பேசமாட்டான். அவர்கள் பரம்பரைக் கரையார் எனும் கர்வம் கொண்டவர்கள். தமிழர்களுக்கு எது இருக்கிறதோ இல்லையோ சாதியம் பேசும் கொள்கை மட்டும் கண்டிப்பாக இருக்கிறது. மதியன் தானுண்டு தன் வேலையுண்டு என இருந்துகொள்வான்.



அவன் தொழிலில் நல்ல தேர்ச்சியும் பக்குவமும் கொண்டவனாகி விட்டான். சீவல் தொழிலில் போதியளவு வருமானம் கிடைப்பதில்லை. அதனால்தான் கடற்றொழிலையும் கற்று தனக்கென ஓர் படகையும் வாங்கிக் கொண்டு இரவில் அதனைச் செய்வான். காலை கரைக்கு வந்து சீவப் போவான். அளவுக்கு மீறிக் கௌரவம் பார்த்தால் வாழ வழியற்றுப் போய்விடுவோம் எனும் கொள்கை அவனுடையது.

மதியனின் எளிமையான செயற்பாடுகளால் ஈர்க்கப்பட்டாளோ என்னவோ தாரணி கொஞ்சம் கொஞ்சமாய் அவனைக் கண்டால் நாணப்படத் தொடங்கினாள். சிரிப்பால் பேச முயன்றாள். இவன் வளவுக்குள் எப்போது நுழைவான் என வரும் சரியான நேரத்தைக் குறித்து வைத்துக் காத்திருப்பாள். வந்ததும் பார்வைகளில் படக்கூடியவாறு வேலைச்சாக்கில் நடப்பாள். இவனுக்குள்ளும் இவளின் செயற்பாடு தீயாய் பற்றிக் கொண்டது. பருவம் யாரைத்தான் விட்டு வைக்கும்? பார்வைகள் தூதுகளாகி... அப்புறமாய் மொழியால் முகவரியிட்டார்கள். யாரும் பார்க்காத தருணத்தில் பேசிக்கொள்வார்கள். நினைவுகளால் குடித்தனமும் ஆரம்பித்திருந்தார்கள்.

காலையில் இவனைப் பார்க்க கடற்கரைக்கும் வரத்தொடங்கிவிட்டாள். தன் தந்தையின் படகைப் பார்க்க வருவதாய் தேநீர் கொண்டுவரும் தோரணையில் அங்கிருந்து கொண்டு இவனையே பார்வைகளால் அளவெடுப்பாள். அதிகம் பேசிக்கொள்ளாவிட்டாலும் வியாழக் கிழமைகளில் சந்தர்ப்பம் வாய்த்தது. இருவரும் பேசிக்கொள்ள அங்கிருக்கும் அந்தோனியார் தேவாலயத்திற்கு போகும் சாட்டில் இருவரும் சந்தித்துப் பேசிக் கொள்வார்கள். இச்செய்தி அவர்களின் வீடுகளுக்குப் போகவில்லை. இருந்தாலும் ஒருநாள் இவன் எடுத்துக் கொடுத்த கடிதாரால் இவர்களது கதை தேவன் குடும்பத்தை சிதறடித்துவிட்டது. நேராய் இவனிடமே வந்தார்கள்.

"எளியசாதி உனக்கு... என்ர மகள் கேட்குதா? இனிமேற்கொண்டு... அவளோட நீ கதைச்சால்...நான் மனுஷனாய் இருக்க மாட்டன். விளங்குதா...?" தேவன் தாண்டவமாடிவிட்டுப் போனார். இவன் திருப்பி எதுவும் கதைக்கவில்லை. ஆனால் தேவனின் வார்த்தைகள் இவனுக்குள் கொதிப்பை ஏற்படுத்தின. இப்படிப் பேசியதற்காய் தேவனுக்கு அடிக்கவோ திருப்பித் திட்டவோ பலமில்லாதவன் மதியன் கிடையாது. ஆனால் அது தன் காதலுக்கு ஆபத்தாயும், காதலுக்கு தடை வைப்பதாகவும் முடிந்துவிடுமே என்பதால் பொறுத்துக் கொண்டான். இதன் பிறகு, அவர்களுடைய வீட்டுக்கு சீவக் கூட இவன் போவதில்லை. ஊரெல்லாம் இதே பேச்சாகி விட்டது. "ஏன் அவனுக்கென்ன குறைச்சல்? அவரின்ர மகளை அவன் நல்லா வச்சுப் பார்ப்பான்..." இப்படியும் ஒரு தரப்பு பேசியது. எதிராக "அந்த ஒரிஜினல் கரையார மனுஷன்... இவனை மருமகனாக்குமே...?" இவ்வாறும் சாதியம் பாடினார்கள்.

இவனும் சிறிதுகாலம் பேசாமல் இருந்து பார்ப்போம் என்னதான் நடக்கிறது என்று யோசித்தான். அதன்படிதான் கடந்த இரண்டு நாட்கள் இருவரும் பேசிக் கொள்ளவில்லை. சந்தர்ப்பமும் கிடைக்கவில்லைதான். தாரணியை வெளியில் காணவே முடியவில்லை. கவலைதான். என்ன செய்வது?

மதியன் காலை சீவப்போகத் தயாராகையில் பக்கத்து வீட்டுப் பையன் திலோசை தாரணி வீட்டிலிருக்கிறாளா என பார்த்துவர அனுப்பினான். சில வேளை வேறேதும் சம்பந்தங்களை அவளுக்குப் பார்த்து விடுவார்கள் என்ற பயமும் ஒருபக்கம். உண்மையாக அவளை நேசித்தவனாயிற்றே. அவள் கிணற்றடியில் நிற்பதாய் சொன்னான். திருப்தியாய் இருந்தது. சீவப் போய்விட்டு வந்து பின்னேரம் சந்திக்கப் பார்ப்போம் என்றபடி புறப்பட்டுப் போய்விட்டான்.

ஒவ்வொரு மரமாய் ஏறிக் கள்ளைச் சேகரித்து தவறணைக்கு அனுப்பிவிட்டு அவன் வர பதினொரு மணியாகிவிட்டது. தாய் சாப்பாட்டை நீட்டியபடி சொன்னாள். "தம்பி உந்த தேவன்... சின்னப்பரின் மகனோட சேர்ந்து அஞ்சரை இஞ்சி வலைபடுக்கப் (ஆழ்கடல் தொழில்) போனவராம். இன்னும் போட்.., கரைக்கு வரேல்ல எண்டு... ஒரே கத்தல் மனிசிக்காரியும் மகளும்! கடலும் ஒரு மாதிரிக் கிடக்குது. ஒருத்தரும் தேடிப்போறாங்கள் இல்லை. குஞ்சனும் ராஜாவும் தேடிப் போய் இடையில் திரும்பி வந்துட்டாங்கள் காணேல்லை எண்டு. காசுக்குப் பேராசையில திரிஞ்சா இப்பிடித்தான்..."

அந்நேரம் பார்த்து வானமும் மப்புக் கட்ட ஆரம்பித்தது. காலநிலை பிழைப்பது இவனுக்குப் புரிந்தது. போனவர்களுக்கு என்னவாயிற்று. ஆழ்கடல் மீன்பிடிக்குத்தான் போயிருக்கிறார்கள். வந்திருக்க வேண்டுமே எழுந்துகொண்டான். சாப்பிடவில்லை. "உவங்களைத் தேட நீ போக வேண்டாம் தம்பி. காத்தும் வீசத் தொடங்கீட்டுது மழை வருமாப் போல கிடக்கு..."

"இருங்கோ... வாறன்..." என்றபடி கடலுக்குப் போடும் காற்சட்டையை போட்டுக் கொண்டு கடற்கரையை நோக்கி நடந்தான் மதியன். தேவனின் சகபாடிகள், உறவுகள் ஒரிருவர் நின்றனர். தாரணியும் அம்மாவும் அழுது கொண்டிருந்தார்கள். தாரணியைப் போய் கேட்டான். "எப்ப அப்பா போனவர்?"

"நேற்றுப் பின்னேரம்..." சொல்லிவிட்டு கண் கலங்கினாள். இவனுக்கும் வலித்தது. திரும்பி வந்து தன் படகைத் திருப்பி என்ஜினை இயக்கிப் பார்த்தான். மண்ணெண்ணை போதாது பக்கத்து படகுக்கார குமாரின் எண்ணெயை எடுத்து தனது படகுக்குள் வைத்தான். கடலில் தள்ளி ஏறிக்கொண்டான். மழை காற்றோடு கலந்து வேகமாய் பெய்யத் தொடங்கியது. ஏக்கத்தோடு விழியால் வழியனுப்பினாள் தாரணி.

மழையும் வந்துவிட்டதால் கடல் முழுதும் இருள் கௌவிக் கொண்டது. கண் திறக்க முடியாதளவுக்கு மழைநீர் தெறித்தது. தொழிலுக்குப் போகும் திசைநோக்கி தன் படகைச் செலுத்தினான் மதியன். கோபங்கள் தாபங்களை தொழில் விடயத்தில் பார்க்கக் கூடாது. ஒருவருக்கொருவர் ஒற்றுமையாய் இருந்தால்தான் தொழில் செய்யமுடியும். அதுவும் கடற்தொழிலில் கட்டாயம் மீனவர்களுக்குள் ஒற்றுமை இருக்க வேண்டும். கரையிலிருந்து நெடுந்தூரம் வந்துவிட்டான். ஆனால் கண்ணுக்கெட்டிய தூரம் வரை ஒரு குருவிகூட தென்படவில்லை. இன்னும் படகை செலுத்திக் கொண்டேயிருந்தான். குளிரில் உடல் விறைத்தது. கைகள் சுருங்கிக் கொள்ள உதடுகள் தாளம் போடத் தொடங்கின. காற்றும் மழையும் விடுவதாயில்லை. வழமையாய் இவர்கள் வலை படுக்கும் கடல் எல்லை தாண்டி வந்துவிட்டான். கரும்புகை மண்டலமாய் கிடந்தது கடல். இரைச்சலைத் தவிர வேறெதுவும் கேட்கவில்லை. அந்நேரம்தான் தூரத்தில் கறுப்பாகத் தெரிய அதை நோக்கி படகைச் செலுத்தினான் மதியன். தேவனும் சின்னப்பரின் மகன் ஆனந்தனும் தான். எரிபொருள் முடிந்துவிட்டதால் வர வழியின்றி தத்தளித்துக் கொண்டிருந்தவர்கள் இவனைக் கண்டதும் அழுதே விட்டார்கள். தனது படகில் அவர்கள் இருந்த படகைக் கயிற்றால் கட்டி விட்டு கரைநோக்கி இழுத்தபடி சென்றான். போகும்வரை பேசிக் கொள்ளவில்லை. கரையில் தாரணி குடும்பத்தைத் தவிர வேறு யாருமில்லை. அந்த நேரம் மதியன் தேடிப்போன விடயம் தெரிந்து தாய் கமலா தாங்களது அயலவர் சிலரோடு கடற்கரைக்கு வர அனைவருமாய் சேர்ந்து இரு படகுகளையும் இழுத்து மேலே நிறுத்தினார்கள்.

தாரணி கேட்டாள் "உங்கட ஆக்களா வந்து உங்களைக் காப்பாத்தினது அப்பா...?" தேவனின் உதடுகள் அசையவில்லை. விழிகள் கசிந்தன. மதியன் தன் தாயாரை அழைத்துக் கொண்டு வீட்டை நோக்கி நகரத் தொடங்கினான். மழையும் காற்றும் இப்போதுதான் சற்றுக் குறைய ஆரம்பித்தது தேவனுக்குள் இருந்த சாதியம் போலவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கவிதைப்புனல்

## தேடுகிறேன்



தினம் தினம் தேடுகிறேன்
உனைக் காண்பதற்காய்.
தினம் தினம் நினைக்கிறேன்
உன்னுடன் பேசுவதற்காய்.
தினம் தினம் கனவு காண்கிறேன்
நினைப்பது நடப்பதற்காய்.
தினம் தினம் ஊமையாகிறேன்
உன்னுடன் கதைப்பதற்காய்.
தினம் தினம் எழுதுகிறேன்
உனக்கு மடல் வரைவதற்காய்.
தினம் தினம் அழுகின்றேன்
உன்னுடன் சேர்ந்து சிரிப்பதற்காய்.
தினம் தினம் கடவுளை வணங்குகிறேன்
உன்னைத் தரிசிப்பதற்காய்.

## தியாக தேசம்



அசைவற்ற கரங்கள்
அசைந்த தேசம்
நடக்காத கால்கள்
நடத்திய தேசம்
அத்தனையும்
ஆகுதியான தியாகம்

ஒளிராத கண்கள்
ஒளிர வைத்த தேசம்
இயக்கமிழந்தவர்கள்
இயக்கிய தேசம்
மரணத்தின் உச்சியில் நின்று
வாழ்வை ரசித்த தியாகம்.

மனதிலே விரிந்ததெல்லாம்
மணக்கின்ற தேசம்
அதன் இன்மணம்
அவர்களின் ஜென்மங்களுக்கும்
அழகாய் பாவிச் செல்லும்.

அகநிகா.

## கருவறைத் தெய்வம் நீ



பத்து திங்கள்
என்னைச் சுமந்தவளே...
உன் கருவறையில் நான்
இருந்தேன் கவலைகள்
இல்லை. உன் கைகளிலே
நான் தவழ்ந்தேன் கண்ணீரும்
எனக்கில்லை - சிறகுகள்
முளைத்து உலகத்தை அளந்தேன்.
நிம்மதி என் வாழ்வில் பஞ்சமாகியது.
பணத்துக்கு விலைபோகும்
உறவுகள் கையில் பகடைக்காய்
ஆகினேன் - ஆனால் நீயோ
என் சோகங்களுக்கு மடி தந்து,
ஊமையாகிப் போன என்
உணர்வுகளோடு உறவாடினாய்
நிம்மதி கொடுக்கும் சன்நிதி
எது என்றால் அது உன்
கருவறை என்பேன் - மீண்டும்
ஒருமுறை என்னை உன்
கருவறையில் சுமந்துவிடு
குழந்தையாய் மாறி கவலைகள்
மறப்பேன்
உன் பாசங்களில்
என்றும்

ப்ரியா
கொக்குவில் மேற்கு.


## காலத்தின் கோலம்



[illegible]

நெடுந்தீவு கதிர்.

## இதய விற்பனை.



உன் அழகிலிருந்து
உதிர்ந்தன அந்த
மலர்கள்
உன்னையே நினைத்து
தூங்கினாலும்
கண்கள் என்னவோ
உன்னைத்தான்
தூங்க வைக்க
சென்றுவிடுகின்றன.

சாளரங்களை
துடைக்கின்றேன்.
உன் முகம் தெரிந்த
அந்த இடைவெளிகளை
மிச்சம் வைத்துக்கொண்டு.

எவராவது ஒரு
இதயம் தாருங்கள்
முல்லைக்குத் தேர்
கொடுத்தானாம் பாரி,
முதல் காதலுக்கு
ஒரு இதயம்
கொடுங்களேன்.

உன் ஆடைகளைத்
துவைத்தேன்
நுரையீரல் முழுவதும்
சவர்க்கார நுரைகள்.

ஒரு நாள்
கணனித்திரைகளில்
சிக்கியது விழிகள்
உன் முகத்திரைகளைக்
கண்டேன்.

ஷம்.நிதா
நெடுந்தீவு.

## இலை வாழ்வு



ஓட்டை வீட்டில்
இருந்து ஒரு கவிதை
உலர்ந்த வாயில்
உதிரும் புது இசை
தாழ்ப்பாள் போடாமல்
தொடரும் தாம்பத்தியம்
உயிர்போகாமல்
[illegible] உணவு
உயிரோடு இருக்கையில்
அப்பப்பா வயசிலும் இழவு
வேண்டாம் போரு முடிந்து போகும்
முனகலிப்பும் சந்தோஷமும்
கவலையழுகின் அத்தியாயம்
கண்ணீரோடு தொடர்கிறது.
காலம் சென்றும் அதே
[illegible] மாறவில்லை.
இந்த கற்பனை முட்டிக்குள்தான்
எத்தனை கல்லறைகள்.

[illegible]

## நியாயசபை



கண்ணகியின்
ஒற்றைச் சிலம்பின் பரல்கள்
தெறித்துக்கொண்டிருக்கின்றன
நீதிமன்றின் சுவர்களெங்கும்....!

பட்சிகள் அந்தப்பரல்களைப்
பொறுக்கிக்கொண்டு
ஓடுகின்றன....

[illegible]
கூரையின் இடுக்குகளில்
ஒளித்துவிட்டு
சிதுக்கி எறிகின்றன
வேறுபரல்களை...

அவற்றை ஏந்துவதற்கென்றே
வந்துசேர்கின்றன
இன்னுஞ்சில...

கோவலன் கொலையுண்ட
செய்தியைக்கேட்டதும்
அதிர்ச்சியைத்தந்திடும்
சபையில்,
அவள் மானம்
குறித்த கேள்விகள்
அவள் மேல்
ஒவ்வொன்றாய்
விழும் கற்கள்...


முடிவில்
ஊரைக்கொளுத்தியும்
[illegible]

- தாட்சாயனி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்**

மனதிற்கினிய சம்பவங்கள் கூடி வரும். குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். புதிய வேலைக்கு முயற்சித்தவர்களுக்கு பெரிய நிறுவனத்தில் வேலை அமையும். சகோதர உறவுகளால் அலைச்சல், டென்ஷன், செலவுகள் ஏற்பட்டு விலகும். குழந்தைகள் உடல்நலத்தில் கவனம் தேவை. தந்தை யிடம் இருந்து உதவிகள் கிடைக்கும். அவரது ஆலோசனைகளைக் கேட்பது நல்லது. உத்யோகத்தில் நல்ல மாற்றங்கள் வரும். பதவி, சம்பள உயர்வு பற்றிய தகவல் கிடைக்கும்.




**கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்**

காரிய வெற்றி, மன மகிழ்ச்சி உண்டு. செல்வாக்கு, சொல்வாக்கு உயரும். மகள் கர்ப்ப சம்பந்தமாக இனிக்கும் செய்தி வரும். மருத்துவ சிகிச்சையில் இருப்பவர்கள் பூரண குணம் அடைவார்கள். கொடுக்கல், வாங்கலில் நின்றுபோனபணம் வந்து சேரும். கன்னிப் பெண்களின் விருப்பங்கள் நிறைவேறும்.




**மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்**

மன சஞ்சலம். இனம் புரியாத கவலைகள் நீங்கும். உற்சாகமாக, குதூகல மாக, சாதுரியமாகச் செயல்படுவீர்கள். பிள்ளைகள் திருமண விஷயமாக முக் கிய முடிவுகள் வரும். தக்க சமயத்தில் உதவிகளும் கிடைக்கும். மாமனார், மாமியாருடன் ஏற்பட்ட வருத்தங்கள் மறையும். சொந்த பந்தங்கள் வருகை யால் மனமகிழ்ச்சி, செலவுகள் அதிகரிக்கும். வியாபாரம் செழிப்படையும். புதிய தொழில் வாய்ப்புகள் வரும். பணப் புழக்கம் அதிகரிக்கும்.




**புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயில்யம்**

குடும்பத்தில் ஏற்பட்ட இறுக்கமான சூழ்நிலைகள் மாறும். மன அமைதி ஏற்படும். கணவன் - மனைவி இடையே கருத்து வேறுபாடுகள் மறைந்து நெருக்கம் அதிகமாகும். திருமணத்துக்கு வரன் பார்த்தவர்களுக்கு பொருத்தமான வரன் அமையும். பெண்கள் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும். வயிறு, கர்ப்பப்பை சம்பந்தமான உபாதைகள் வந்து நீங்கும்.




**மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்**

உங்கள் திட்டங்கள், எண்ணங்கள் பூரணமாக வெற்றிபெறும் கணவன் - மனைவி இடையே மனநிறைவும், திருப்திகரமான சூழலும் ஏற்படும். பெண்களால் திடீர் அதிர்ஷ்டம் வரும். பின் சாதனைகள் செய்ய வைக்கும். மகன், மகள் திருமண விஷயமாக முக்கிய முடிவுகள் ஏற்படும். முக்கிய சந்திப்புகளும் நடக்கும். பெண்களுக்கு கணவர் வகை உறவுகளால் டென்ஷன், அலைச்சல் வரலாம். எவ்வளவு பணம் வந்தாலும் பற்றாக்குறையும் இருக்கும்.



**உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அத்தம், 1,2 ம் பாதங்கள்**

எதிர்ப்புகள் நீங்கும். துணிச்சலுடனும், தன்னம்பிக்கையுடனும் செயல்படுவீர்கள். தாய் உடல்நலம் சீராகும். அவர் மூலம் முக்கிய உதவிகள் கிடைக்கும். பேரன், பேத்திகள் வருகையால் குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். பெண்களின் சேமிப்புப் பணம் தங்க நகைகளாக மாறும். காது, தொண்டை சம்பந்தமாக உபாதைகள் வரலாம். கன்னிப் பெண்களின் எண்ணங்கள், ஆசைகள் நிறைவேறும்.




**சித்திரை 3,4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்**

பெண்களுக்கு ஏற்பட்ட இனம் புரியாத பயம், கவலைகள் நீங்கும். வேலை சம்பந்தமாக தேர்வு எழுதியவர்கள், இன்டர்வியூ முடித்தவர்களுக்கு நல்ல தகவல் வரும். பயணத்தின் போது கவனம் தேவை. கைப்பொருள் இழப்பு ஏற்படலாம். திருமண வயதில் உள்ள ஆண், பெண்களுக்கு அவர்கள் விரும் பியபடி நல்ல இடம் அமையும். மாமியார் உடல்நலம் பாதிக்கப்படலாம்.




**விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

ஆதாயம், வரவு, செலவு, தடை, சுபசெய்தி என கலவையான பலன்கள் இருக்கும். திருமணத்துக்காக வரன் பார்த்தவர்களுக்கு பொருத்தமான சம் பந்தம் கூடிவரும். மன உளைச்சல், கோபதாபங்கள் வரலாம். பெண்கள் சகிப்புத்தன்மையுடன் நடப்பது அவசியம். பணவரவு அதிகரித்தாலும் காசு, பணம் தங்காத வகையில் செலவுகளும் கூடும். குழந்தைப் பாக்கியம் எதிர்பார்த்தவர்களுக்கு இனிக்கும் செய்தி உண்டு.



**மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்**

உங்களை உதாசீனப்படுத்திய உறவினர்கள் நெருங்கி வந்து உறவாடுவார் கள். மருமகள் கர்ப்ப சம்பந்தமாக தித்திக்கும் செய்தி வரும். புதிய வேலைக்கு முயற்சித்தவர்களுக்கு நல்ல தகவல் வரும். மாமியார் உடல்நலம் பாதிக்கப் படலாம். வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். பழைய பாக்கிகள் வசூலாகும். தேவை இல்லாமல் புதிய கொள்முதல்கள் செய்ய வேண்டாம்.




**உத்தராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்**

உற்சாகமாக, புதிய உத்வேகத்துடன் செயல்படுவீர்கள். இதுநாள் வரை இருந்து வந்த உடல் சோர்வு, மனச் சோர்வு நீங்கும். புதிய வேலைக்கு முயற்சித்தவர்களுக்கு நல்ல நிறுவனத்தில் வேலை அமையும். பிறந்த வீட்டில் இருந்து பெண்களுக்கு சாதகமான செய்தி வரும். தாய் உடல் நலத்தில் கவனம் தேவை. மகள் கர்ப்ப சம்பந்தமாக இனிக்கும் தகவல் கிடைக்கும். பண வரவு அமோகமாக இருக்கும்.



**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், 1,2,3 ஆம் பாதங்கள்**


பாராட்டு, பரிசுகள் தேடி வரும். தாய் உடல்நலம் சீராகும். அவர் மூலம் முக்கிய உதவிகள் கிடைக்கும். வெளிநாட்டில் இருப்பவர்கள் திடீர் பயணமாக சொந்த ஊர் திரும்புவார்கள். குழந்தைகள் உடல்நலத்தில் கவனம் தேவை. அவசிய தேவைக்காக கடன் வாங்கும் சூழ்நிலை உண்டாகும். கன்னிப் பெண்கள் நிதானமாகவும், விட்டுக் கொடுத்துப் போவதும் அவசியம். அக்கா, மாமாவிடம் இருந்து உதவிகள் வந்து சேரும்.



**பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

வாழ்க்கையில் மிக முக்கிய மாற்றங்கள் நிகழும் நேரம். மாமன் வகை உறவுகளால் மகிழ்ச்சி, ஆதாயம் இருக்கும். குடும்ப விஷயங்களை உறவுப் பெண்களிடம் விவாதிக்க வேண்டாம். தாய் உடல் நலத்தில் கவனம் தேவை. மகள் வழியில் பிரசவ, மருத்துவ செலவுகள் [illegible] கன்னிப்பெண்கள் விரும்பிய ஆடை, ஆபரணங்கள் [illegible]

# பணம் இருந்தாச் போதுமா?



ஒரு ராஜா...செல்வத்தில் மிதந்தவன். பணம் இருந்த காலத்தில் தெய்வத்தின் நினைவு வரவில்லை. சிவனே என்று ஏதாவது விளையாட்டா கக் கூட சொன்னதில்லை. திடீரென உள்நாட்டுப் போர் வந்து எல்லா செல்வமும் போய்விட்டது. ராணிகள், பிள்ளைகள் கொல்லப்பட்டார்கள். வீரர்கள் பயத்தில் ஓடிவிட்டார்கள். கட்டிய துணியுடன் வெளியேறி விட்டான். இரவில் கடும் பசி தாங்க முடியவில்லை. ஒரு திருவோடு எடுத்து முகத்தை மறைத்துக்கொண்டு (மற்றவர்கள் ராஜா பிச்சையெடுக்கிறான் என கேலி செய்து விடக்கூடாதே) பிச்சை கேட்டான். இரவில் பிச்சை கேட்பதும் தவறு, கேட்டவர்க்கு போடாமல் இருப்பது தவறு என்கிறது சாஸ்திரம். எனவே சிலர் பிச்சை போட்டனர்.

ஆசையுடன் திருவோடு எடுத்துக்கொண்டு சாப்பிட இருளில் ஒதுங்கிய போது, தெரியாமல் ஒரு நாயை மிதித்து விட்டான். அது ஆக்ரோஷத்துடன் கடித்து விட்டது. திருவோடு கீழே விழுந்து உணவு பாழானது. காலில் பலத்த காயம்.

செல்வம் இருக்கும் காலத்தில் கடவுளை மறந்து அதிக ஆட்டம் போடக்கூடாது. சரிதானே!

## பிறரை பழித்துப் பேசாதீர்

உங்களை நீங்கள் எவ்வளவு நேசிக்கிறீர்களோ, அதே அளவிற்கு பிறர் மீதும் நேசம் காட்டுங்கள். அவர்கள் உங்களைவிட எந்த விதத்திலும் குறைந்தவர்கள் அல்ல என்பதை புரிந்து கொள்ளுங்கள். எக்காரணம் கொண்டும், பிறரை இழிவாக பேசுதலும், வீண்பழி சுமத்துதலும் கூடாது. இத்தகைய செயல்களால் வீண் பகை வளருமே தவிர, பெயருக்குக் கூட நன்மை உண்டாகாது. மேலும் இத்தகைய குணமுடையவர்களிடம் பாசம், பரிதாபம், இரக்கம், கருணை என எத்தகைய நற்பண்புகளும் இருக்காது.

மனிதர்களுக்கு ஏற்படும் துன்பமானது, வெளியில் எங்கிருந்தோ வருவதில்லை. அவரவர் நடந்து கொள்ளும் விதத்திற்கேற்ப அவர்களுக்கு திரும்பக் கிடைக்கிறது. பிறரை பழிப்பதாலும் நமக்கு துன்பம் வரும். ஆகவே, பழிச்சொல்லை விட்டு, அனைவரிடமும் பரிவுடன் நடந்து கொள்ள வேண்டும். அத்தகையவர்களே இறைவனால் விரும்பப்படுவர். சிலர் மற்றவர்களை பற்றி குற்றம் சொல்லுவதையே வழக்கமாக கொண்டிருப்பர். பிறர் செய்யும் நல்ல செயல்களைக்கூட மாற்றி திரித்துப் பேசுவர். இப்படி செய்யவே கூடாது. அடுத்தவர்களை குற்றம் சொல்லிக் கொண்டிருப்பவர்களிடம் யாரும் நெருங்க மாட்டார்கள். ஒருகட்டத்தில் அவர் தன் சுற்றத்தார் அனைவரையும் இழந்து தனித்து நிற்க வேண்டிய சூழ்நிலைதான் வரும். இறுதிவரையில் அவருடன் சொந்தம், உறவு என யாரும் இல்லாமலேயே போய்விடுவர். ஆகவே, ஒருவர் எத்தகைய செயல் செய்தாலும், அதை விமர்சனம் செய்து பேசாதீர்கள்.

ஔவையார்.




## கடவுள் நமக்கு உறவினர்

ஏதோ ஒரு நினைவுடன் கோடிக்கணக்கில் நாம் ஜெபம் செய்வதைவிட, இறைவனின் நினைவில் ஊறி ஒருமுறை நாம் ஜெபம் செய்வது கோடிக்கணக்கில் செய்ததற்கு சமமாகும்.

1. இறை வழிபாட்டுக்கு தனியாக நேரம் ஒதுக்க வேண்டும். கடமையின் சுமை எவ்வளவு அழுத்தினாலும் இறைவழிபாட்டைத் தவறாமல் ஒழுங்காகச் செய்ய வேண்டும்.
2. இறைவனின் செயல்படி அனைத்தும் நடந்தாலும், நம்முடைய வேலையை நாம் தான் செய்தாக வேண்டும். காரணம், இறைவனின் திருவுளம் மனிதனின் செயல் மூலமே வெளிப்படுகிறது.
3. இறைவன் அனைவருக்கும் உரியவர். இறை நாமத்தைக் கணக்கிட்டு ஜெபித்து அதன் மூலம் புனிதம் அடைவதற்காகவே இறைவன் நமக்கு விரல்களைத் தந்துள்ளான்.
4. கடவுள் நமக்கு மிகவும் நெருங்கிய உறவுக்காரர். இந்த உறவு [illegible] ஆழமாக ஒருவருக்கு இறைவனிடம் இருக்கிறதோ, [illegible] தூரம் அவன் அவரை நெருங்குகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பொலிஸ் போக்குவரத்து பாதுகாப்புக் கட்டுப்பாட்டுப் பிரிவில் அதிகாரியாகப் பணியில் இருந்தேன். என்னுடன் பொலிஸ்வானில் சாரதியாகப் பணிபுரிந்து கொண்டிருப்பவனின் பெயர் புறாடி.

எங்கள் பாதுகாப்புக் கட்டுப்பாட்டிலுள்ள எல்லை போக்ஷயரிலிருந்து ஆரம்பமாகிறது. இரண்டு மாதங்களுக்கு முன்தான் கார் ஓட்டுவதில் மிக முற்போக்கான தேர்வில் வெற்றி பெற்றேன். என்னுடைய பயிற்றுவிப்பாளரிடமிருந்து என் சாரதித்துவத் திறமைக்கான சான்றிதழை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்.

'வாகனங்கள் வீதியில் சரியான பாதையில் சரியான வேகத்தில் செலுத்தப்படல் வேண்டும்' இதனைச் சரிவரக் கண்காணிப்பதே எமது பிரதான கடமை. ஒழுங்கினை மீறும் சாரதிகள் மீது சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதும் எமது பொறுப்புக்களில் ஒன்றாகும்.

லேசாக மழை பெய்து கொண்டிருந்தது. அன்று திங்கட் கிழமை காலை. கிழக்குப் பக்கச் சாலையில் வழமைக்கு மாறாக வாகனப் போக்குவரத்துக் குறைந்து காணப்பட்டது. வீதியில் ஓரமாக ஓரிடத்தில் வானை நிற்பாட்டிவிட்டு வாகனத்திற்குள் உட்கார்ந்து வீதிப் போக்குவரத்தினை அவதானித்துக் கொண்டிருந்தோம்.

புறாடி வழக்கம் போல் அமைதியாக றேடியோவில் எமக்கு வரும் கட்டளைகளை உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருந்தான்.

# எலி ஏற்படுத்திய கிலி


அடுத்த சில விநாடிகளில் அவன் டிரைவர் ஆசனத்தில் வந்து உட்கார்ந்து கொள்வான். தற்சமயம் நானே டிரைவர் இருக்கையில் உட்கார்ந்திருந்தேன்.

எதிர்பாராத விதத்தில் றேடியோவின் மூலம் எமக்குக் கட்டளை பிறந்தது. "பலத்த காயங்கள் உயிருக்கே ஆபத்து. அவர்களைக் காப்பாற்ற உடனே ஆறு, ஏழு எண் வீதிகள் கூடும் இடத்திற்கு விரைந்து செல்லவும்" என்று றேடியோவில் கூறப்பட்டது.

புறாடி தான் அதற்குப் பதிலளித்தான். "செய்தி கிடைத்தது-நாங்கள் புறப்படுகிறோம்" என்று.

நான் ஒரு முறை அவனைப் பார்த்துவிட்டு வானை நானே செலுத்தத் தொடங்கினேன்.

எங்களது வான் போக்குவரத்து நிறைந்த M-4 தெருவில் வேகமாகச் சென்று கொண்டிருந்தது. போக்குவரத்தைக் கட்டுப்படுத்தும் விளக்குகளில் நீல விளக்கு எரியும் போதே எங்கள் வானிலிருந்து எச்சரிக்கை சங்கு ஊதியது.



எங்கள் பொலிஸ் வானுக்கு வழிவிட வாகனங்கள் ஓரமாக ஒதுங்கிச் சென்றன அல்லது நிறுத்தப்பட்டன.

ஒரு விபத்து - அது சாதாரணமாகவும் இருக்கலாம். உயிருக்கு ஆபத்தானதாகவும் இருக்கலாம். நடந்தது கேட்டு உதவிக்காகப் பறந்து கொண்டிருக்கிறோம்.

அதிகாரமும் பொலிஸ் படையின் வலிமையும் ஒன்று சேர்ந்து ஒருவனுக்கு முழு நம்பிக்கையையும் ஏற்படுத்தி விடுகிறது. பலத்த மழையானாலும் கவலைப்படுவதில்லை. ஆபத்திலுள்ளவர்களை எப்படியாவது காப்பாற்றிவிட வேண்டுமென்ற எண்ணமே மேலோங்கியிருந்தது.

நானும் வானைச் சற்று வேகமாகத் தான் ஓட்டிக் கொண்டிருந்தேன். மணிக்கு 140 மைல் வேகத்தில் வான் போவது எங்கள் உயிருக்கே ஆபத்தாக முடிந்துவிடுமோ என்று அருகிலிருந்த புறாடி அஞ்சினான்.

வானை ஓட்டிக் கொண்டே கவனித்த போது புறாடி எதையோ பார்த்துவிட்டு நடுங்குவது போல் உணர்ந்தேன். நான் வானை வேகமாக ஓட்டுவதால் அவன் பயப்படவில்லை. இது எனக்குத் தெரியும். ஏனெனில் அவனே என்னை விடப் பல வகையில் கார் ஓட்டுவதில் சிறந்தவன்.

திடீரென்று புறாடி கால்களை உதறினான். இரண்டு கால்களையும் தூக்கி முன்புறம் வைத்தான். "எலி, எலி" என்று கத்தினான்.

**ஸ்டியரிங்கிலிருந்து கையும், ஆக்சிலேட்டரிலிருந்து காலும் விலகியதால் வான் கட்டுக்கு அடங்காமல் போகத் தொடங்கிற்று. திடீரென்று என்கால் தவறாக பிரேக்கில் மிதித்தது. புறாடி முன்பக்கம் வந்து மோதிக் கொண்டான்.**

அவன் சொன்னதை என்னால் நம்பவே முடியவில்லை. "ஏதோ வானுள் இருப்பதாக முதலிலேயே தோன்றியது. எலி அது பின்புறமிருந்து இப்போது முன்னால் ஓடுகிறது" என்றான் புறாடி.

நான் காலை ஆக்சிலேட்டரிலிருந்து எடுத்தேன். புறாடி பயத்துடன் "காரை நிறுத்தாதே தொடர்ந்து போ.நான் எலியைக் கவனித்துக் கொள்கிறேன்" என்றான்.

அவன் தன் இடத்திலிருந்து எழுந்து வானுள் பின்னால் விபத்துக்குள்ளானவர்களைக் காப்பாற்றவும், முதலுதவி செய்யவும் பயன்படும் சாதனங்கள் இருக்குமிடத்திற்குச் சென்றான். பின்பக்கத்தில் அவன் எலியைத் தேடுவதற்கான சத்தம் கேட்டது.

சற்று நேரத்தில் என் வலக்கால் வலிப்பதுபோல் தோன்றிற்று. பயத்தில் நான் ஸ்டியரிங்கிலிருந்த கைப்பிடியைத் தளர்த்தினேன். ஏதோ காலில் தட்டுப்பட்டது போல் இருந்தது. குனிந்து பார்த்தேன். எலி என் காலில் தாவி ஏறிற்று. அசிங்கமான அந்தப் பிராணியை உதறித் தள்ள முயன்றேன். அது திடீரென்று என் நெஞ்சை நோக்கிப் பாய்ந்தது. நான் ஓரமாக நகர்ந்தேன். வலத்தோள் பக்கம் ஏறிப் பின்பக்கம் ஓடிற்று.

ஸ்டியரிங்கிலிருந்து கையும், ஆக்சிலேட்டரிலிருந்து காலும் விலகியதால் வான் கட்டுக்கு அடங்காமல் போகத் தொடங்கிற்று. திடீரென்று என்கால் தவறாக பிரேக்கில் மிதித்தது. புறாடி முன்பக்கம் வந்து மோதிக்கொண்டான்.

சாலையின் ஒரு பக்கமாக வான் திரும்பி 'கிறீச்' என்ற சத்தத்துடன் நின்றது. மழையில் நனைந்த தரையை டயர்கள் தேய்த்தன. காரை மீண்டும் என் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து சாலையின் சரியான பாதையில் செலுத்த முயலுகையில் என் வானைக் கடந்து ஒரு மஞ்சள் நிறக் கார் வேகமாகப் போவதைக் கண்டேன்.

வானைப் பார்த்த காரின் டிரைவர் திடுக்கிட்டான். அப்போது வான் நூறு மைல் வேகத்தில் தலைகுப்புற விழுவது போல் போய்க்கொண்டிருந்தது.

ஸ்டியரிங்கை ஒடித்து வானை மறுபக்கம் செலுத்தினேன். பிறேக்கினால் டயர்கள் 'கிறீச் கிறீச்' என்று சத்தமிட்டுக் கொண்டிருந்தன. அப்படியும் இப்படியும் தள்ளாடிய வான் கட்டுக்குள் வந்து சாலையின் மையத்தில் போகத் தொடங்கிற்று.

கடைசியில் நான் வானை என் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும் போராட்டத்தில் வெற்றி பெற்றேன். வான் சாலையின் கரடுமுரடான பகுதியில் நின்றது. எலியைப் பார்த்துத் திடுக்கிட்டுத் தொண்ணூறு விநாடி தான் ஆகியிருந்தது. ஆனால் அதற்குள் வான் மூன்று மைல்களைக் கடந்திருந்தது ஆயின் வேகத்தைச் சொல்ல வேண்டுமா?

அசிங்கமான ஒரு சிறு பிராணியால் எங்கள் இரண்டு உயிர்கள் பலியாகவிருந்தன.

அச்சமயம் றேடியோவில் அமைதியான குரலில் செய்தி எமக்கு வந்தது. "அழைப்பது கேட்கிறதா? நீங்கள் வரவேண்டாம். விபத்து சாதாரணமானது தான். ஒருவருக்கும் உயிராபத்து இல்லை" என்றவாறிருந்தது செய்தி.

புறாடியும் நானும் வானிலிருந்து வெளியே குதித்தோம். வானின் எல்லாப் பக்கங்களிலும் எலியைத் தேடினோம். எங்களுக்குப் பின்னால் மஞ்சள் நிறக் கார் வந்து நின்றது. அதன் டிரைவர் கீழே இறங்கி "நலமாக இருக்கிறீர்களா? என்ன நடந்தது? தலைதெறிக்க ஓடி வந்தீர்களே" என்று கேட்டான்.

நான் அவனை ஓரக் கண்ணால் பார்த்தேன். அசடு வழிய "எலி... வானினுள் ஓர் எலி புகுந்துவிட்டது" என்று கூறினேன்.

அவன் மேலும் கீழும் பார்த்துவிட்டு ஒரு சொல்லும் சொல்லாமல் காரில் ஏறி வேகமாகச் சென்றுவிட்டான்.

மறுநாள் வானின் பின்பகுதியில் காகிதம், வைக்கோல், கந்தைத் துணி முதலியவற்றைக் கொண்டு எலி கூண்டு அமைத்திருந்ததைக் கண்டுபிடித்தோம். எலியை... அதன் பிறகு பார்க்கவே இல்லை.

**தமிழில் - ஜெகன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்தகாலம் கடந்தவைதான்!

நீங்கள் நிகழ் காலத்தில் தான் வாழ முடியும்; கடந்தது கடந்ததுதான்.

இந்த வாக்கியத்தை நீங்கள் நினைவில் நிறுத்தி தொடர்ந்து கூறி வந்தால், அது உங்கள் வாழ்க்கையை நல்ல முறையில் மாற்றியமைக்கும்.

நீங்கள் இறந்த காலத்தில் வாழ முடியாது. பழைய சுகங்களை அசை போட்டு அனுபவிக்கலாம். பழைய துக்கங்களை உங்களால் முழுவதும் மறக்க இயலாமல் போகலாம். ஆனால் நீங்கள் பழைய சுகங்களையும் பழைய துக்கங்களையும் பழைய நிகழ்ச்சிகளாகவே பார்க்க வேண்டும்.

**நினைவுகளாக அவை உங்கள் மனதில் நிற்கலாம். ஆனால் நிகழ்கால உணர்ச்சிகளாக அல்ல.**

புத்திசாலித்தனமாக, வெற்றிகரமாக, மகிழ்ச்சிகரமாக வாழ்வதற்கு இது ஒரு முக்கியமான பாடமாகும். பழைய சுகங்களும் பழைய துக்கங்களும் மறைந்து விட்டன. இறந்த காலம் கடந்து சென்றது. கதவை மூடி விடுங்கள்.

பழைய சுகங்களும் பழைய துக்கங்களும் வெறும் நினைவுகளே.



அவற்றை நிகழ்கால உணர்ச்சிகளால் மறுஅவதாரம் எடுக்க வைக்காதீர்கள்.

இறந்தகாலம் சென்று மறைந்தது என்பதை ஒப்புக் கொள்ளுங்கள். கடந்த காலம் வெறும் நினைவு மட்டுமே! நிகழ்காலம் கண் முன் இருக்கும் உண்மை.

பழைய காலத்தை பழைய காலமாக நினைவில் கொள்ளுங்கள். ஆனால் நீங்கள் இறந்த காலத்தில் மீண்டும் வாழ முடியாது. பழைய காலத்தை மாற்றவும் முடியாது. நிகழ்காலத்தில் தான் நீங்கள் வாழ முடியும்.

உங்கள் கடந்த காலத் தவறுகளும் சென்று ஒழிந்துவிட்டன. கடந்த காலத் தவறுகளின் விளைவுகள் சில நிகழ்காலத்திலும் உங்களுக்கு இடைஞ்சல் தரலாம். அவற்றை நீங்கள் நிகழ்காலத்தில் எதிர்கொள்ள வேண்டி வரலாம். ஆனால் பழைய தவறுகள் நடந்து முடிந்து விட்டன. அந்தத் தவறுகளை இன்றைய காலகட்டத்தில் நீங்கள் திருத்திவிட முடியாது.

பழைய வரலாற்று நிகழ்ச்சிகளிலிருந்து நாம் உண்மைகளை உணர்வது போலவே கடந்த காலத் தவறுகளிலிருந்தும் உண்மைகளை உணரலாம். ஆனால், அத்தகைய உண்மைகள் அறிவுபூர்வமாக அணுகப்பட வேண்டும் - உணர்ச்சி பூர்வமாக அல்ல. வரலாற்றுப் படிப்பு போலவே அவற்றை நீங்கள் அணுக வேண்டும்.

பழைய சோகங்கள், தவறுகள், எரிச்சல்கள் இவற்றை நினைத்து உணர்ச்சி வசப்படுவோர் நிகழ்காலச் சங்கடங்களை அதிகமாக்குகிறார்கள். கடந்தகால மகிழ்ச்சியற்ற நினைவுகளை நினைத்து நிகழ்காலத்தில் மகிழ்ச்சியற்று இருப்பார்கள். மகிழ்ச்சியற்ற கடந்த காலம் பற்றி உணர்ச்சிவசப்பட்டால் நிகழ்காலம் மகிழ்ச்சியற்றதாகத்தான் ஆகும்.

**சென்றவை சென்று ஒழிந்தது. கதவைச் சாத்துங்கள்.**

நிகழ்காலத்தில் வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கும் கதவைத் திறந்து வையுங்கள். இன்று கைகொடுப்பவை நிகழ்கால வாய்ப்புகளே!

## தோல்வியே வெற்றிக்கு வழி!

உலகம் யார் வசப்படும் தெரியுமா? எது பலன் தராது என்பதைக் கண்டுபிடித்து அதன் மூலம் எது பலன் தரும் என்று கண்டுபிடிப்பவர்கள் வசப்படும்.

இந்த இரண்டு விஷயங்களிலும் நீங்கள் தேறினால், உங்கள் கையினில் வெற்றி சிக்கும்.

உங்கள் பண ஓலைகளில் எவ்வளவு தொகை வேண்டுமானாலும் நீங்கள் எழுதலாம். அதாவது அந்த அளவுக்கு நீங்கள் பணக்காரராகி விடுவீர்கள்.

வெற்றி என்பது அவ்வளவுதான். (1) எது பலன் தராது என்பதைக் கண்டுபிடிப்பது. (2) மூலம் எது பலன் தரும் என்பதைக் கண்டறிவது.

இரண்டுமே நீங்கள் தெரிந்த பிறரிடமிருந்து கற்றுக் கொள்ளலாம். எது பலன் தராது எது பலன் தரும் என்பதை அறிய இதுவே சிறந்த துரிதமான செலவில்லாத வழி.

ஆனால் அநேக நேரங்களில் இந்தத் தகவல் உங்களுக்கு கிடைக்காமல் போகலாம். (பல்வேறு காரணங்களால்). அப்பொழுது நீங்கள் புதுவழி கண்டுபிடிக்க வேண்டும்.

உங்கள் அனுபவத்திலிருந்து நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டும் - உங்கள் தோல்விகளிலிருந்தும் கூட.

மோட்டார் மெக்கானிஸத் துறையில் மேதையான சார்லஸ் கெட்டரிங் என்பவர் சொன்னார்: 'ஒவ்வொரு கண்டுபிடிப்பாளனும் (கண்டுபிடிக்க முயல்பவனும் என்று ஒரு வரி அவர் சேர்த்திருக்கலாம்) எப்பொழுதும் தோற்ற வண்ணமிருக்கிறான்' என்று.

குறிப்பாக சார்லஸ் கெட்டரிங் சொன்னது இதுதான்: ஒவ்வொரு கண்டுபிடிப்பாளனும் எப்பொழுதும் தோற்ற வண்ணமிருக்கிறான். ஆயிரம் தடவை அவன் முயற்சிகள் தோல்வியில் முடிகின்றன. தோற்பதில் புத்திசாலித்தனமாகத் தோற்பது எப்படி என்று நாம் கற்றுக் கொள்ள வேண்டும் - முயற்சி செய்து தோற்க. தோற்றபின் முயல நாம் சலிப்புக் காட்டக் கூடாது.

பல கோடிக்கணக்கான ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ள ஜெனரல் மோட்டார்ஸ் என்ற ஸ்தாபனத்தை நிலை நிறுத்திய சார்லஸ் கெட்டரிங் புத்திசாலித்தனமாகத் தோற்பது எப்படி என்றும் விளக்கினார்.

1. முயற்சி செய், தோல்வி அடை. தோல்விக்குப் பின் முயற்சி செய்.

2. தொடர்ந்து தோல்வியுறுவதால் தன்னால் முடியாது என்று மனம் தளர்ந்து போகாதே.

சில தோல்விகளால் அகந்தை அழிவுற்ற திடீர் தோல்வியாளர்கள் நிரந்தரத் தோல்வியாளர்களாக மாறி விடுகின்றனர்.

திடீர் தோல்வியாளர்கள் சில நேரங்களில் தோற்றுப் போகிறார்கள். அவர்கள் அகந்தை சின்னாபின்னமாகிறது. அவர்கள் சுயார்வம் இழந்து முயற்சியைக் கைவிடுகிறார்கள். அதனால் நிரந்தரத் தோல்வியாளர்களாக மாறி விடுகிறார்கள். 'சீக்கிரம் விலகிவிடுபவர்' சில நேரத் தோல்விகளால் மனம் பதறி விடுகின்றனர். தங்களுக்குள் சுருண்டு போகிறார்கள். தங்களால் வெற்றி பெற இயலாது என்று அவர்கள் அஞ்சுகிறார்கள். (ஆனால் பல லட்சம் மனிதர்கள் தினந்தோறும் வெற்றிகளை கைக்கொள்கின்றனர்)

எது பலன் தராது என்று கண்டறியும் முயற்சியில் நாம் ஆயிரக்கணக்கான முறை தோல்வி அடைகிறோம். அதன் மூலம் எது பலன் தரும் என்பதைக் கண்டறிகிறோம். திடீர் தோல்வியாளர்கள் - சில முறை தோல்வியுறும் போதே மனம் தளர்பவர்கள் - நூறு முறை, ஆயிரம் முறை தோல்வியுறுவது சகஜம் என்ற விஷயத்தை நம்மிடம் கற்றுக் கொள்ள வேண்டும்.

**வெற்றி பெற நிச்சயமான வழி ஆரம்பத் தோல்விகள்தான்.**

தோல்விகளைக் கண்டு அஞ்ச வேண்டியதில்லை. தவிர்க்கத் தேவை இல்லை. தோல்விகளை ஏற்றுக் கொள்வது நமக்குப் பழகிப் போக வேண்டும்.

சார்லஸ் கெட்டரிங் சொன்னது போல புத்திசாலித்தனமாகத் தோற்பது வெற்றிக்கான திறவு கோல் ஆகும்.

தோல்வி உங்கள் பெருமையைக் குலைத்து விடக் கூடாது. தவறுகள் உங்கள் மனத்தில் குற்ற உணர்ச்சியை உருவாக்கி விடக் கூடாது.

அறிந்து செய்யும் தவறுகளை நாம் கண்டு கொள்ளாமல் விட முடியாது. அறிந்து செய்யப்படுபவை தவறுகள் அல்ல; கெட்ட செயல்கள்.

உங்களுக்கு நன்றாகத் தெரிந்து கெட்ட செயல் செய்யக் கூடாது. அது புத்திசாலித்தனமில்லை; பாராட்டுக்குரிய செயலுமில்லை தர்மமுமில்லை.

தெரிந்து செய்யும் கெட்ட செயல் குற்ற உணர்வை ஏற்படுத்தும்; பின் விளைவுகளும் தொடரும்.

தெரிந்து செய்யும் கெட்ட செயல் உடனடியாக ஆதாயமோ, சுய திருப்தியோ அளித்தாலும் குற்ற உணர்விலிருந்து தப்ப முடியாது; அது கூடுதலாகவே இருக்கும் என்கிறார்கள் மனோதத்துவ நிபுணர்கள்.

அது அப்படி இல்லை என்று வாதிட முயலாதீர்கள்.

தெரிந்து செய்யும் கெட்ட செயல்கள் என்று வகைப்படுத்த முடியாத எண்ணற்ற தவறுகளை நாம் செய்த வண்ணமிருக்கிறோம் - ஏனென்றால் நாம் முழுமையானவர்கள் அல்ல. சாதாரண மனிதர்கள்.

எது பலன் தராது என்பதைச் சோதித்து அறியும் முயற்சியில் நேர்மையான தவறுகள் செய்யக்கூடும். அவை நம் மனதைக் குலைக்கவோ, குற்ற உணர்வை ஏற்படுத்தவோ கூடாது. ஏனென்றால் எது பலன் தரும் என்பதை நாம் அறியும் முயற்சியின் முதல் படி அது.

சோதனையான தோல்விகள் வெறும் புள்ளி விவரங்கள் மட்டுமே - திட்டமிட்ட அதர்மமாக அவற்றைச் சேர்க்கக் கூடாது. குற்ற உணர்ச்சி இங்கு இடம்பெறக்கூடாது. ஏனென்றால் எது பலன் தரும், வெற்றி அளிக்கும் என்று அறியும் முயற்சியில் நீங்கள் ஒரு படி முன்னேறி உள்ளீர்கள்.

தோமஸ் எடிசன் பத்தாண்டுகள் தவறுகளாகவே சோதனை புரிந்து வந்தார். இறுதியில் நிக்கல் - இரும்பு - ரசாயன பாட்டரியை கண்டுபிடித்தார்.

எடிசனும் அவரது விஞ்ஞான நண்பர்களும் பதினேழாயிரம் தாவரங்களைப் பரிசோதித்து வகைப்படுத்திய பிறகே லேடக்ஸ் என்ற ரப்பர் போன்ற பொருளை ஒரு தாவரத்திலிருந்து உற்பத்தி செய்யலாம் என்று கண்டுபிடித்தனர். ஒருமுறை வெற்றி காண பதினேழாயிரம் தவறுகள் அல்லது தோல்விகள் ஏற்படலாம். இப்பொழுது தவறுகளின், தோல்விகளின் மதிப்பை, தேவையை நீங்களே உணருங்கள்.

எடிசன் வேறு எவரையும் விட அதிகம் தோல்விகள் கண்டவர். எது பலன் தராது என்பதை அவர் நிறையவே கற்று உணர்ந்தார். இந்தக் கல்விக்குப் பின் வெற்றி அவருக்குச் சுலபமானது. பல கோடி ரூபாய் மதிப்புள்ள 1093 கண்டுபிடிப்புகளை அவர் பதிவு செய்தார்.

தவறு செய்துவிடுவோம் என்று அஞ்சி நீங்கள் பெரிய வெற்றி அடைய மறுக்கிறீர்களா?



வெற்றியின் படிகள் நீளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்கள் இல்லாத சிலந்தி இதுதான்!





கண்களே இல்லாத சிலந்தி (எட்டுக்கால் பூச்சி) முதல் முறையாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. லாவோசில் இந்த அரிய சிலந்தி கிடைத்ததாக இங்கிலாந்தின் பிராங்பர்ட்டில் உள்ள ஆராய்ச்சி நிலையத்தினர் அறிவித்துள்ளனர்.

இந்த சிலந்தியின் உடல் பகுதி 12 மில்லி மீட்டரும், கால்கள் 6 சென்ரி மீற்றர் நீளமும் இருக்கின்றன. கண்களே இன்றி அது இயங்குவது எப்படி என்ற ஆய்வு நீடிக்கிறது.

# மலை உச்சியில் தொங்கும் சவப் பெட்டிகள்:



இறந்தவர்களின் உடலை பெட்டியில் வைத்து மலை உச்சியில் தொங்கவிடும் வித்தியாசமான வழக்கம் சீனா, பிலிப்பைன்ஸ் உள்ளிட்ட நாடுகளில் வாழும் சிலரால் பின்பற்றப்படுகிறது.

மலைஉச்சியில் உடலை வைப்பதால் அவர்கள் இறைவனை நெருங்குகின்றனர் என்றும் அவர்களது ஆத்மா சாந்தியடைகிறது என்றும் அப்பகுதியினர் நம்புகிறார்கள்.

இறந்தவர்களை புதைக்கும் அல்லது எரிக்கும் வழக்கமே உலகம் முழுவதும் நடைமுறையில் உள்ளது. ஆனால் சீனா, பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா உள்ளிட்ட நாடுகளில் சில பகுதிகளில் இறந்தவர்களின் உடலை ஒரு பெட்டியில் வைத்து மலை உச்சியில் தொங்க விடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

இந்தோனேசியா, பிலிப்பைன்சில் சில இடங்களில் இந்த நடைமுறை காணப்பட்டாலும் சீனாவிலேயே இந்த வழக்கம் அதிகம் உள்ளது. 3 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இம்முறை வழக்கத்தில் இருந்து வருவதாக அப்பகுதியினர் கூறுகின்றனர்.

தென்மேற்கு சீனாவின் மடங்க்பா என்ற பகுதியில் 3 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வசித்த 'போ' பிரிவை சேர்ந்த பழங்குடியினர் முதன்முதலில் சவப்பெட்டிகளை மலைப் பகுதிகளில் தொங்கவிடுவதை வழக்கமாக கொண்டிருந்தனர்.

நீண்ட காலமாக நோயால் பாதிக்கப்பட்டு மரணத்தை நெருங்கிக் கொண்டிருப்பவர்கள், மரணத் தருவாயில் இருப்பவர்களை சவப்பெட்டியில் வைத்து மலைஉச்சிக்கு எடுத்துச்சென்று தொங்கவிடுவார்கள் என்று புராதனக் குறிப்புகளில் உள்ள தகவல்கள் தெரிவிக்கின்றன.


இது புனிதமான செயல். மற்ற மக்களிடம் இருந்து விலக்கி எடுத்து சென்று, மலை உச்சியில் வைப்பதால் அவர்கள் இறைவனை எளிதில் நெருங்குகின்றனர். இறந்த பின்பு இவர்களது ஆத்மா சாந்தியடைகிறது என்று அவர்கள் நம்புவதாகவும் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

சீனாவின் கிழக்கு பகுதியில் வசிக்கும் ஒரு சிலர் தற்போதும் இந்த முறையை பின்பற்றி வருவது குறிப்பிடத்தக்கது. இதுதொடர்பாக தீவிர ஆராய்ச்சிகளும் நடந்து வருகிறது.

## போர்த்துக்கல் தலைநகரத்தின் புகைப்படத் தொகுப்பு

போர்த்துக்கல் நாட்டின் தலைநகரமாகவும், மிகப் பெரிய நகரமுமாக விளங்குவது லிஸ்பன் ஆகும். மேலும் 2.8 மில்லியன் மக்கள் வசிக்கும் இந்த லிஸ்பன் நாட்டின் அழகினைப் படத்தில் காணலாம்.







## ஸ்வீடன் நாட்டின் பனிக்கட்டி விடுதி




ஸ்வீடன் நாட்டில் Kiruna என்ற பனிக்கட்டி உணவு விடுதி காணப்படுகிறது. அனைத்து வசதிகளையும் கொண்டு காணப்படும் இந்த பனிக்கட்டி விடுதியில் 66 அறைகள் உள்ளன.

# பல வண்ணங்களில் மாற்றம்பெறும் பனிக்குகைகளைப் பார்த்ததுண்டா?

அலாஸ்காவில் காணப்படும் பனிமலைகள் பல மில்லியன் ஆண்டுகளாக உறை நிலையில் காணப்படுவதுடன், உலகப்புகழ் பெற்றதுமாகும். புவிமட்டத்துக்கு அடியில் காணப்படும் வித்தியாசமான பனிக் குகைகள் கிரிஸ்டல் போன்ற வடிவமைப்பில் அமைந்துள்ளன. மேலும் இவை சூரிய ஒளிபட்டதும் வித்தியாசமான நிறங்களில் ஒளிரும் தன்மைகொண்டவை.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## குத்துவிளக்கு விற்கும் தனுஷ்!

'களவாணி', 'வாகை சூடவா' பட இயக்குநர் சற்குணம், அடுத்து இயக்கும் படம், 'சொட்டவாளக்குட்டி'! இந்தப் படத்தில் கும்பகோணத்தில், குத்துவிளக்கு செய்து விற்கும் வேடத்தில் நடிக்கிறார் தனுஷ். இவருக்கும், பல் டாக்டருக்குப் படிக்கும் வனரோஜா என்ற பெண்ணுக்கும் இடையிலான காதலைத்தான், முழுக்க முழுக்க நகைச்சுவையுடன் சொல்கிறார் சற்குணம்.




## இது சாருவோட டேட்டிங்

தமிழ் கலாச்சாரத்துக்கு ஒத்துவராத இந்த சம்பவம்தான் 'இது சாருவோட டேட்டிங்' இப் படத்தின் கதையாக உருவாகிறது. டேட்டிங் செல்லும் ஜோடி ஒன்று சமூக விரோத கும்பலிடம் சிக்கிக்கொள்கிறது. அதன்பிறகு நடப்பது என்ன என்பது கிளைமாக்ஸ். முதல்நாள் காலையில் தொடங்கி மறுநாள் காலை வரை 24 மணி நேரத்தில் நடக்கும் கதையாக காட்சிகள் அமைக்கப் பட்டுள்ளன. இவ்வாறு இயக்குநர் நாகராஜன் கூறினார்.

## நானும் கிளாமர் கேர்ள் தான்!

அமலா, தற்போது ராம் சரணுடன் ஒரு படத்தில் நடித்து வருகிறார். கிளாமர் வேடம் என்று இயக்குநர் கூறியவுடன் டபுள் ஓ.கே என்று கூறி விட்டாராம். இப்படம் வெளிவந்தால் தமிழில் தனக்கு இப்போதுள்ள இமேஜ் போய், கிளாமரான கதாபாத்திரங்களில் நடிக்க வாய்ப்பு இருக்கிறது என்று நம்புகிறாராம்.





'மதராசப்பட்டினம்', 'தாண்டவம்' படங்களில் நடித்துள்ள எமிஜாக்சனும், தன்னுடன், 'ஏக் தீவானாதா' என்ற இந்திப் படத்தில் நடித்த பிரதீக்கின் பெயரை, தன் கையில் பச்சை குத்தியுள்ளார். இது காதலின் வெளிப்பாடு தானா? என்று எமியைக் கேட்டால், எனக்குத் தெரியவில்லை. ஆனால், பிரதீக்கை எனக்கு ரொம்பப் பிடிக்கும்; அதற்காகவே பச்சை குத்தி உள்ளேன், என்கிறார்.



## டாக்டரா, எக்டரா தனன்யா தவிப்பு

டொக்டருக்கு படிக்க வேண்டும் என்பது எனது நீண்டநாள் கனவு. நான் நடிகையாக வேண்டும் என்பது அம்மாவின் கனவு. இரண்டையும் நிறைவேற்றி விட்டேன். இனி வாழ்க்கையை டொக்டராகத் தொடருவதா, நடிகையாகத் தொடருவதா என்று சின்னக் குழப்பம் இருந்தது. இப்போது தெளிவாகிவிட்டேன். நல்ல வாய்ப்புகள் வந்தால் தொடர்ந்து நடிப்பது. இல்லாவிட்டால் மருத்துவப் படிப்பைத் தொடர்வது என்கிறார் அவர்.

## இசை, நடனம் பற்றிய படம்

சிம்பு, வரலெட்சுமி நடித்து வரும் 'போடா போடி' படம் நீண்ட நாட்களாகத் தயாரிப்பில் இருந்து வருகிறது. இப்படம் முழுக்க முழுக்க ஒரு இசை, நடனம் சம்பந்தப்பட்ட படமாகும். விக்னேஷ் சிவா இப்படத்தினை இயக்கி இருக்கிறார்.





## கவர்ச்சிக்கு மறுக்காத சார்மி

சஸ்பென்ஸ், ஆக்ரோஷம், கவர்ச்சி கலந்த வேடத்தில் சார்மி நடித்துள்ள படம் 'சிவாங்கி'. காதல், ஆக்ஷன், த்ரில்லர் மூன்று அம்சங்களும் கலந்த கதை. கவர்ச்சிக் காட்சிகளுக்கு மறுப்புச் சொல்லாமல் நடித்தார் சார்மி என்று இயக்குநர் ஓஷோ துளசிராம் தெரிவித்திருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ... பெயரை பச்சை குத்திய எமி!





## புது பிசினஸ் ஆரம்பிக்கும் ஹீரோயின்கள்

'யுவன் யுவதி' படத்தில் நடித்த ரீமா கல்லிங்கல் பேஷன் டிசைன் ஆடைகள் மற்றும் ஆபரணங்கள் கண்காட்சி நடத்தத் தொடங்கி இருக்கிறார். தனது குழந்தைப் பருவ தோழிகள் சுவேதா, நீதா ஆகியோரையும் இந்த பிசினஸில் கூட்டு சேர்த்திருக்கிறார். நவீன டிசைன்களுடன் கூடிய தனது புதிய சேகரிப்புகளுடன் கொச்சியில் இரண்டு நாள் கண்காட்சி நடத்தினார் ரீமா.

## கவர்ச்சி வேடங்களில் நடிக்கத் தயார்: ஸ்வாதி!



கவர்ச்சி வேடத்தில் நடிக்க ஸ்வாதி தயாராகி விட்டார் என கொலிவுட் தரப்பில் கூறப்படுகிறது. தற்போது தனது கவர்ச்சி ஆல்பம் ஒன்றை கொலிவுட்டில் உலாவ விட்டிருக்கிறார். இதைப் பார்த்தாவது, முன்னணி கதாநாயகர்களுடன் நடிக்க வாய்ப்பு கிடைக்குமா என எதிர்பார்ப்புடன் காத்திருக்கிறார் நடிகை ஸ்வாதி.

## என் வாழ்க்கையில் மாறுபட்ட ஆக்ஷன் த்ரில்லர் படம்

இயக்குநர் திரு இயக்கத்தில் விஷால் நடித்துள்ள படம் 'சமர்' அதிரடி சண்டைக் காட்சிகளுடன் உருவாகியுள்ளது, என்று சொல்லும் விஷால், தன் கேரியரில் மாறுபட்ட ஆக்ஷன் த்ரில்லர் படமாக, 'சமர்' இடம்பெறும் என்கிறார்.



## சாரா நடிக்கும் புதிய படம்



இயக்குநர் கௌதம் இயக்கும் 'சென்னையில் ஒரு நள்ளிரவு' படத்தில் நாயகனாக 'மைனா' படத்தில் நடித்த விதார்த் நடிக்கிறார். அவருடன் மலையாள நடிகர் அனூப் பமும் நடிக்கிறார். மேலும் இப்படத்தில் 'தெய்வத் திருமகள்' படத்தில் விக்ரமின் குழந்தையாக நடித்த சாராவும் நடிக்கிறார்.



## ஸ்லிம் டாப்சி கொழு கொழு டாப்சியானார்!!

'ஆடுகளம்', 'வந்தான் வென்றான்' படங்களில் ...த்தபோது, கொழுகொழுவென இருந்த டாப்சி, அதன்பிறகு, தெலுங்கு, இந்தி படங்களில், ...மனைக் குறைத்தார். தற்போது, அஜீத்தின் புதிய படத்தில் ...டிக்கும் டாப்சியை, அப்படத்தின் ...யக்குநரான விஷ்ணுவர்தன், மீண்டும், கொழுகொழுவென மாற உத்தரவு போட்டுள்ளார். அதனால், உணவுக் கட்டுப்பாடு, உடற்பயிற்சிகளை ஓரங்கட்டிவிட்ட டாப்சி, சதை போடும் ...ணவுகளாக பார்த்து, புகுந்து விளையாடி வருகிறார்.

## விமர்சனம்




பப்லு, தீபிகா, சங்கர்தாதா, பாக்ஸர் சூரி, சாரி, குள்ளநாராயணன், சக்தி இவர்களின் உதவியோடு இயக்குநர் மாதேஷ் ரசிகர்களை மிரட்டுகிற படம் 'மிரட்டல்'.

ராயபுரம் பகுதியில் இரண்டு தலைகள். ஒருத்தர் சிங்கர்தாதா (பிரபு). இன்னொருவர் பாக்ஸர்சூரி (பிரதீப் ராவத்). உன் எல்லையை நான் தாண்ட மாட்டேன். என் எல்லையை நீ தாண்டக் கூடாது என்று இரண்டு தரப்புக்கும் இடையில் ஒரு ஒப்பந்தம். ஒப்பந்தத்தை மீறுகிற சங்கர் தாதாவுடைய ஆளை, போட்டுத் தள்ளுகிறான் பாக்ஸர் சூரியோட மகன். சூடாகுகிற சங்கர் தாதா பாஸ்கரின் மகனை போட்டுத்தள்ள... வெறிகொள்ளும் பாக்ஸர், சங்கர் தாதா தங்கை தீபிகாவுக்கு (ஷர்மிளா) குறி வைக்கிறார். பாஸகரிடமிருந்து தன் தங்கையைக் காப்பாற்ற போராடுகிற சங்கர் தாதாவுக்கு உதவி செய்கிற பப்லு (வினய்), தாதாவுக்குத் தெரியாமல் அவர் தங்கையை திருட்டுத்தனமாக் கல்யாணமும் செய்கிறான். இது எதுவுமே தெரியாமல் சுற்றுகிற தாதா, கடைசியில் பப்லுவுக்கே தன் தங்கையை கல்யாணம் செய்து வைக்கிறார். அப்போது வில்லன் கடப்பாரையை வைத்துகொண்டு கிளைமாக்ஸில் சங்கர் தாதா பேசுகிற ஒரே ஒரு பஞ்ச் டயலாக்கில் திருந்தி விடுறார்!

தங்கை மேல் பாசமழை பொழிவது, அவளைப் பார்த்தவன் கண்ணைத் தோண்டுவது, விபூதி வைத்து விட்டவன் விரலை எடுப்பது என்று தாதா செய்கிற அட்டூழியங்கள் நெளிய வைக்கின்றது. இது ஒரு பக்கம் என்றால்... தாலியை மறைத்து தங்கச்சி ஆடுகிறதும், அதை அண்ணனின் மனைவி கண்டுபிடித்துக் கத்துவதும், பிறகு அதை புருஷனிடம் மறைப்பதும், அதை அந்த ஆள் நம்புவதும், இது எதுவுமே தெரியாமல் வில்லன் எந்த நேரமும் கோடாரியை வைத்து மரம் வெட்டிக் கொண்டே இருப்பதும்... (அய்யோ! கண்ணை கட்டுதுடா சாமி) புத்தி சாலித்தனமாக ஏமாத்துவது தான் தில்லுமுல்லு என்று இல்லாமல், அடுத்தவன் சுலபமாக ஏமாந்தால் அதுவும் கூட தில்லுமுல்லுதான் என்று கொஞ்சங்கூட கூச்சப்படாமல் சொல்லியிருக்கிறார்கள். இந்தப் பொறுப்பை முழுமையாகத் தோளில் சுமந்து கொண்டு சுத்துகிற ஹீரோ வினய், அவ்வப்போது பொறுப்பை இறக்கி வைத்து விட்டு ஹீரோயினையும் சுமக்கிறார். அவ்வளவு தான்! ஆனால் இத்தனையும் தாண்டி 'மிரட்டல்' ருசிக்க காரணம்... சந்தானம். தூள் சந்தானம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






"அப்பா பொறுமையைப் பற்றி ஒரு பழமொழி சொல்லுங்க!"

'பொறுத்தார் பூமி ஆள்வார்!"

"அப்ப பொறுத்துக்கொண்டு இந்த ரிப்போர்டில் கையெழுத்துப் போடுங்க!"




அரசர் கிருஷ்ண சந்திரர் அரியணையில் வீற்றிருந்தார். அப்போது நவாபின் தூதன் அங்கு வந்தான். அரசர் அவனை வரவேற்றார்.

அந்தத் தூதன் இரண்டு வாத்துக் குஞ்சுகளை அவர் முன் வைத்தான்.

அரசர் வாத்துக் குஞ்சுகளைக் கவனித்தார். இரண்டும் ஒரே நிறம்; ஒரே அளவுடையதாக இருந்தது. அவற்றிற்குள் எந்த வேறுபாடும் கண்டுபிடிக்க முடியவில்லை. ஒன்றும் புரியாமல் தூதனைப் பார்த்தார் அரசர்.

"அரசே! நவாப் அவர்கள் இந்த வாத்துக் குஞ்சுகளை அனுப்பி உள்ளார். இவற்றில் எது ஆண் வாத்து என்பதைத் தாங்கள் கண்டு பிடிக்க வேண்டும். அப்படிக் கண்டுபிடித்ததற்கான காரணத்தையும் சொல்ல வேண்டும். அப்படிச் செய்தால், இந்த ஆண்டு நீங்கள் கப்பம் கட்ட வேண்டாம். செய்ய இயலாவிட்டால் உங்கள் சிற்றரசை எங்கள் நாட்டுடன் இணைத்துக் கொள்வோம்," என்றான் தூதன்.

அரசர் மீண்டும், அந்த வாத்துக் குஞ்சுகளை உற்றுக் கவனித்தார். கடினமான சோதனைதான் தனக்கு வைக்கப்பட்டுள்ளது என்பதைப் புரிந்து கொண்டார்.

இவற்றில் எது ஆண் வாத்து என்பதைக் கண்டுபிடிக்க முடியுமா?" என்று அமைச்சர்களை பார்த்துக் கேட்டார். அமைச்சர்கள் எல்லாரும் அமைதியாக இருந்தனர்.

எப்படி கண்டுபிடிப்பது என்று கவலையில் ஆழ்ந்தார் அரசர்.

அங்கு வேலை செய்துக் கொண்டிருந்த கோபால் இதைக் கவனித்தான். அவன் அரசனிடம் சென்று, "அரசே! கவலைப்பட வேண்டாம்... எது ஆண் வாத்து என்பதை நான் கண்டுபிடிக்கிறேன்!" என்றான்.

"எப்படிக் கண்டுபிடிப்பாய்?" என்று கேட்டார்.

"அரசே! அந்த இரண்டு வாத்துக் குஞ்சுகளையும் அரண்மனைக் குளத்திற்கு எடுத்து வரச் சொல்லுங்கள் தூதனை. நாம் அனைவரும் அரண்மனை குளத்திற்கு செல்வோம்," என்றான்.

எல்லாரும் அரண்மனைக் குளத்தை அடைந்தனர். தூதனிடமிருந்து இரண்டு வாத்துக் குஞ்சுகளையும் வாங்கினான் கோபால். அவற்றை அரண்மனைக் குளத்தில் விட்டான். இரண்டும் மகிழ்ச்சியாக நீந்தத் தொடங்கின. அவற்றில் முன்னால் சென்ற வாத்தை சுட்டிக் காட்டி", இதுதான் ஆண் வாத்து!" என்றான்.

"எப்படி அவ்வளவு உறுதியாகச் சொல்கிறாய்?" என்றார் அரசர்.


அரசே! முன்னால் செல்கிற வாத்து ஆண் வாத்து. பின்னால் செல்கிற வாத்து பெண் வாத்து. எப்போதும் ஆண் வலிமைமிகுந்ததாக இருக்கும். பெண் மென்மையானதாக இருக்கும். அதனால், முன்னால் நீந்திச் சென்றது ஆண் வாத்தாகத்தான் இருக்க வேண்டும்," என்றான். கோபால் உனக்கு எப்படி நன்றி சொல்வது என்றே எனக்குத் தெரியவில்லை," என்ற அவர் அவனைக் கட்டித் தழுவிக்கொண்டார்.

அந்த வாத்துக் குஞ்சுகளை எடுத்துக் கொண்ட தூதன் அங்கிருந்து ஏமாற்றத்துடன் புறப்பட்டான்.




தமிழ் ஆசிரியர்: "நேர்முகத்தேர்வுக்கு போனாயே... 'வினைத்தொகை' பற்றி கேட்டார்களா... 'பண்புத்தொகை' பற்றிக் கேட்டார்களா?"

மாணவனட: "பணத்தொகை'ப் பற்றி கேட்டார்கள்"








Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கண்களில் பயத்தோடு ஈட்டன் ஹவுஸ் அகதிகள் நிலையத்தில் அவன் நின்றுகொண்டு இருந்தான். அகதிகள் எப்போதும் பயத்துக்கு உரியவர்கள்தான். டோக்கன் நம்பர் கொடுத்து இருந்தார்கள். கையில் இருக்கும் நீல நிறத் துண்டில் இலக்கம் 14 என்று அச்சிடப்பட்டு இருந்தது. அவனுக்குச் சிரிப்பு வந்தது. 14-ம் திகதிதான் அவனது பிறந்த திகதியும். வாழ்க்கையில் 14-ம் திகதி, அவனுக்கு எந்த சுபிட்சத்தையும் கொண்டுவரவில்லை.

வலது பக்கம் ஒரு செக்யூரிட்டி இருந்தார்.



# நிராகரிக்கப்பட்டவன்

அவர் ஆப்பிரிக்க நாட்டுக்காரர். இடது பக்கச் சுவரில், நீங்கள் உங்கள் எல்லாப் பொருள்களையும் பாதுகாப்பு அதிகாரியிடம் ஒப்படைத்துவிட்டு டோக்கன் வாங்கிக் கொள்ளுங்கள் என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது.

அகதிகள் நிலையம் அகதிகளுக்கு எப்போதும் உவப்பானதாக இல்லை. கையெழுத்து போடப் போகும்போது மனம் ஒன்றுக்குப் பத்து தரம் அடித்துக்கொள்ளும்.

லண்டனில் ஈட்டன் ஹவுஸ் என்றால், அகதிகள் மத்தியில் பிரபல்யமான இடம். பக்கத்திலேயே ஹீத்ரோ விமான நிலையம். அதற்குப் பக்கத்தில் அகதிகளைத் திருப்பி அனுப்பும் ஹாமன்ஸ் வேத் சென்டர்.

அவன் தனது மணிக்கட்டுக்குப் பக்கத்தில் இருக்கும் தழும்பை ஒரு தரம் பார்த்துத் தடவிக்கொண்டான்.

கொழும்பு கோல் பேஸில் வைத்து, பிறந்த இடம் ஒட்டுசுட்டான் என்று அடையாள அட்டையில் இருக்க... பொலிஸ்காரன் பிடித்துக்கொண்டு போய், பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் வைத்து, கையில் நைலோன் கயிறைக் கட்டி மேசையோடு இணைத்து இறுக்கியதில் வந்த தழும்பு அது. இன்னும் அது மாறவில்லை.

இப்ப சாட்டட் ஃபிளைட் பிடித்து இலங்கைக்கு ஆட்களை அனுப்புறாங்களாம் என்று வரிசையில் நின்ற 15-ம் இலக்கக்காரத் தமிழர் ஒருவர் கொஞ்சம் சத்தம் போட்டுச் சொன்னார்.

எப்போது அகதிகளைத் தடுத்து வைப்பார்கள்... எப்போது வெளியில் விடுவார்கள்... எப்போது அனுப்புவார்கள் என்ற எந்த விடயமும் அகதிகளுக்குத் தெரியாது.

எல்லோரும் அவரவர் சாமான்களை அருகில் உள்ள பெட்டியில் போட்டுத் தயாராக வைத்திருங்கோ என்று ஆங்கிலத்தில் சொன்னார் அந்த ஆப்பிரிக்க செக்யூரிட்டி.

லண்டனில் ஆப்பிரிக்க நாட்டுக்கார செக்யூரிட்டிகள்தான் பாதுகாப்பு வேலையில் அதிகமாக இருக்கிறார்கள். தமிழர்களுக்கு, ஆப்பிரிக்க நாட்டவர்கள், வெள்ளைக்காரர்கள் என்றால், பயம் கொஞ்சம் அதிகம் தான்.

அவனுக்குக் கண்கள் கலங்கி முட்டி இருந்தன. ஓவென்று அழ வேண்டும்போல் இருந்தது. ஊர் உறவுகளை விட்டுவிட்டு வந்து, அந்நிய நாட்டில் யாரும் அற்ற அநாதையாக, விசாவும் இல்லாமல் நாய்போல அலைந்துகொண்டு இருக்கிறான். இரண்டு கண்களும் வெட்பியாரத்தால் கலங்கி நீர் வழிந்தது.

கண்ணீரைத் துடைத்துக்கொண்டான். லண்டனுக்கு வந்த ஒன்பது வருடங்களில் அகதியாய்ப் பதிந்தது. பதில் வராமல், நாலு வருடங்கள் கழிந்தது. இப்போது ஐந்து வருடங்களாக ஒன்றுமே சொல்கிறார்கள் இல்லை ஹோம் ஒஃபிஸ்.

ஆனால், மாதம் ஒரு முறையாக இருந்த சைன் பண்ணுகிற விடயம், இப்போது இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை ஆகிவிட்டது.

இது பெரும் மனஉளைச்சல். இங்கு அவனோடு இருந்த சீலன், போன வாரம் வீட்டின் மேல் மாடியில் இருந்து குதித்துத் தற்கொலைக்கு முயன்றான். கடைசியில் முழங்கால் எலும்பு முறிந்து, வெஸ்ட் மிடில் செக்ஸ் வைத்தியசாலை வார்டில் படுத்து இருக்கிறான்.

அவன் கண்ணீரைத் துடைத்துக்கொண்டான். பக்கத்தில் நின்ற யாரும் பார்க்கவில்லை.

தற்செயலாக இன்று தடுத்துவைத்து, இலங்கைக்கு நாடு கடத்தினால் என்ன செய்வது? என்று நினைக்கும்போதே அவனுக்கு நெஞ்செல்லாம் நடுங்கியது. நினைத்துப் பார்க்கவே பயமாய்க் கிடந்தது.

கொழும்பில் போய் இறங்க... என்ன நடக்கும் கைது செய்வார்களோ? பிரத்தியேகமான சித்திரவதைக் கூடத்துக்குக் கொண்டு போவார்களோ? நினைக்க நினைக்கப் பயமாக இருந்தது.

ச்சீ... அப்படி நடக்காது. வற்றாப்பளை கண்ணகை ஆச்சி அப்படி விடமாட்டாள் மனதை சமாதானப்படுத்திக் கொண்டான்.

ஆனால், கண்ணகை அம்மனை எப்படி நம்புறது? கண்ணகை அம்மனுக்கு முன்னாலைதானே, 40 ஆயிரம் உயிர்கள் கொன்று குவிக்கப்பட்டன. கண்ணகை அம்மனுக்கு முன்னாலைதானே, நந்திக் கடல் ரத்த ஆறாக ஓடியது. கண்ணகை அம்மனின் அருள், ஆமிக்காரரின் செல்லுக்கு முன்னால் தவிடுபொடி ஆகிவிட்டதே. காட்டு விநாயகர் எல்லாத்தையும் பார்த்துக்கொண்டுதானே இருந்தார்... அவராலையும் மக்களைக் காப்பாற்ற முடியவில்லையே. எல்லாம் அழிந்துபோய்விட்டதே - நம்பிக்கைக்கும் கையறு நிலைக்கும் இடையில் ஊசலாடியது அவன் நினைவுகள்.

திரும்பிப் பார்த்தான்... ஒன்று, இரண்டு, மூன்று... பின்னால் எட்டாவதாக சிவத்தார் நின்றுகொண்டு இருந்தார். அவர் லண்டனுக்கு வந்து மூன்று வருடங்கள் ஆகிவிட்டன. அவரும் அகதியாகப் பதிந்து இன்னும் ஒரு முடிவும் வராமல் கையெழுத்திட வந்து இருக்கிறார்.

சிவத்தார் குடியிருந்த வாடகை வீட்டுக்குப் பக்கத்தில்தான் அவனும் குடியிருந்தான். சிவத்தாருக்கு தான் உயர் ஜாதி என்ற தடிப்பு அவர் மனதில் எப்போதும் இருக்கும். இங்கு லண்டனில் ஜாதியையும் கூட்டிக்கொண்டுதான் யாழ்ப்பாணத்தார் அலைகின்றனர். என்னதான் முற்போக்கு, கல்வியறிவு, வளர்ந்த நாட்டில் இருக்கிறோம் என்று பீற்றிக்கொண்டு இருந்தாலும், ஜாதி, தமிழர்கள் மத்தியில் பரவி, நச்சு வேராகிக் கிடக்கிறது.

ஒரே ஜாதியில்தான் கலியாணம் முடிப்பார்கள், ஒரே ஜாதியோடுதான் பழகுவார்கள். ஆனால், தமிழர்களின் புதிய தலைமுறை அவற்றை உடைத்துக்கொண்டு போகிறது. தமிழ்ப் பெண்பிள்ளைகள், பத்துக்கு எட்டுப் பேர் வெள்ளைக்காரரைத் தான் காதலிக்கிறார்கள். கலியாணமும் செய்கிறார்கள். அவர்களைக் கட்டுப்படுத்த முடியாது.

சிவத்தார் அவனைப் பார்த்துச் சிரித்தார். அவனும் அவருக்குக் கையால் சைகை காட்டிவிட்டுத் திரும்பி நின்றான்.

"இப்போது இங்கு லண்டனில் உள்ள ஹோம் ஒஃபிஸ்காரங்கள், இலங்கை அரசாங்கத்தோடு இங்கை உள்ள இலங்கைத் தூதரகத்தோடு தொடர்பு வெச்சிருக்கிறாங்களாம்... உண்மையோ... பொய்யோ... தெரியாது" என்று அவனுக்குப் பின்னால் நின்ற தமிழர் இவனுக்குச் சொன்னார்.

"உண்மைதான். ஜோபன் மக்டொனால்ட் என்கின்ற லேபர் எம்.பி., டி.வி-யிலை பேசினதை நானும் கேட்டனான். ஹோம் ஒஃபிஸ்காரர், அகதிகளின் விடயங்களை இங்கை உள்ள இலங்கை உயர் ஸ்தானிகர் அலுவலகத்தோடைப் பகிர்ந்து கொள்கிறார்களாம். மற்றது எமர்ஜன்சி பாஸ்போட் எடுக்கப் போக, முதல் என்றால் ஒன்றும் கேட்காமல் எல்லாம் கொடுத்தார்கள். ஆனால், இப்ப நிறையக் கேட்டு எழுதுகிறார்களாம் ஹை கொமிசனில். முக்கியமாக, புலிகளுக்கும் உங்களுக்குமான தொடர்பு என்ன என்பதுதான் பிரதானமான கேள்வியாம்"

ஒவ்வொருத்தராக செக்யூரிட்டியைக் கடந்து, அவர்கள் வைத்திருக்கும் மெட்டல் டிடெக்டரைக் கடந்து போக வேண்டும். கையில் ஒன்றுமே வைத்திருக்கக் கூடாது. ஒரு குன்றுமணி அளவு சாமானும் இருக்கக் கூடாது. அவன் எல்லாவற்றையும் எடுத்துப் பெட்டியில் வைத்தான். இடுப்புப் பட்டியையும் கழட்டிவைத்தான். ஹோம் ஒஃபிஸ் பேப்பரோடு, மெயின் ஹோலுக்குள் போடப்பட்டு இருந்த நீல நிற பிளாஸ்டிக் கதிரையில் போய் அமர்ந்தான்.

பதற்றமான நேரத்தில் அவனுக்கு உள்ளங் கையில் வியர்வை வரும். இப்போதும் வியர்வை வந்தது. கைக்குட்டையால் கையைத் துடைத்துக்கொண்டான். திரும்பத் திரும்ப வியர்வை வந்து கை கசிந்துகொண்டு இருந்தது.

அதனால், ஹோம் ஒஃபிஸ் பேப்பர்களை ஒரு பிளாஸ்டிக் கவரில் போட்டுக் கையில் வைத்திருந்தான்.

(அடுத்தவாரம் வரும்)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கை

சந்தோசமான குடும்ப வாழ்க்கைக்கு நாம் பின்பற்றும் வழிமுறைகளும் முக்கிய காரணமாகிறது.

குடும்பத்தில் இணையக்கூடிய தம்பதிகள் நல்ல ஆரோக்கியமாக இருக்கிறார்களா என்பதையும், அவர்களுடைய ரத்தக் குறிப்பையும் அறிந்து கொள்வது நல்லது. திருமணத்துக்குப் பிறகு, அதற்கு முன்பிருந்த உறவுகளைச் சொல்லி, அதனால் பிரச்சினைகள் உருவாவதை தவிர்த்து விட வேண்டும். முன்பிருந்த காதல், பிரச்சினை குடும்பங்களுக்கு வழி வகுத்து விடும். ஆகவே, அந்த மாதிரியான எண்ணங்களுக்கு முழுக்குப் போட்டு விடுங்கள். திருமணத்துக்குப் பிறகும் முந்தைய சில உறவுகளைத் தொடர்ந்தால் அதுவே உங்கள் வாழ்க்கைக்கு எதிராக அமைந்து விடும். இன்றைய கொலை, கற்பழிப்பு போன்ற குற்றங்களுக்கு அடிப்படைக் காரணமே இந்த மாதிரியான விடயங்கள் தான்.

திருமணமாகி கணவர் வீட்டுக்குச் செல்லும் பெண், அங்குள்ள கணவரின் உறவினர்கள் மற்றும் சுற்றத்தாரையும் ஏற்றுக் கொண்டு அன்பு, மரியாதை செலுத்த வேண்டும். வெவ்வேறு இடங்களில் இருந்த ஆணும், பெண்ணும் இணையும்போது பல்வேறு விடயங்களில் முரண்பாடுகள் ஏற்படவே செய்யும். அதை சரி செய்து ஒத்துப் போவது நல்லது.

வாழ்க்கை என்றால் நிறைய நெருக்கடி இருக்கத்தான் செய்யும். ஆனால் அதையெல்லாம் சகஜமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். உங்களுடைய துணைவரிடம் நல்ல குணங்கள் இருக்கும்போது அதைக் கண்டு கொள்ளாமல், குறைபாடுகளை மட்டும் பெரிதாக்குவதை தவிர்க்க வேண்டும். இருவரது குறைபாடுகளையும் பரஸ்பரம் ஏற்றுக் கொண்டு அதற்கு நல்லதோர் தீர்வு காணலாம். வரவுக்கேற்றபடி செலவு செய்ய இருவரும் முன்வர வேண்டும். செலவுகளைக் கட்டுப்படுத்த முயற்சிக்கவும். மாதந்தோறும் பட்ஜெட் தயார் செய்து தேவையற்ற செலவுகளைக் கட்டுப்படுத்துவது நல்லது.

பெரும்பாலான குடும்பங்களில் பிரச்சினைகள் உருவாக பெரியவர்களும் காரணமாகின்றார்கள்.

சுதந்திரமாக இருக்கும் இன்றைய தலைமுறையை... பெரியவர்கள் சிலர் தங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் உட்படுத்த நினைக்கிறார்கள். இது தவறானதாகும். பெற்றோர் மற்றும் உறவினர்கள் குதர்க்கமான பேச்சு மூலம் தம்பதிகளுக்குள் பிரச்சினைகளை உருவாக்கக் கூடாது. எந்தச் செயலாக இருந்தாலும் எல்லோரும் ஒன்றாக அமர்ந்து பேசி, அதை செயல் படுத்தினால் பிரச்சினை ஏற்படாது. அதேமாதிரி, எந்தப் பிரச்சினை ஏற்பட்டாலும் அனைவரும் அமர்ந்து பேசினால் பிரச்சினையை சமாளிக்க முடியும். உடல்நிலையில் பாதிப்பு ஏற்படும்போது காட்டும் விசேட அக்கறை, தம்பதிகளுக்குள் ஒரு நல்ல இணக்கமான சூழ்நிலையை ஏற்படுத்தும்.

இப்போது 65 சதவீதம் பேர் பாலியல் விடயத்தில் முழுமையானவர்களாக இல்லை. இதனால் ஏற்படும் தவறான கருத்துகளும் குடும்ப வாழ்க்கைக்கு உலை வைத்துவிடும். எனவே குடும்ப வாழ்க்கையை தொடங்கும் போது, பாலியல் குறித்த முழுமையான அறிவு அவசியம்.


குடும்பத்தில் தம்பதிகளுக்குள் ஏதாவது பிரச்சினை என்றால் அதை இருவருமாக பேசி முடிக்க வேண்டும். அதைவிடுத்து மூன்றாவது மனிதரை இந்த விடயத்துக்குள் நுழைய அனுமதிக்க வேண்டாம். அதேபோல், திருமணத்திற்குப் பிறகு மனைவியை கவனிக்கும் பொறுப்பை பெற்றோரிடம் ஒப்படைப்பதும் தவறு. இதனால் பிரச்சினைகள் தான் தோன்றும். தம்பதிகளில் யாராவது ஒருவருக்கு பிரச்சினை என்றால் அதை கனிவான அணுகுமுறை மூலம் முடிவுக்கு கொண்டு வந்து விடலாம். இந்த நேரங்களில் பொறுமையான மனநிலையும் முக்கியம்.

மகளிர் சுடர்

# பருக்களால் உண்டாகும் தழும்புகளை போக்கும் வழிகள்

முகத்தின் அழகையும், கவர்ச்சியையும் கெடுப்பது பருக்களும், வடுக்களும்தான். கரும்புள்ளிகள் இருந்தாலே கவலை சூழ்ந்து கொள்ளும். இதனுடன் பருவடுக்கள் வேறு இருந்தால் பெண்கள் மனச் சோர்வுக்கு ஆளாகிவிடுவார்கள். பருக்களையும், வடுக்களையும் போக்குவதற்காக கடைகளில் விற்பனை செய்யப்படும் இரசாயனம் கலந்த கிறீம்களை வாங்கி உபயோகிக்கும் பெண்கள் பலர் உள்ளனர். இது சில மாதங்களுக்கு மட்டுமே பயன் தருகின்றன. ஆனால், நம் வீட்டில் உள்ள சில பொருட்களைக் கொண்டு பருக்களையும், பரு வடுக்களையும் நிரந்தரமாக நீக்கலாம் என்கின்றனர் நிபுணர்கள்.

விட்டமின் சி சத்து நிறைந்த பழங்கள் முகத்தில் உள்ள பருவின் வடுக்களைப் போக்கும்.




எலுமிச்சை இதில் மிகச்சிறந்த நிவாரணி. பாலை கெட்டியாகக் காய்ச்சி அதில் எலுமிச்சை சாறு விட்டு பின்பு அதை குளிரவைக்கவும். பின்னர் தனியாக ஒரு துணியில் வடிகட்டி கிண்ணத்தில் எடுத்து வைத்துக் கொள்ளவும். இந்தக் கலவையை இரவு தூங்கச் செல்வதற்கு முன்பு முகத்தில் தடவி அடுத்த நாள் காலையில் முகம் கழுவினால் பருக்கள் மாறி முகம் மென்மையாக பொலிவு பெறும்.

எலுமிச்சையை துண்டுகளாக வெட்டி அதனை பருக்களின் தழும்புகளின் மேல் பூசலாம். வாரத்திற்கு இரண்டு மூன்று நாட்கள் செய்து வர தழும்புகள் மறையும்.

தக்காளி மற்றும் வெள்ளரிக்காயை துண்டுகளாக வெட்டி வைத்துக்கொண்டு பருக்களின் தழும்புகளின் மேல் தடவுங்கள். அதேபோல் சந்தனப் பவுடருடன் கறுப்பு உழுந்துப் பவுடரைக் கலந்து அதனுடன் சிறிதளவு ரோஸ் வோட்டர் கலந்து பேஸ்ட் போல செய்யவும். இந்தக் கலவையை இரவில் உறங்கும் போது முகத்தில் பூசிவிட்டு மறுநாள் காலையில் கழுவலாம். வாரம் ஒருமுறை இவ்வாறு செய்து வர தழும்புகள் மறையும்.

துளசி இலையை எடுத்து நன்கு காய வைத்துப் பொடி செய்து அதில் மஞ்சள்தூள் கலந்து குளிப்பதற்கு முன்பு முகத்தில் பூசவும். நன்கு உலர்ந்த பிறகு குளித்தால் சில நாட்களிலேயே பருக்களும், வடுக்களும் காணாமல் போய்விடும். வெந்தயக் கீரையை அரைத்து அதை முகத்தில் போட முகப்பருக்கள் மாறி முகம் மென்மையாகும்.

சின்ன ஐஸ் கட்டியை எடுத்து அதனை பொலித்தீன் கவரில் போட்டு முகத்தில் தடவி வர தழும்புகள் படிப்படியாக மறையும்.



தொப்புளில் வளையம் மாட்டுவது, மார்பில் மாட்டுவது, அதையும் தாண்டி எங்கெங்கோ வளையம் மாட்டுவதெல்லாம் இன்றைய இளசுகளின் பாஷனாகி விட்டது. அத்தகைய பாஷன் பிரியைகளின் வயிற்றில் புளியைக் கரைப்பது போல வந்திருக்கிறது புதிய ஆய்வு முடிவு ஒன்று.

உடலில் மாட்டும் வளையங்களும், அதன் விளைவுகளும் குறித்து வெளியாகும் முதல் ஆய்வு இது என்பதால் இது சிறப்புக் கவனம் பெறுகிறது.

அதாவது அசாதாரண இடங்களில் வளையம் மாட்டிக் கொண்டு வளையவரும் இளசுகளில் மூன்றில் ஒருவருக்கு இதனால் உபாதைகள் ஏற்படுகின்றனவாம். மருத்துவமனைக்குச் சென்று மருத்துவ உதவி பெறுமளவுக்கும், உயிருக்கே ஆபத்தாய் போகுமளவுக்கும் இந்த சிக்கல்களில் சில வலிமையானது என்கிறது இந்த ஆராய்ச்சி.

வீக்கம், இரத்தக் கசிவு, அலர்ஜி, புண் என பல வடிவங்களில் இந்தச் சிக்கல்கள் நேர்வதாகத் தெரிவித்துள்ளது இந்த ஆய்வை நிகழ்த்திய லண்டனிலுள்ள ஹெல்த் புரட்டக்ஷன் ஏஜென்சி எனும் அமைப்பு.


10053 பேரிடம் நடத்தப்பட்ட இந்த மருத்துவ ஆய்வில் பலர் அங்கீகரிக்கப்படாத இடங்களில் சென்று இந்த வளையங்களை மாட்டிக் கொள்வதாகவும், அப்படிப்பட்ட சூழலில் சிக்கல் அதிகரிப்பதாகவும் தெரிய வந்துள்ளது.

இந்த ஆய்வில் பங்கு பெற்றவர்களில் 33 வீதம் பேர் தொப்புளிலும், 19 வீதம் பேர் மூக்கிலும், 9 வீதம் பேர் நாக்கிலும், 9 வீதம் பேர் மார்பிலும், எட்டு வீதம் பேர் புருவத்திலும், நான்கு வீதம் பேர் உதட்டிலும், இரண்டு வீதம் பேர் அந்தரங்க இடத்திலும், மூன்று வீதம் பேர் இன்ன பிற இடங்களிலும் வளையங்களை மாட்டிக் கொண்டிருந்தார்கள் என்கிறது அறிக்கை.

நாக்கு, மார்பு மற்றும் அந்தரங்க இடங்களில் வளையம் மாட்டியிருந்தவர்களில் பெரும்பாலானோருக்கு மருத்துவ உதவி தேவைப்பட்டிருக்கிறது.

இந்த உடலில் வளையங்கள், நகைகள் மாட்டும் போக்கு இன்றைய இளசுகளிடையே வலுவடைந்து வருகிறது. ஆர்வக் கோளாறினாலும், வயசுக் கோளாறினாலும் இதுதான் புதுப் பெஷன் என்று நகை மாட்டுபவர்களை இந்த அறிக்கை சற்று யோசிக்க வைத்தால் நலம் பயக்கும்.

# சுவையான பாகற்காய் பிரட்டல்





தேவையான பொருட்கள்:
பாகற்காய்
வெங்காயம்
மிளகாய்த் தூள்
உப்பு
புளி
இளநீர் (பாகற்காயினைக் கசப்பின்றிச் சுவையாக சமைப்பதற்கு)
வெந்தயம்

பாகற்காயினைச் சிறிய சிறிய துண்டுகளாக வெட்டி நன்றாகப் பொரிக்காது அரைப் பருவம் ஆகும் வரை பொரித்து எடுத்துத் தனியாக வைத்துக் கொள்ளவும். புளி புளியோடு உங்களுக்குத் தேவையான சிறிதளவு இளநீரையும் சேர்த்துக் குழைத்து பிசைந்து வைத்திருக்கவும். (பாகற்காய் சமைக்கும் போது இளநீர் சேர்த்தால் கசப்பின்றி, சுவையானதாக பாகற்காய் சமையல் இருக்கும்.)

வெங்காயத்தை நீங்கள் வழமைபோல உணவிற்குச் சிறு சிறு துண்டுகளாக வெட்டுவது போன்று வெட்டி, சிறிதளவு வெந்தயம் சேர்த்து வதக்கத் தொடங்கவும்.

வதக்கும் போது வெங்காயம் அரைப் பருவமாகப் பொரிந்து வருகையில், ஏற்கனவே பொரித்து வைத்துள்ள பாகற்காயினையும் சேர்த்துப் பொரிக்கவும். பாகற்காயோடு, வெங்காயத்தினையும் சேர்த்து பின்னர் தேவையான அளவு மிளகாய்த் தூளினைச் சேர்க்கவும். இறுதியாகப் புளிப்புளியோடு சேர்த்துக் கலந்துள்ள இளநீரையும் ஒன்றாகச் சேர்த்து அவிய விடவும். அவிந்து வருகையில் சிறிதளவு உப்புச் சேர்த்து வற்ற விட்டு இறக்கவும்.

சிறிது நேரத்தில் சுவையான பாவற்காய் கறி தயார்!

கொஞ்சம் தண்ணிப் பருவமாக அல்லது குழம்புப் பருவமாக இந்த வற்றல் கறியினை உண்ண விரும்புவோர் சிறிதளவு அல்லது இரண்டு மேசைக்கரண்டி தேங்காய்ப்பாலினையும் சேர்த்துக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மது அருந்துவதை நிறுத்த...

## உடல் நலம்



முடிதாசீனார் - அவுனியா.

கேள்வி: 42 வயது. மதுபாவனையை நிறுத்த விரும்புகிறேன். ஆனால் இதற்காக ஆங்கில மருத்துவத்தில் பாவிக்கும் மருந்து வயிற்றுக் குமட்டலையும் பெரும் உடல் உபாதைகளையும் ஏற்படுத்துவதால் பயமாக உள்ளது. உங்கள் ஆலோசனையை வேண்டுகிறேன்.

பதில்: சில காலங்களுக்கு முன் மதுவிற்கு அடிமையானவர்களை விடுவிக்க பயன்படுத்தப்பட்ட Disulfiram என்ற மருந்து பற்றி நீங்கள் குறிப்பிடுகிறீர்களென நினைக்கிறேன். வயிற்றுக் குமட்டல், வாந்தி முதலியன இம்மருந்தால் ஏற்படும் என்பது உண்மைதான். இந்த மருந்தின் மூலம் எவ்வாறு மதுவிலிருந்து விடுதலை பெறுவது என்று கேட்டால் அந்த வழியே இவ்வாறான வயிற்றுக் குமட்டலை, வாந்தியை ஏற்படுத்தி அதை மதுவுடன் தொடர்புபடுத்தி மதுவில் வெறுப்பை ஏற்படுத்துவதாகும். ஆனால், இன்றைய மனித வாழ்வில் புத்திக் கூர்மை மிக மிக அதிகரித்த நிலையில் இந்த மருந்தால் தான் வாந்தி ஏற்படுகின்றது; மதுவினால் அல்ல என்பதை நோயாளியால் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும். எனவே, இவ்வாறான மருந்து மூலம் மதுவிலிருந்து விடுவிப்பது இனிமேலும் காலத்துக்கு ஏற்ற ஒரு முறை அல்ல.

இதை மருத்துவர்கள் நன்கு அறிவர். எனவே, மருத்துவ ஆராய்ச்சி இது விடயத்தில் அடுத்த கட்டத்திற்குள் பிரவேசித்திருக்கிறது. அதிஷ்டவசமாக நம்நாட்டில் பாவனையில் உள்ள பல மருந்துகள் முன்னேற்றமடைந்த நாடுகளில் கைவிடப்பட்ட மருந்துகளாகும். நீங்கள் கூறிய Disulfiram என்ற மாத்திரையும் இவ்வகையில் அடங்குவதே. இன்று ஆங்கில மருத்துவத்தில் Acamprosoate, Metadoxine முதலிய புதிய மாத்திரைகள் பாவனைக்கு வந்துள்ளன. இவை மூலம் மதுப்பாவனையிலிருந்து விடுபடுவது இன்னும் இலகுவாக்கப்பட்டுள்ளது. ஆனால், பிரச்சினை என்னவென்றால் இந்த மருந்துகள் இலங்கையின் மருந்தகங்களிலோ வைத்தியசாலைகளிலோ இன்னும் பரவலாக கிடைக்கத் தொடங்கவில்லை. மேலே நீங்கள் கூறிய மருந்துபோல் இந்த மருந்துகள் வயிற்றுக் குமட்டல், வாந்தி, இயலாமை போன்ற குணங்குறிகளை ஏற்படுத்தாது. எனவே, நோயாளிகள் இந்த மருந்தை ஏற்றுக்கொள்ளும் தன்மையும் அதிகமாகும். முன் கூறியது போல் இந்தப் புதிய மருந்துகள் இலங்கையின் மிகப்பெரிய மருந்தகங்களில் அதுவும் மிக உயர்ந்த விலையில் தான் கிடைக்கின்றன. இதுதவிர மதுக் கம்பனிகளும் சிகரட் கம்பனிகளும் இவ்வாறு மதுவிலிருந்தும் சிகரட்டிலிருந்தும் விடுவிக்கும் மருந்துகள் நாட்டினுள் கொண்டுவரப்படுவதைத் தடுக்க பின் கதவாலும் குறுக்குவழிகளிலும் நடவடிக்கை எடுத்து வருகின்றன. நாட்டினுள் ஒரு புதிய மருந்து வகை பாவனைக்கு விடப்பட முன்னர் உரிய அரச அதிகார அமைப்புக்களால் அங்கீகரிக்கப்பட வேண்டும். மதுக் கம்பனிகளும் சிகரட் கம்பனிகளும் இந்த மருந்துகள் அங்கீகரிக்கப்படுவதைத் தடுக்க உரிய அதிகாரிகளுக்கு லஞ்சம் வழங்குகின்றன. இது தவிர இந்த மருந்துகளால் பல பக்க விளைவுகள் ஏற்படும் என்ற கட்டுக் கதைகளையும் பரப்பிவிட முயல்வதும் நடக்கிறது.

எனவே, பயமின்றி உங்கள் மருத்துவரது ஆலோசனைப்படி நீங்கள் இந்த மருந்துகளை உட்கொள்ளலாம். மதுவின் கோரப் பிடியிலிருந்து விடுபட நீங்கள் முயல்வது மிகவும் பாராட்டத்தக்கது. பல மதுப் பிரியர்களிடம் இந்த விருப்பம் உள்ளூர இருப்பதில்லை. இப்படியானவர்களைப் பொறுத்தவரை இம் மருந்துகளின் பயன் சற்றுக் குறைவாகவே இருக்கலாம். தொழில்நுட்பத்தில் நாளாந்தம் முன்னேற்றம் ஏற்படுவது போலவே மதுப்பாவனை போன்றவற்றிலும் விடுவிக்கும் மருந்துகள் மருத்துவ உலகால் தொடர்ந்து கண்டுபிடிக்கப்பட்டே வருகின்றன. இன்னும் சில காலத்தில் இப்போதுள்ள புதிய மருந்துகளை விடவுமே மிகக் கூடிய பயனுள்ள மருந்துகளும் கண்டுபிடிக்கப்படக் கூடும்.

டொக்டர் எஸ்.சுரேந்திரன்

வாசகர்களே!
உங்கள் உடல் நலம் தொடர்பான கேள்விகளுக்கு
டொக்டர் எஸ்.சுரேந்திரன்
பதிலளிக்கின்றார். உங்கள் கேள்விகளை பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.


உடல் நலம்
சுடர் ஒளி வாரமலர்,
இல.361, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.

## காற்றோட்டமில்லாத அறையில் நித்திரை கொள்வது ஆபத்தானது!

நீங்கள் 10 அடிக்கு 10 அடி அறைக் கதவை பூட்டிக் கொண்டு, ஜன்னல்களையும் பூட்டிக் கொண்டு தூங்குகின்றவரா, அப்படியானால் உங்களுக்கு சிறுநீரக செயலிழப்பு (KIDNEY FAILURE), மூட்டுக்களில் வலி (RHEUMATOID ARTHRITIS) (கழுத்து, முழங்கை, முன்கை மணிக்கட்டு, கீழ்முதுகு வலி, முதுகுத் தண்டு வட எலும்பில் வலி, முழங்கால் மூட்டு வலி, கணுக்கால் எலும்பில் வலி, குதிக்கால் வலி ), சிறு நீரகக் கல், இவை எல்லாம் உண்டாக வாய்ப்புள்ளது. இதை வாத நோய்கள் என்பார்கள்.

அக்குபஞ்சரில் சிறுநீரகத்தை இரண்டாவது நுரையீரல் என்பார்கள். 10அடிக்கு 10 அடி அறைக் கதவை பூட்டிக் கொண்டு, ஜன்னல்களையும் பூட்டிக் கொண்டு ஒருவர் மட்டுமே தூங்கினாலோ 3 அல்லது 3 1/2 மணி நேரத்திற்குள்ளாக அறைக்குள்ளே உள்ள காற்றில் உள்ள பிராண வாயுவின் அளவு குறைந்துவிடும்.

பொதுவாக காற்றில் பிராண வாயுவின் அளவு 21% இருக்கும். ஆனால் பூட்டிய அறையில் ஒருவர் தூங்கும் போது மூச்சின் அளவு அதிகரிக்கும் வேகத்தாலும் அறையில் உள்ள காற்றில் பிராண வாயுவின் அளவு குறைந்து 10% சதவிகிதத்துக்கும் கீழே வந்துவிடும். அப்போது நுரையீரலால் இரத்தத்தில் பிராணவாயுவின் அளவை சரியாக வைக்க முடியாத போது, உடலில் உயிர் காப்பாற்றப்பட பிராண வாயுவின் தேவை அதிகரிக்க அதிகரிக்க, சிறுநீரகம் அந்த அத்தியாவசியமான வேலையை செய்ய முற்படுகிறது. அது நம் உடலில் தண்ணீரில் உள்ள ஒக்ஸிஜனை எடுத்து உடலுக்குக் கொடுக்கும் வேலையைச் செய்கிறது. (தண்ணீரில் இரு பங்கு ஒக்ஸிஜனும் ஒரு பங்கு ஹைட்ரஜனும் உள்ளது. இது போக நீரில் ஒக்ஸிஜனும் கரைந்து உள்ளது). எனவே தான் சிறுநீரகம் இரண்டாவது நுரையீரல் என்று அழைக்கப்படுகிறது.



சிறுநீரகம் மேற்கண்ட வேலையை செய்ய ஆரம்பித்தவுடன் அதுவரை அது செய்து கொண்டிருக்கும் வேலையான இரத்தத்தை வடிகட்டி சுத்தப்படுத்தும் வேலை நிறுத்தப்படுகிறது. நம் உடலில் உள்ள தண்ணீரில் ஒக்ஸிஜன் அளவு குறைந்தவுடன் அந்த கழிவு நீர் வெளியேற நமக்கு சிறுநீர் கழிக்கும் உணர்வு தூண்டப்படுகிறது. மீண்டும் புதிய ஒக்ஸிஜன் நிறைந்த தண்ணீர் தேவைப்படுவதால் தண்ணீர் தாகமும் தூண்டப்படுகிறது. இதனாலேயே சிறுநீரகம் அதீதமான வேலைப் பளுவுடன் தள்ளாடுகிறது.

இதனால் சிறுநீரகத்தில் அழுக்குகள் தேங்குவதோடு, இரத்தத்தில் யூரிக் அமிலம் முதலான அழுக்குகள் அதிகரிக்கின்றது. மூட்டுகளில் யூரிக் அமிலம் படிவங்களாகப் படிகின்றன.

விளைவு யூரிக் அமிலம் படிவுகளாக சிறுநீரகத்தில் படிந்து கற்களாக மாறுகிறது. இரத்தத்தில் யூரிக் அமிலத்தால் இரத்தம் அழுக்கடைந்து இரத்தத்தின் தடிமம் அதிகரித்து இரத்த அழுத்தம் அதிகரிக்கிறது. இதனால் இதயம் அதிக வேலைப் பளுவுக்கு ஆளாகிறது.

மூட்டுகள் யூரிக் அமிலப் படிவங்களால் அரிக்கப்படுகின்றன. இதனால் மூட்டுக்களில் வலி உண்டாகின்றது. இதனாலேயே A/C அறையில் தூங்கும் போது அதிக தண்ணீர் தாகம் எடுக்கிறது, மூட்டுக்களில் வலி வருகிறது.

இவ்வளவு பிரச்சினைகளையும் உண்டாக்கும் காற்றோட்டமில்லாத அறையில் நித்திரை கொள்ளாதீர்கள்.



## உடல் ஆரோக்கியத்திற்கு உலர் திராட்சை!

உலர் திராட்சையில் உடலுக்கு வலிமைதரும் சத்துக்கள் பல நிறைந்துள்ளன. இந்த உலர் திராட்சையில் அதிக அளவு சுக்ரோஸ், ப்ரக்டோஸ் நிறைந்துள்ளன. விட்டமின்களும், அமினோ அமிலங்களும் உடலுக்கு நல்ல சக்தியை அளிக்கின்றன. மேலும் பொட்டாசியமும், மக்னீசியமும் காணப்படுவதால் அமிலத் தொந்தரவுகள் அதிகம் ஏற்படாது. விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளும் போட்டியாளர்களுக்கு தேவையான உடல் வலிமையை உலர் திராட்சை தருகிறது. விளையாட்டு வீரர்களுக்கு பயிற்சியின் மத்தியில் சாப்பிடக்கூடிய, ஊக்கமளிக்கக் கூடிய உணவாக பயன்படுத்துவது நன்மை பயக்கும் என்று ஆய்வின் முடிவுகள் தெரிவிக்கின்றன. மேலும் இரத்தத்தில் ஹீமோகுளோபின் அளவு குறைவாக இருப்பவர்கள் தொடர்ந்து உலர் திராட்சையை உட்கொண்டால் ரத்தசோகை குணமாகும். இதில் உள்ள தாமிரச்சத்துக்கள் ரத்தத்தில் சிவப்பணுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும்.

மஞ்சள் காமாலை உள்ளவர்கள் தினமும் இருவேளை உலர் திராட்சையைச் சாப்பிட்டு வர காமாலை நோய் குணமடையும். உலர் திராட்சைப் பழத்தில் 50 பழங்களை எடுத்து பசும்பாலில் போட்டு காய்ச்சி ஆற வைத்து, பழத்தை சாப்பிட்டு விட்டு பாலைக் குடித்தால் காலையில் மலச்சிக்கல் பிரச்சினை சரியாகும்.

உலர் திராட்சையில் உள்ள கல்சியத் சத்து எலும்பு மற்றும் பற்களின் வளர்ச்சிக்கு உதவுகிறது. குழந்தைக்கு பால் காய்ச்சும் போது அதில் இரண்டு பழத்தை உடைத்துப் போட்டு காய்ச்சிய பின் பாலை வடிகட்டிக் கொடுத்தால் தேக பலம் உண்டாகும். குழந்தைகள் நல்ல ஆரோக்கியமாக வளர்வார்கள்.

தொண்டைக்கட்டு பிரச்சினை இருந்தால் இரவு படுக்கும் முன் 20 உலர் திராட்சைப் பழங்களைச் சுத்தம் செய்து பசும்பாலில் போட்டுக் காய்ச்சி, 10 மிளகைத் தூள் செய்து கொஞ்சம் பனங்கற்கண்டு சேர்த்து கலக்கிக் குடித்தால் தொண்டைக்கட்டு பிரச்சினையிலிருந்து நிவாரணம் பெறலாம்.

மூல நோய் உள்ளவர்கள் தினசரி உணவுக்குப் பின்னர் காலையிலும், மாலையிலும் 25 உலர்திராட்சைப் பழங்களைத் தொடர்ந்து 7 நாட்கள் சாப்பிட்டு வந்தால் குணம் பெறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌன மனவெளிகள்

35

தேர்தல் தொடர்பான ஒரு முக்கிய ஆலோசனைக் கூட்டம் நடத்துவதற்காக பொன்.கந்தையா அவர்களின் வீட்டில் விதானையார், குடியரசார் உட்பட ஏராளமானோர் கூடியிருந்தனர். அங்கு கூடியிருந்த பண்டிதர்கள், வித்துவான்களின் தொகையைப் பார்த்த போது கந்தமுருகேசனாரின் வார்த்தைகளின் சக்தியைக் குடியரசாரால் புரிந்துகொள்ள முடிந்தது. யாழ்ப்பாணத்திலிருந்தும் வைத்திலிங்கம் மாஸ்ரர், வீ.பொன்னம்பலம், மாதகல் கந்தசாமி போன்ற பல வேட்பாளர்களும் வந்திருந்தனர்.

பொன்.கந்தையா ஒரு பக்கமாக இருந்து சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவர் எம்.சி.சுப்பிரமணியத்துடனும் வி.ஏ.கந்தசாமியுடனும் ஏதோ ஆழமான விஷயங்கள் தொடர்பாகப் பேசிக் கொண்டிருந்தார்.

கூட்டம் தொடங்க சிறிது நேரமிருந்தபடியால் விதானையாரும் குடியரசாரும் சற்றுத் தொலைவில் மாமரத்தின் கீழ் கதிரையைப் போட்டு அமர்ந்திருந்தனர். விதானையார் முதல் நாள் மாலை தாம் கமலியுடன் கதைத்ததையும் அவள் பொன்னம்பலத்தையும் இராமலிங்கத்தையும் வெட்டப் போவதாகக் கோபாவேசம் கொண்டதையும் குடியரசாருக்குச் சொல்லி வியந்து கொண்டிருந்தார்.

அப்போதுதான் பஸ்ஸிலிருந்து இறங்கி நடந்து வந்த காத்திகேயன் மாஸ்ரர் உள்ளே வரவே குடியரசார் "வாங்கோ மாஸ்ரர்" என்று அழைத்து அருகில் அமர்த்திக் கொண்டார்.

அவர்களின் கதையை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த காத்திகேயன் மாஸ்ரர் "வெட்டப் போறன் எண்டு நிக்கிற பிள்ளையை வெட்டி வீழுத்தி விடச் சொல்லி விடுவம்" என்றார்.

குடியரசார் திகைத்துப் போய்விட்டார்.

"என்ன மாஸ்ரர் பிறகு நிலைமையே தலைகீழாப்போம்"

மாஸ்ரர் சிரித்துவிட்டுச் சொன்னார். "நான் கத்தியாலையே வெட்டச் சொன்னனான். வாயாலை வெட்ட வேணும்."

இருவருக்கும் எதுவுமே புரியவில்லை.

மாஸ்ரர் தொடர்ந்தார். "அவள் பிள்ளை மேடையிலே ஏறி சாதி வெறியாலை தான் சின்ன வயதிலை விதவையாய்ப் போன கதையைச் சொல்லி உங்கடை பிள்ளைக்கு இப்படி நடந்தால் தாங்குவியளோ எண்டு நாலு கேள்வி கேட்க, கூட்டத்திலை இருக்கிற பொம்பிளையளின்ரை கண் கலங்கும். எல்லாம் இந்தச் சாதி வெறியாலை தானே வந்தது எண்டு போட்டு இறங்கினால் போதும் மிச்சத்தை அடுத்த பேச்சாளர் பார்ப்பர்."

குடியரசாருக்கும் சந்தோசத்துக்கு அளவில்லாமல் போய்விட்டது. தனக்கு இந்த எண்ணம் வராததற்காகத் தன்னைத் தானே நொந்து கொண்டார். "ஓம் மாஸ்டர். பெண்ணொண்டால் பேயும் இரங்கும் எண்ணுறவாங்கள். எங்கடை ஆக்கள் மனுஷர் தானே. கட்டாயம் இரங்குவாங்கள். ஆனபடி பொன்னம்பலருக்கும் சிங்கனை நினைக்க ஒரு உசார் வரும்" என்றார் குடியரசார்.

மாஸ்ரர் சொன்னார். "எங்கடை சனம் கந்தபுராண கலாசாரத்திலை ஊறினது. சாதி விஷயங்களை வலு கவனமாய்க் கையாள வேணும். பிறகு எல்லாத்தையும் குழப்பி எங்களை நாங்கள் தனிமைப்படுத்தி விடக்கூடாது."

"அது நாங்கள் வடிவாய்ச் செய்வம் மாஸ்ரர். முதல் விதானையாரின்ரை மேன் சொர்ணத்தை மேடையில பேச விட்டிட்டு அவன் பேசிக் கொண்டிருக்கேக்கை இந்த அக்கா சொல்லுறதை ஒருக்கால் கேளுங்கோ எண்டு சொல்ல கமலி ஏறி நாலு வசனம் சொல்லிப் போட்டு இறங்க பிறகு சொர்ணம் சாதி வெறியின்ரை கொடுமையைப் பார்த்தியளோ எண்டு தொடர வேண்டியது தானே?" என்றார் குடியரசார் ஒருவித பெருமிதத்துடன்.


விதானையார் சற்று யோசித்து விட்டு "நல்ல யோசனை தான். ஆனால் ஒரு முறை நாகம் செய்வாய்" என்றார்.

கந்தப்பர் வியப்புடன் "என்ன என்ன விஷயம்" எனக் கேட்டார்.

"ஆச்சி. அது தான் எங்கடை சீதேவி ஆச்சி தன்ரை வாயாலை பொல்லாலை உன்ரை உச்சந்தலையைத் தான் பிளக்கும்."

"சும்மா கிட. கிழவியை வெட்டியாட எனக்குத் தெரியும்" என்று விட்டு மீசையைத் தடவிக் கொண்டார் குடியரசார்.

கூட்டம் தொடங்கவே அவர்களும் எழுந்து சென்று அதில் கலந்து கொண்டனர். அங்கு பல விஷயங்கள் ஆலோசிக்கப்பட்டன. எல்லோரும் வெற்றி நிச்சயம் என்ற நம்பிக்கையில் வெகு உற்சாகமாகவே இருந்தனர். இறுதியில் முதலாவது பிரசாரக் கூட்டம் மாலுசந்தியில் வைப்பது. அதற்கு டொக்டர் என்.ஏ.விக்கிரமசிங்க, பீட்டர் கெனமன் ஆகியோரை அழைப்பது எனவும் முடிவெடுக்கப்பட்டது.



சரவணை பருத்தித்துறையிலிருந்து திரும்பி வந்துவிட்டதை அறிந்த குடியரசார் அவனையும் கமலியையும் விதானையார் வீட்டிற்கு அழைத்து வரும்படி ஒரு ஆளை அனுப்பிவிட்டு தாம் விதானையார் வீட்டில் வந்து இறங்கினார்.

இருவரும் தேர்தல் சம்பந்தமான விஷயங்களை கதைத்துக் கொண்டிருந்த போது விதானையார் கேட்டார். "அது சரி. நீ சொர்ணத்தை கூட்டத்திலை பேச கூட்டிக் கொண்டு போக ஆச்சியை என்னண்டு சமாளிக்கப் போறாய்?"

கந்தப்பர் ஒரு மெல்லிய சிரிப்புடன் "ஆடுற மாட்டை ஆடிக் கறக்க வேணும். பாடுற மாட்டைப் பாடிக் கறக்க வேணும். பார் இப்ப திட்டுற கிழவியை திட்டாமலே கறக்கிறன்" என்று விட்டு எழுந்து கிழவியிடம் போனார்.

மூடல் பெட்டி பொத்திக் கொண்டிருந்த சீதேவிப் பாட்டி "என்னடா" என்றாள்.

"வாற கிழமை மாலுசந்தியிலை எங்கடை முதல் கூட்டம் வைக்கிறம். வாவன் போய்ப் பாப்பம்"

"எனக்கு வேறை வேலை இல்லையே. நீயும் உன்ரை கூட்டமும்" என்றாள் கிழவி.

"என்ன பெரிய செருக்குக் காட்டுறாய். உன்ரை பேத்தியின்ரை பேச்சைக் கேட்க நீ வரயில்லையே" என்றுவிட்டு கிழவியின் முகத்தைப் பார்த்தார் கந்தப்பர்.

"பேத்தியோ எந்தப் பேத்தி?"

"நீ என்ன நூறு பேத்தியே வைச்சிருக்கிறாய். சொர்ணம் தான்."

கிழவிக்கு கோபம் வந்துவிட்டது. பல்லை ஒரு முறை நெருமி விட்டு "அவள் ஒண்டுக்கும் வரான். நீ இதாலை போ" என்றாள்.

அவர் "பேய்க் கதை கதைக்கிறாய். நேற்றுச் சிலையும் போட்டாச்சு. நாளைக்கு மருதப்பிள்ளை நயினாரின்ரை பேத்தி மேடையிலை பேசப் பயந்து வராமல் விட்டிட்டாளாம் என்டால் அது உனக்கு மரியாதையே? நாளைக்கு விதானை வீருக்கை தலை நிமிர்ந்து உலா வாறேல்லையே?" எனக் கேட்டார். தனது வார்த்தைகள் கிழவியிடம் நன்கு வேலை செய்வது போலவே அவருக்குப்பட்டது.

"உனக்கு ஆத்திசூடி தெரியுமே..." எனக் கேட்டார் கந்தப்பர்.

"தெரியும்"

"அதை படியெண்டு ஒருக்கா சொல்லு பாப்பம்."

"ஔவையார்"

"உன்னைப் போலை மூடல் பெட்டி பொத்திக் கொண்டிருந்தால் ஔவையாரை நீ இப்ப நினைச்சிருப்பியே. அவ எல்லா இடமும் திரிஞ்சு பாடினதாலை தானே இப்பவும் அவவின்ரை பேர் நிலைச்சு நிக்குது" என்றார் கிழவியை மடக்கும் முனைப்புடன்.

"அப்ப என்ரை பிள்ளையையும் கூனிக் கொண்டு பொல்லூண்டினபடி ஊர் ஊராய் நடக்க வைக்கப் போறியே" கிழவி இடைமறித்துக் கேட்டாள்.

"இல்லை. மேடையிலை நெஞ்சை நிமிர்த்தி பேச வைக்கப் போறன். அவள் தம்பிப்பிள்ளை விதானையின்ரை மேளல்லோ" என்று விட்டு தன் மீசையை ஒரு முறை தடவிக் கொண்டார் கந்தப்பர். பிறகு "நீ கூட்டத்திற்கு வரப் போறியோ இல்லையோ" எனக் கிழவியைக் கேட்டார் அவர்.

"நான் வரேல்லை. நீ போய் ஆடுற கூத்தை ஆடு" என்று விட்டு மூடலைப் பொத்த ஆரம்பித்தாள் கிழவி. அவளைப் பொறுத்த வரை கந்தப்பர் அந்த இடத்தை விட்டுப் போனால் போதும் என்றளவுக்கு இருந்தது.

கந்தப்பருக்கும் "நீ போய் ஆடுற ஆட்டத்தை ஆடு" என்ற வசனமே போதுமானதாக இருந்தது. சற்றுத் தொலைவில் இருந்த விதானையாருக்கு இவர்களின் சண்டை வெகு சிரிப்பாக இருந்த போதிலும் அதைக் கவனிக்காதது போலவே இருந்துவிட்டார்.

விதானையார் இருந்த இடத்திற்கு கந்தப்பர் வரவும் சரவணையும் கமலியும் சங்கடப் படலையைத் திறந்து கொண்டு வரவும் சரியாக இருந்தது.

ஏற்கனவே விதானையார் வாங்கிலைத் தூக்கி வெளியே போட்டு வைத்துவிட்டார். சரவணை மற்றவர்களைப் போல் நிலத்தில் குந்தியிருக்க மாட்டான். நிற்க வைத்துக் கதைத்தால் அவன் கோபித்துக் கொண்டு போனாலும் போய்விடுவான்.

சாய்மனைக் கதிரையில் இருந்தவாறே "வா சரவணை இரு. கந்தப்பர் உன்னோடை கதைக்க வேணுமாம்." சரவணைக்கும் குடியரசார் மீது தனிமரியாதை உண்டு.

கந்தப்பர் மெல்ல ஆரம்பித்தார் என்ன மாதிரி லெக்சன் நிலைமையள் போகுது?

சரவணை "வீரபாகு முதலாளி தமிழரசுக் கட்சி தானே. நானும் அவரோடை தான் நிக்கிறன்" என்றான். கந்தப்பர் உடனடியாக முறித்துக் கதைப்பதில் பயன் ஏற்படாது என்று நன்றாகவே தெரிந்து வைத்திருந்தார். எனவே அவர் "முதலாளி அங்காலை நிற்க நீ அங்கை தான் நிக்க வேணும். மற்ற மணியாறன் மூலைச் சனம் முழுக்க எங்களோடை தான் நிக்கும். தெரியும் தானே? " எனக் கேட்டார்.

"ஓமோம். அது எனக்குத் தெரியும். விதானையார் ஐயா சொன்னால் எங்கடை சனம் அரக்காது" என்றான் சரவணை.

கந்தப்பர் ஒரு முறை செருமி விட்டு "அது பிரச்சினை இல்லை. உன்ரை பெட்டை எங்கடை கூட்டத்திலை பேச வேணும்" என்றார்.

சரவணை திகைத்துப் போய் தடுமாறி விட்டான்.

"ஐயா அது.. அது.. அவளுக்கு மேடையிலை ஏறிய பழக்கம் இல்லை."

கந்தப்பர் உறுதியான குரலில் சொன்னார். "சரவணை நீ யோசியாதை. அவள் படிச்ச பெட்டை. நான் எழுதிக் குடுப்பன். பாடமாக்கி விட்டு வாசிச்சு விட வேண்டியது தானே? சரவணை எதுவும் பேசாமல் தலை குனிந்ததிலிருந்து அவன் இதை விரும்ப வில்லை போல் தோன்றியது.

அதுவரை அமைதியாயிருந்த விதானையார் "சரவணை என்ரை பிள்ளையே மேடை ஏறி சாதி இருக்கக் கூடாது எண்டு பேசப் போறாள். உந்தச் சாதிப் பிரச்சினையிலை பாதிக்கப்பட்ட உன்ரை மேள் பேசுறதிலை என்ன வந்திட்டுது."

சரவணை ஆச்சரியத்துடன் கேட்டான் "பிள்ளையும் பேசுதே?"

"ஓமெண்டுறன்" என்றார் விதானையார் அழுத்தமாக.

சரவணையின் மனம் மாறியிருக்க வேண்டும். "கமலி நீ பேசுவியே?"

விதானையாருக்கும் மூளை வேலை செய்தது. 'கமலி நீ பேசு நீ விரும்பினதெல்லாம் நடக்கும்' என்றார் அவர்.

கமலியின் கண்களில் தான் பாளைக் கத்தியுடன் பொன்னம்பலத்தை விரட்டுவது போல் ஒரு காட்சி தெரிந்து மறைந்தது.

(தொடரும்)

நா.யோகேந்திரநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழர்களும் டெசோ மாநாடும்!

இலங்கையில் 1983ம் ஆண்டு யூலையில் இடம்பெற்ற இனக்கலவரத்தையடுத்து இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக இந்தியாவில் தமிழ்நாட்டில் நிறுவப்பட்டதுதான் தமிழீழ ஆதரவு இயக்கம் எனப்படுகின்ற டெசோ அமைப்பாகும். 83 கறுப்பு யூலைக்குப் பின்னரான காலங்களில் 2009 மே மாதம் வரையிலும் இலங்கையில் குறிப்பாக வடக்கு, கிழக்கு வாழ் தமிழர்கள் பல்வேறு காலகட்டங்களில் படுகொலைகள், இடப்பெயர்வுகள், சொத்திழப்புக்கள் போன்ற பாரிய அவலங்களைச் சந்திக்க நேர்ந்துள்ளது. அதிலும் குறிப்பாக 2009 ஜனவரி மாதத்தின் நடுப்பகுதி முதல் 2009 மே மாதத்தின் நடுப்பகுதி வரையான சுமார் நான்கு மாதகாலத்தில் வன்னியில் இடம்பெற்ற யுத்தத்தில் பல ஆயிரக் கணக்கான தமிழ்மக்கள் பலியானதுடன் தமிழ்மக்களின் பலகோடி ரூபா பெறுமதியான சொத்துக்களும் இழக்கப்பட்டிருந்தன. இலங்கை அரச படையினருக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குமிடையிலான ஆயுதப் போராட்டம் இடம்பெற்ற காலங்களில் அதிகூடிய அழிவுகளையும் அவலங்களையும் சந்தித்தவர்கள் தமிழ்மக்கள் என்பதை எவரும் மறுப்பதற்கில்லை. இத்தகைய அழிவுகளினதும் அவலங்களினதும் உச்சமாக விளங்குவதுதான் 2009 ஆம் ஆண்டு ஏப்ரல், மே மாதங்களில் புதுமாத்தளன், அம்பலவன் பொக்கணை, முள்ளிவாய்க்கால் பகுதிகளில் இடம்பெற்ற மனிதப் படுகொலைகளும் மனிதப் பேரவலமும் ஆகும்.

சுமார் இருபத்தெட்டு ஆண்டுகளாக கிடப்பிலே போடப்பட்டிருந்த டெசோ அமைப்பின் மாநாட்டை 2012 ஓகஸ்ட் மாதம் 12 ஆம் திகதியன்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் முன்னாள் தமிழக முதலமைச்சருமான முத்துவேல் கருணாநிதி அவர்கள் கடும்பிரயத்தனத்திற்கு மத்தியில் சென்னையில் வெற்றிகரமாக நடத்தியிருந்தார். இலங்கைத் தமிழர்கள் மீது என்றுமில்லாத அனுதாபம் தற்போது அதுவும் முதுமையால் தளர்வடைந்து போன நிலையில் கருணாநிதி ஐயாவுக்கு ஏன், எங்கிருந்து வந்தது என்ற கேள்விகள்தான் எம்முன்னே விரிந்திருக்கின்றன.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக அரசபடையினர் மேற்கொண்ட யுத்தம் அதன் இறுதிக்கட்டத்தில் படையினரால் மிகத் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டிருந்தது. அந்த நாட்களில் அரசபடையினரின் எறிகணை வீச்சுக்களாலும் கனரக ஆயுதங்களின் மிலேச்சத்தனமான தாக்குதல்களாலும் கொத்துக் கொத்தாக தமிழ்மக்கள் கொல்லப்பட்ட வேளையில் தமிழகத்தின் முதலமைச்சர் பதவி வகித்துக் கொண்டிருந்த இதே கருணாநிதிதான் அன்று தமிழ்மக்கள் அவலக் குரலெழுப்பியபோது பார்வையாளராகவிருந்தார். வன்னியில் யுத்தம் இறுதிக்கட்டத்தைத் தொட்டிருந்த வேளையில் சுமார் நான்கு லட்சம் வரையிலான மக்கள் புதுமாத்தளன், பொக்கணை, வலைஞர்மடம், முள்ளிவாய்க்கால் பகுதிகளில் முடக்கப்பட்டிருந்தனர். இவ்வாறு முடக்கப்பட்டிருந்த மக்கள் ஒருவேளை உணவிற்குக் கூட வழியில்லாமல் திண்டாடினார்கள். அரசபடையினர்களின் எறிகணைத் தாக்குதல்களில் காயமடைந்த பொதுமக்கள் போதிய மருத்துவ வசதிகள் இன்மையால் அதிக உயிரிழப்புக்களைச் சந்தித்துக் கொண்டிருந்தார்கள். மகிந்த அரசாங்கம் கப்பல் மூலம் அனுப்பி வைத்த உணவுப் பொருட்களும் மருந்துப் பொருட்களும் லட்சக் கணக்கான மக்களுக்கும் கிள்ளித்தெளிப்பவையாகவே இருந்தன.

போரில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற இரண்டு தரப்பினரும் போரை நிறுத்தி தமிழ்மக்களை அழிவுகளிலிருந்து காப்பாற்ற வேண்டும் என சர்வதேச மட்டத்திலிருந்து இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன. அந்தச் சூழ்நிலையில் வன்னியில் அரசபடையினர் விடுதலைப் புலிகளுக்கெதிரான யுத்தம் என்று கூறிக்கொண்டு திட்டமிட்ட முறையில் பொதுமக்கள் மீது கட்டவிழ்த்துவிட்டுள்ள படுகொலைகளைக் கண்டித்தும் அவற்றை உடன் தடுத்து நிறுத்தக் கோரியும் தமிழக அரசியல் கட்சிகள் கணிசமான தமிழக மக்களின் ஆதரவுடன் வீதியில் இறங்கி கவனயீர்ப்புப் போராட்டங்களை நடத்தினார்கள். தியாகி முத்துக்குமாரன் வழிகாட்ட அவனது பாதையில் தமிழ்நாட்டு உறவுகள் பதினைவர் இலங்கைத் தமிழர்களுக்காக தீக்குளித்து தமது இன்னுயிர்களை ஈகம் செய்து கொண்டார்கள். இவ்வாறாக தமிழகத் தமிழ்மக்களுடைய அன்றைய சூழ்நிலையிலான உணர்வலைகளுக்கு கருணாநிதி தலைமையிலான மாநில அரசு உரிய மதிப்புக் கொடுக்கத் தவறிவிட்டது. இது கருணாநிதி தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாபெரும் வரலாற்றுத் தவறாகவே கொள்ளப்படுகிறது. கருணாநிதி அவர்கள் இலங்கைத் தமிழர்கள் மீது உண்மையான கருணையுள்ளம் கொண்டவராக இருந்திருந்தால் தமிழக அரசியல் கட்சிகளின் பேராதரவுடன் தமிழக மக்களை அணிதிரட்டி புதுடில்லியில் தொடராக சத்தியாக்கிரகப் போராட்டங்கள் மற்றும் கவனயீர்ப்புப் போராட்டங்களை நடாத்தி மத்திய அரசுக்கு போதிய அழுத்தங்களைக் கொடுத்து மத்திய அரசின் கவனத்தை திசை திருப்பியிருக்க முடியும். அந்தக் காலச் சூழ்நிலையில் இந்திய மத்திய அரசு போரை நிறுத்துமாறு இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்திருக்கின்ற பட்சத்தில் இலங்கை அரசின் ஆசீர்வாதத்துடன் அரச படையினர் முன்னெடுத்திருந்த கொடிய யுத்தத்தைத் தடுத்து நிறுத்தியிருப்பதோடு ஆயிரக் கணக்கான இலங்கைத் தமிழர்களின் உயிரிழப்புக்களையும் தவிர்த்திருக்க முடியும்.

வன்னியில் யுத்தம் இறுதி நாட்களை அண்மித்துக் கொண்டிருந்த வேளையில் அரச படையினர் நவீன ரக ஆயுதங்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து தமிழ்மக்கள் மீதான தாக்குதல்களை மிகத் தீவிரமாக முன்னெடுத்திருந்தனர். அப்போது யுத்தம் முள்ளிவாய்க்கால் கிராமத்திற்கும் வலைஞர் மடம் கிராமத்திற்கும் இடைப்பட்ட இரட்டைவாய்க்கால் என்ற சிறிய பகுதியில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. கரையாம் முள்ளிவாய்க்கால், வெள்ளாம் முள்ளிவாய்க்கால் ஆகிய இரண்டு கிராமசேவகர் பிரிவுகளைக் கொண்ட அந்த நிலப்பரப்புக்குள் இரண்டரை லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தஞ்சமடைந்திருந்தனர். இவ்வாறு தஞ்சமடைந்திருந்த மக்கள் படையினரின் தாக்குதல்களில் தொடரான உயிரிழப்புக்கள், காயங்கள் மற்றும் உணவுப் பஞ்சம், தொற்று நோய்கள் என்பவற்றால் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். இந்தச் சூழ்நிலையில் தான் தமிழக முதல்வர் கருணாநிதி அவர்கள் அதிரடியான அறிவித்தல் ஒன்றை விடுத்திருந்தார்.

அதாவது இலங்கை அரசு போரை நிறுத்தி தமிழ்மக்களை அழிவிலிருந்து காப்பாற்றுவதற்கு இந்திய மத்திய அரசு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து தான் உண்ணாவிரதம் இருக்கப்போவதாக அறிவித்து 27-04-2009 அன்று தனது உண்ணாவிரதத்தை ஆரம்பித்திருந்தார். வன்னியில் பேரவலத்திற்குள் அகப்பட்டிருக்கும் தமிழ்மக்களை காப்பாற்றுவதற்காக தொடங்கப்பட்ட உண்ணாவிரதத்தை தமிழ்மக்கள் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கும் அதேசமயத்தில் ஓரிரு நாட்களிலேயே முடிவுக்கும் கொண்டு வந்திருந்தார் கருணாநிதி அவர்கள். உண்ணாவிரதம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதற்கான காரணம் அப்போது பகிரங்கமாக வெளிவரவில்லை. இந்தநிலையில் அண்மையில் நடைபெற்ற டெசோ மாநாட்டில் தி.மு.கவின் தலைவர் கருணாநிதி அவர்கள் கூறிய கருத்து விநோதமாகவே உள்ளது. அதாவது தான் உண்ணாவிரதம் இருந்த போது இலங்கையில் யுத்தம் முடிந்துவிட்டதாக இலங்கை அரசு வெளியிட்ட அறிக்கையை மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் தனக்கு அனுப்பி வைத்திருந்ததாகவும் அவ்வறிக்கையை நம்பியே தான் உண்ணாவிரதத்தைக் கைவிட்டதாகவும் கூறியிருந்தார். ஆனால் கருணாநிதி அவர்கள் உண்ணாவிரதத்தைக் கைவிட்டு இருபது நாட்களின் பின்னரே அதாவது 18-05-2009 அன்றுதான் இலங்கையில் யுத்தம் முடிவுக்கு வந்திருந்தது. ஆனால் யுத்தம் முடிவுறுவதற்கு இருபது நாட்கள் முன்னரே அதுவும் முழு உலகநாடுகளின் பார்வையும் இலங்கையின் பக்கம் திரும்பியிருந்த வேளையில் யுத்தம் முடிவுக்கு வந்துவிட்டதாகக் கிடைத்த தவறான அறிக்கையை நம்பியே தான் உண்ணாவிரதத்தை கைவிட்டதாக மூன்று ஆண்டுகள் கடந்த பின்னர் கருணாநிதி அவர்கள் கூறும் கருத்து வேடிக்கையாகவும் விநோதமாகவுமேயுள்ளது.

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

தமிழன்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பி.ஜே.பி.யில் பிரதமர் வேட்பாளர் இல்லையா?

## அத்வானியின் பேச்சால் சர்ச்சை!

எதிர்வரும் 2014 லோக்சபா தேர்தலில் ஆளும் காங்கிரஸ் கட்சிக் கூட்டணி பதவியிழக்கும் என்பதை அந்தக் கட்சியினரே ஒத்துக் கொள்ளும் அளவுக்கு நாளாந்தம் புதுப்புது சிக்கல்கள் மன்மோகன் அரசுக்கு ஏற்பட்ட வண்ணமே உள்ளன. என்னதான் பிரதமர் ஒரு நேர்மையே உருவான மனிதரென்றாலும், அவரும் சோனியாவும் 8 வருடங்களுக்கு மேல் தொடர்ந்து ஆச்சரியிக்கத்தக்க விதமாக ஒற்றுமையுடன் செயலாற்றி வந்தாலும் ஆட்சி என்னவோ இன்றைக்கோ நாளைக்கோ என்ற நிலையில் தான் இருந்துவருகிறது.

நிதியமைச்சராக இருந்து சமீபத்தில் ஜனாதிபதியான பிரணாப் முகர்ஜி நிதித்துறையை மிகவும் பிற்போக்குத்தனமாகக் கையாண்டதன் விளைவாக இந்தியப் பொருளாதாரம் கடும் வீழ்ச்சியை கடந்த சில மாதங்களில் கண்டுள்ளமை முக்கிய விடயமாகும். இது தவிர நாளாந்த நிகழ்வாகிவிட்ட ஊழல் குற்றச்சாட்டுகள் அரசை கிட்டத்தட்ட செயலற்ற நிலைக்கே கொண்டுவந்து விட்டன எனலாம். இந்த வாரமும் நிலக்கரி சுரங்கங்களை தனியார் கம்பனிகளுக்கு ஒதுக்கீடு செய்ததான அமைச்சரவை முடிவில் அரச கஜானாவுக்கு கோடிக்கணக்கில் இழப்புண்டானதாக கணக்காய்வு அதிபதி அறிக்கை சமர்ப்பித்துள்ளார். இதனையடுத்து பிரதமர் பதவி விலக வேண்டுமென எதிர்க்கட்சிகள் மீண்டும் குரல் கொடுக்கத் தொடங்கியுள்ளன. ஆட்சிக்காலம் முடிய 2 ஆண்டுகள் பாக்கி இருக்கும் இன்றைய நிலையிலேயே மன்மோகன் அரசு தள்ளாடுவதால் பிரதான எதிர்க்கட்சியான பி.ஜே.பி.யின் கை ஓங்க வேண்டிய தருணமாகும் இது. ஆனால் அந்தக் கட்சிக்குள் பிரதமர் பதவிக்கு மூத்த தலைவர்கள் ஆளாளுக்கு அடித்துக் கொள்வதால் காங்கிரசுக்கு மாற்றான கட்சி என்ற கௌரவத்தை பி.ஜே.பி வேகமாக இழந்து வருகிறது எனலாம். கட்சியின் தீவிர தொண்டர்களோ நரேந்திரமோடியே பிரதமர் வேட்பாளர் என விடாப்பிடியாக உள்ளனர். இவ்வருடக் கடைசியில் நடக்கவுள்ள மோடியின் குஜராத் மாநில சட்டசபைத் தேர்தலில் அவர் மூன்றாவது முறையாகவும் தொடர்ந்து வெற்றிபெறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறு வெற்றி பெற்றபின் அவரைப் பிரதமராக்க வேண்டும் என்ற கோஷம் பி.ஜே.பி.க்குள் வலுப்பெறும் என்று கருதப்படுகிறது. அதற்கு முன்பே பி.ஜே.பி.க்குள் உள்ள மோடி எதிர்ப்பாளர்கள் மோடியின் காலை வாரிவிடும் அறிக்கைகளை வெளியிடத் தொடங்கியுள்ளனர். இவற்றில் பிரதானமானது மூத்த தலைவர் அத்வானியின் சமீப அறிக்கையாகும். 2014 தேர்தலில் பி.ஜே.பி.யோ, காங்கிரசோ அல்லது அவற்றின் கூட்டணிக்கட்சிகளோ தனித்து அறுதிப் பெரும்பான்மையைப் பெறாதவிடத்து மூன்றாவது அணியொன்றின் பிரதமர் வேட்பாளரை காங்கிரசோ, பி.ஜே.பி.யோ ஆதரிக்கக் கூடும் என்பதே அத்வானி திருவாய் மலர்ந்தருளிய விடயமாகும். இதற்குப் பதிலடியை உடனடியாகவே தந்த காங்கிரஸ் "அப்படியானால் 2014 லோக்சபா தேர்தலில் பி.ஜே.பி தனித்து பெரும்பான்மை பெற முடியாது" என்பதை அத்வானி இப்போதே ஒப்புக் கொள்கிறாரா எனக் கேள்வி எழுப்பியுள்ளது. போருக்குப் போக முன்பே தோல்வியை ஒப்புக் கொண்ட போர்த் தளபதியின் நிலைப்பாடு இது என்பதே காங்கிரசின் நையாண்டியாகும். அத்வானிக்கு 85 வயதாகி விட்டதால் 2014ல் பி.ஜே.பி வென்றாலுமே கூட அப்போது 87 வயதாகிவிட்டிருக்கும் அத்வானி ஆட்சியை நடத்த முடியுமா என்பது கேள்வியே. இதனால் கட்சி அவரை பிரதமர் வேட்பாளராக நியமிக்கத் தயாரில்லை என்பது தெளிவாகிவிட்டதால் விரக்தியில் அத்வானி இவ்வாறு தாறுமாறாகப் பேசுகிறார் என்றும் பி.ஜே.பி.யில் பெரும்பான்மையினர் கருதுகின்றனர். அத்வானி இவ்வாறு குட்டையைக் குழப்பிவிட அதற்கு ஒருபடி மேல் சென்ற சிவசேனா தலைவர் மனோஹர் ஜோஷி பி.ஜே.பி கூட்டணிக்கு பெரும்பான்மை கிடையாவிட்டால் பி.ஜே.பி கூட்டணியின் ஆதரவுடன் சரத்பவார் பிரதமராகலாம் என புதியதொரு குண்டைத் தூக்கிப் போட்டுள்ளார். ஒருவேளை இதுதான் கடைசியில் நடக்கக் கூடுமாயினும் இதனை இவ்வளவு முன்கூட்டி அறிவிக்க அவசியமில்லை என்பது பி.ஜே.பி மற்றும் அதன் நேசக் கட்சிகளின் ஒருமித்த கருத்தாகும். சிவசேனா கட்சி பி.ஜே.பி.யின் பிரதான தோழமைக்கட்சி என்பதுடன் மஹாராஷ்டிர மாநிலத்தில் பி.ஜே.பி-சிவசேனா கூட்டணி வலுவான ஒரு எதிர்க் கட்சிக் கூட்டணியாகவும் இருந்து வருகிறது.

> **2014 தேர்தலில் பி.ஜே.பி.யோ, காங்கிரசோ அல்லது அவற்றின் கூட்டணிக்கட்சிகளோ தனித்து அறுதிப் பெரும்பான்மையைப் பெறாதவிடத்து மூன்றாவது அணியொன்றின் பிரதமர் வேட்பாளரை காங்கிரசோ, பி.ஜே.பி.யோ ஆதரிக்கக் கூடும் என்பதே அத்வானி திருவாய் மலர்ந்தருளிய விடயமாகும்.**

அம்மாநில ஆட்சியில் காங்கிரசும் சரத்பவாரின் கட்சியும் பங்கு போட்டுக் கொண்டாலும் பவார் எந்தநேரமும் காங்கிரசின் முதுகில் குத்தத் தயாராகவே உள்ளார் என்பது உலகறிந்த உண்மையாகும். பிரதமராகும் சகல தகுதிகளும் உள்ள இவருக்கு 72 வயதாகிவிட்டதால் 2014ல் தேர்தல் நடக்கும் போது 74 வயதையும் 2019ல் அடுத்த தேர்தல் நடக்கும்போது 79 வயதையும் எட்டிவிட்டிருப்பார். எனவே 79 வயது வரும் வரை காத்திராமல் 74 வயதில் அதாவது 2014ல் பிரதமராகும் வாய்ப்புத்தான் சரத்பவாருக்கு கடைசி வாய்ப்பாகும். இப்போதைக்கு மன்மோகன் அரசில் அவர் பங்காளியாக இருந்தபோதும் பிரதமர் நாற்காலியை அவர் குறி வைக்காது இருக்க மாட்டார் என்பது யாவருக்கும் தெரிந்த விடயமே. 2014 தேர்தலில் காங்கிரஸ் அல்லது பி.ஜே.பி சார்ந்த கூட்டணிகள் ஆகிய இரண்டில் எதற்கும் பெரும்பான்மை கிடைக்காத போது பி.ஜே.பி ஆதரவுடன் அல்லது காங்கிரஸ் ஆதரவுடன் 3வது தரப்பைச் சேர்ந்த ஒருவர் பிரதமராவது சாத்தியமே. இவ்வாறுதான் 1996ல் தேவகவுடா பிரதமரானார். அவ்வகையில் பிரதமராகும் கனவில் இன்று முலாயம் சிங் யாதவ், ஜெயலலிதா, சரத்பவார் ஆகிய முக்கிய தலைவர்கள் வியூகம் வகுத்து வருகின்றனர்.

எனவே, சரத்பவார் பிரதமராகலாம் என மனோஹர் ஜோஷி கூறியது இன்று பவார் சார்ந்துள்ள காங்கிரஸ் கூட்டணியின் நோக்குநிலையிலும் பின்னணியிலும் முற்றிலும் ஒவ்வாத அபத்தமான அரசியல் பேச்சாக இருந்தாலும் யதார்த்தம் இதுவாகவே இருக்கலாம் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், சரத்பவார் பிரதமராக பி.ஜே.பி கூட்டணி ஆதரவளிக்கும் என அக்கூட்டணியின் மூத்த தலைவர் ஒருவர் தேர்தலுக்கு 2 வருடங்களுக்கு முன்பே கூறுவது பி.ஜே.பி கூட்டணியால் தனித்து பதவிக்கு வரமுடியாது என்பதை மறைமுகமாக ஒப்புக் கொள்வது போலாகாதா? என்ற கேள்வியை எழுப்புகிறது. இதுவும் கிட்டத்தட்ட அத்வானி பேசியது போன்றதே என்பது தெளிவாகும். சரத்பவாரை காங்கிரசிடம் இருந்து பிரித்தெடுக்கும் ஆசையில் இது கூறப்பட்டதாயினும் பி.ஜே.பி கூட்டணிக்கு இதனால் ஏற்பட்ட லாபத்தை விட கஷ்டமே அதிகமாகும். இந்த அரசியல் சேதத்தை சரி செய்ய நினைத்த பி.ஜே.பி தலைவர் நிதின் கட்காரி "அதெல்லாம் ஒன்றுமில்லை; பி.ஜே.பி வெல்லும்; எங்களிடம் ஒன்றுக்கு ஆறு பிரதமர் வேட்பாளர்கள் உள்ளனர்" எனக் கூறியுள்ளார். இது பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்காக முடிந்ததற்கு மற்றொரு சிறந்த உதாரணமாகும். அதாவது பி.ஜே.பி.க்கு வெற்றியை மக்கள் தந்தால் பிரதமர் பதவிக்கு 6 பேர் தங்களுக்குள் அடித்துக் கொள்ளப் போகிறார்கள் என்ற உண்மையை ஒப்புக் கொள்வதே இதுவாகும். நரேந்திர மோடி, அத்வானி, சுஷ்மா ஸ்வராஜ், அருண் ஜேட்லி, ராஜ்நாத் சிங், முரளி



மனோஹர் ஜோஷி என ஆறுபேர் பிரதமர் பதவி கனவில் மிதப்பது உண்மைதான். அதற்காக அதை வெளிப்படையாகப் பேசுவது ஆபத்தில் முடிவடையலாம். பி.ஜே.பி.யின் ஒரே பிரதமராக இருந்த வாஜ்பாய் காலத்துடன் ஒப்பிட இன்றைய பி.ஜே.பி எத்தகைய அதல பாதாளத்தில் வீழ்ந்து கிடக்கிறது என்பதை இதிலிருந்து மதிப்பிட முடியும். அக்காலத்தில் வாஜ்பாய் தவிர அத்வானி ஒருவர் மட்டுமே பிரதமர் பதவிக்கு அருகதையுள்ள ஒரே நபராகக் கருதப்பட்டார். இன்றுபோல 6 பேர் பிரதமர் பதவிக்கு தகுதியுள்ளவர்கள் என்று ஒருபோதும் பேச வேண்டிய தேவை பி.ஜே.பி கட்சியின் தலைவருக்கு எழுந்ததே இல்லை. இன்று காங்கிரஸ் வீழ்ச்சியை நோக்கிப் போனாலும் அது பி.ஜே.பி.யின் எழுச்சியாக மாறவில்லை.

சமீபத்தில் காங்கிரஸ் கட்சி நடத்திய ஒரு ரகசிய கருத்துக்கணிப்பின்படி இன்று 209 எம்.பிக்களைக் கொண்ட காங்கிரஸ் 2014 தேர்தலில் 100 எம்.பிக்கள் என்ற எண்ணிக்கையைத் தாண்டுவதே கடினம் என்ற முடிவு வெளிப்பட்டுள்ளது. ஆனால் இதில் காங்கிரசுக்கு ஆறுதலான விடயம் என்னவெனில் எதிரியான பி.ஜே.பி.க்கு கிட்டத்தட்ட காங்கிரசை விட 15-20 இடங்களே அதிகம் கிடைக்குமென அதே கருத்துக்கணிப்பு கூறுவதே.

**அபிஜித்**

மருத்துவம்
நரைமுடியை கறுப்பாக்க, 3 மாதத்தில் வளரச்செய்ய, உயரத்தை அதிகரிக்க, நிறை குறைக்க, வெண் குஷ்டம், தழும்பு, முகப்பரு நீக்க, முகம் வெண்மையாக, மதுபானம், புகைத்தலை கைவிட ஆங்கில மருந்து (ஊசி மூலமும்).
தொடர்பு - 0715175957 -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நேற்றுப் போல இருக்கிறது. உங்களை சுடர்ஒளி ஊடாகச் சந்திக்கத் தொடங்கி 25 வாரங்கள் ஆகிவிட்டன. பலரைப் பல இடங்களிலும் சந்திக்கும் போதும் 'பம்பல் பரமசிவத்தை' சுகம் விசாரிக்கத் தவறுவது இல்லை. அவர்கள் அனைவருக்கும் இவ் 'வெள்ளிவிழா' வாரத்தில் பம்பல் பரமசிவத்தின் இதயபூர்வமான நன்றிகள்.

ஒரு மரணவீட்டில், அடங்காப்பிடாரி சிவனேசன் என்னைக் கண்டு 'மாஸ்டர்! நீங்களோ பம்பல் பரமசிவம் பகுதி எழுதுறனீங்கள்' என்று கேட்டார். (கேலி நகைச்சுவை உடன் திரிவதால் 'மாஸ்டர்' என்று என்னை அழைப்பது உண்டு). வியப்புத் தாளாமல் "என்னெண்டு கண்டு பிடிச்சனீங்கள்?" என்று கேட்டேன்.

"அதென்ன மாஸ்டர்?... வெங்காயத்தை முதன்மைப்படுத்தி எழுதும் போதே நினைச்சன் நீங்கள் தான் இதனை எழுதுறதாக இருக்க வேண்டும் என்று. வேறை எந்த வெங்காயம் இவ்வளவு துணிச்சலாய் தன்னைப்பற்றி தான் ஒரு வெங்காயம் என்று ஏற்றுக் கொண்டு எழுதும்? துணிச்சலுக்குப் பாராட்டுக்கள்..." என்று ஒரு போடு போட்டார். அசடு வழிந்தாலும் அவரின் பாராட்டை ஏற்றுக்கொண்டேன்.

இதே மாதிரித்தான் ஒரு 'சுப்பர் மாக்கற்' கடை மாதிரி ஒரு கடையுள் நுழைந்தேன். 'கவுண்டர்' மேசையில் மேட்டர் பார்த்துக் கொண்டிருந்த ஒருத்தர் 'ஐயா வாங்கோ' என்டார். "என்ன ஐயா 'ஒனியன் பிஸ்கட்' வாங்கவோ வந்தனீங்கள்?..." என்று கேட்டார்.

"ஓம் தம்பி... எப்பிடிச் சரியாக நான் 'ஒனியன் பிஸ்கட்' தான் வாங்க வந்தனான் என்று கண்டு பிடிச்சனீர்?" என்று வியப்புத் தாளாமல் கேட்டேன். "இங்கே பம்பாய் வெங்காயம் விக்கிறேல்லை... சின்ன வெங்காயம் விக்கிறேல்லை. பிஸ்கட் ரின் ஐற்றம். பொட்டில் ஐற்றம்ஸ் தான் விக்கிறனாங்கள். இதுக்குள்ளை நீங்கள் வாறதென்டால் 'ஒனியன் பிஸ்கற்றுக்காகத் தான் இருக்கும் எண்டு கண்டு பிடிச்சிட்டன். இனம் இனத்தைத் தானே தேடும்..." என்று அந்தாள் ஒரு புதிர் போட்டுது.

பிறகு சொன்னார் "பம்பல் பரமசிவம் பக்கத்தில வெங்காயத்தைப் பற்றி நீங்கள் எழுதினது எனக்கு நல்லாப் பிடிச்சிருந்தது. அப்படி எழுதுற தைரியம் ஒருத்தருக்கும் வராது. பாராட்டுறன்" என்டு சொன்னார். எனக்கு அப்படியே தேகம் புல்லரிச்சுப் போச்சுது.

"இவ்வளவு சனம் உள்ள வருகுது, போகுது. அதுக்குள்ளை நான் தான் பம்பல் பரமசிவம் என்டு என்னெண்டு கண்டு பிடிச்சனீர்?" என்று என் சந்தேகத்தைக் கேட்டேன்.

"அப்படியே படம் போட்டிருக்கு. வழுக்கைத் தலை, நீக்கல் பல்லு, வளையுக் காது, நகைச்சுவை சேட், முகத்தில ஒரு அறிவு ஒளி வீச்சு... ஒரு அறிவாளிக்கு உள்ள முக இலட்சணம். இதை வைச்சுத்தான் கண்டு பிடிச்சனான்..." என்டார்.

எனக்கு என்ன சொல்லுறதெண்டே தெரியாமல் போச்சுது. பேரன் சொல்லிவிட்ட 'ஒனியன் பிஸ்கட்' டை வாங்கிக் கொண்டு வந்திட்டன்.

நீங்கள் பரபரவென விழிக்கிறதைப் பார்க்க 'ஒனியன்' என்டால் என்னெண்டு உங்களுக்குத் தெரியாது போலக் கிடக்கு. 'ஒனியன்' என்டு எங்களை... வெங்காயத்தை தான் சொல்லுறது கண்டியளோ... எங்கும் எதிலும் வெங்காயம் [illegible]

இதே மாதிரி கஜன் என்டுற அதிபர் சொல்லி நிர்மலன் கேட்டார். "நீங்களோ பம்பல் பரமசிவம் பக்கம் எழுதுறனீங்கள் எண்டு... அந்த சமானிபிக்கேஷன் கதை உங்களுக்கு நடந்ததை ஒருக்கா கஜன் சொன்னவன். கதையாக எழுதியில வரேக்கை யோசிச்சனான். அது நீங்கள் தான் எழுதியதாக இருக்க வேண்டும் என்று... நல்லா இருக்கு... தொடர்ந்து எழுதுங்கோ" எண்டு வாழ்த்தினார் நல்ல ஒரு வாசகன் அவர்.


மனோகரன் இன்னும் ஒரு எழுத்தாளர். அவர் எல்லோரையும் 'சேர்' என்டுதான் கூறுவார். அவர் சொல்லுவார் "பம்பல் பரமசிவம் நல்லா இருக்கு... என்ன சேர் உங்கடை சொந்த அனுபவமோ?... இல்லாட்டில் யாருக்காவது நடந்த விடயங்களை எழுதுறனீங்களோ?" என்டு.

எனக்கு அதற்குச் சரியான விடை தெரியவில்லை. மகேசனின்ரை மகன் வைத்திய கலாநிதி. அவர் சொல்லுற விடயங்களும் வரும். வேறை வேறையும் வரும். பத்திரிகையில வந்த என்ரை கதை நல்லா இருக்குது என்டு மகேஷ் சொன்னவர் என்டு மயூரரூபனுக்குச் சொல்லிப் பெருமைப்பட்டேன்.

"மகேஷ் சேர் எல்லாத்தையும் நல்லா இருக்கெண்டுதானே சேர் சொல்லுறவர். அதை விடுங்கோ..." என்டு மயூரரூபன் 'ரிப்ளை' பண்ணினார். சில விடயங்களை இப்படியா மூஞ்சிக்கு நேரே சொல்லுறது... சரி விடுங்கோ... சின்னப்பொடியள் உப்பிடித்தான் என்ன சொல்லுறம்? என்ன கதைக்கிறம் எண்டு தெரியாமல் [illegible]

வைத்திய கலாநிதி பற்றி எழுதின துக்குப் பிறகுதான் இந்த ஆஸ்பத்திரியில

# வெங்காயத் துணிச்சல்!



நடக்கிற சுவாரசியமான விசயங்கள் ஞாபகத்திற்கு வருகுது.

சின்னச் சின்ன விசயங்கள் சிரிப்புச் சிரிப்பாய் வரும். முந்தியும் இந்த பகிடிகளைக் கேட்டுச் சிரிச்சிருப்பியள். உண்மையில நடந்தது. அம்பது அறுபதுகளில நடந்தது. அதை ஆசுபத்திரியில 'அற்றெண்டன்ட் ஆக' இருந்து இளைப்பாறிய, காலஞ்சென்ற 'ராசண்ணை' (தம்பையா) நாடகம் ஒன்றில நடிக்கக் காட்டிச் சொன்னது இப்பவும் ஞாபகத்தில இருக்குது. அவற்றை நாடகம் பார்க்கேக்கை எனக்கு ஒரு எட்டு ஒன்பது வயது இருக்குமென்று நினைக்கிறன்.

மருந்து கலக்கிற ஓடலி மருந்தைப் போத்தலில் வார்த்து நோயாளியின் தகப்பனிடம் கொடுக்கும் போது சொல்லுவார். குலுக்கிப் போட்டு மருந்தைக் கொடுக்கச் சொல்லி... அவர் வீட்டுக்கு வந்து நோயாளிக் குழந்தையைத் தூக்கி குலுக்கு குலுக்கெண்டு குலுக்கிப் போட்டு மருந்தைக் கொடுப்பார். அவற்றை மனைவி கேட்பா "ஏனப்பா குழந்தையைப் போட்டுக் குலுக்கிறியள்?" எண்டு. "குலுக்கிப் போட்டுத்தான் மருந்தைக் குடுக்கச் சொல்லி, மருந்துக் கலவை தந்தவர் சொல்லிவிட்டவர்" என்று அப்பாவியாக அவர் கூறும் போது சிரிப்புப் பொத்துக் கொண்டுவரும். வேறை ஒருத்தர் மருந்தைக் குடிச்சுப் போட்டு மருந்துப் போத்தலைக் குலுக்கிக் கொண்டிருந்தார். "ஏன் மருந்தைக் குடிச்சிட்டு மருந்துப் போத்தலைக் குலுக்கிறியள்" எண்டு கேட்க.

"குலுக்கிப் போட்டுத்தான் மருந்தைக் குடிக்கச் சொன்னவை. குடிக்கிறதுக்கு முன்னம் மருந்தைக் குலுக்க மறந்துபோனன். அதுதான் இப்ப மருந்து குடிச்சாப் பிறகு மருந்தைக் குலுக்கிறன்" என்பார் அப்பாவியாக. இப்படித்தான் முந்தின படங்கள், நாடகங்களில் நகைச் சுவைக் காட்சி வரும். இப்பத்தைய படங்கள், நாடக நகைச்சுவைக் காட்சி... தெரியும் தானே?...

உப்பிடித்தான் லோகநாதன் நாடகம் பார்க்கப் போறன் என்டு சொல்ல, தகப்பன் சொன்னார். "உவங்கள் விசர்க் கூத்தாடுவாங்கள்... போகாதை எண்டு..." லோகநாதன் விடாப்பிடியா நிற்கவே தகப்பன் அவனை நாடகம் பார்க்க அழைத்துச் சென்றார். முன் வரிசையில இருத்தினார். சபைக் கடைசியில் நின்று நாடகம் பார்த்துக் கொண்டு நின்றார்.

நாடகத்தில் ஒரு விரசக் காட்சி. வசனத்தில் விரசம். சனம் 'ஹ ஹ...' என உரத்த சிரிப்பு. லோகரின் தகப்பனுக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது. குமர்ப் பிள்ளைகளும் அந்த 'ஜோக்'கிற்குச் சிரித்தது அருவருக்கத் தக்கதாக அவருக்கு இருந்தது.

அந்தச் சிரிப்பலையின் மத்தியில் லோகரின் தகப்பனார் பின்னுக்கு நின்றவாறே "லோகநாதன் லோகநாதன்... உதுதான் நாடகம் பார்க்க வந்தனியே...? எழும்பு எழும்பு நட வீட்டுக்கு" என்று உரக்கக் கூறியவாறே மகனையும் அழைத்துக் கொண்டு வீட்டிற்குத் திரும்பிவிட்டார்.

நாடகத்தில் இது ஒரு நாடகமாக எமக்கு மிகுந்த சுவாரசியமாக இருந்தது அந்த நிகழ்ச்சி. இப்போ லோகரைக் கண்டாலும் இதைச் சொல்லிச் சிரிப்போம். நல்ல ஒரு இறைபக்தி உள்ளவராக லோகரை நாங்கள் இப்போது காண்பதுண்டு.

## குட்டி போட்ட பாத்திரம்



ஒரு நாள் பக்கத்து வீட்டுக்காரர் முல்லாவிடம் வந்து "என் வீட்டில் குடும்ப விழா ஒன்று நடக்கிறது. புழங்குவதற்குப் போதிய பாத்திரங்கள் இல்லை. உங்களிடம் இருக்கும் சொந்தப் பாத்திரங்களை இரண்டை இரவலாகக் கொடும். வேலை முடிந்ததும் திருப்பித் தந்து விடுகிறேன்" என்று கேட்டார்.

முல்லா அண்டை வீட்டுக்காரருக்கு மிகவும் பெரிய செம்புப் பாத்திரங்கள் இரண்டை இரவலாகக் கொடுத்தார்.

பக்கத்து வீட்டுக்காரர் ஒரு மாதிரியான நையாண்டி மனிதர். யாரையும் கேலியும் கிண்டலும் செய்து சிரிக்கச் செய்வது அவரது வழக்கம்.

முல்லாவிடம் இரவல் வாங்கிய பாத்திரத்தை அவர் திருப்பிக் கொடுக்கும் போது ஏதாவது ஒரு விதத்தில் முல்லாவை நையாண்டி செய்து பார்க்க வேண்டும் என அவர் தீர்மானித்தார்.

அவர் பாத்திரங்களை திருப்பிக் கொடுக்க வந்தபோது முல்லா கொடுத்த இரண்டு பாத்திரங்களை கூட ஒரு செம்பும் இருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டார்.

"நான் இந்தச் செம்பை உங்களுக்குக் கொடுக்கவில்லையே?" என வியப்புடன் கேட்டார் முல்லா.

"முல்லா அவர்களே உங்களுடைய பாத்திரங்கள் என் வீட்டில் இருந்த போது இந்தச் செம்பைக் குட்டி போட்டன. அதனால் குட்டியையும் உடனே கொண்டு வந்தேன்" என்றார் அண்டை வீட்டுக்காரர்.

சற்று யோசித்த முல்லா அவர் தம்மை நையாண்டி செய்வதற்காக இந்த நாடகம் ஆடுகிறார் என்று புரிந்து கொண்டார். சந்தர்ப்பம் வாய்க்கும் போது அவருக்குச் சரியான புத்தி கற்பிக்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டார்.

"ஆமாம் நண்பரே பாத்திரங்களை கொடுக்கும்போது அவை கர்ப்பமாக இருக்கின்றன என்ற உண்மையைச் சொல்ல மறந்து விட்டேன்" என்று கூறியவாறு அண்டை வீட்டுக்காரர் கொடுத்த பாத்திரங்களை வாங்கிக் கொண்டார் முல்லா.

சில நாட்கள் கடந்தன. ஒரு நாள் முல்லா அண்டை வீட்டுக்காரரிடம் சென்று "என் வீட்டில் ஒரு விசேஷம். புழங்குவதற்குத் தேவையான பெரிய பாத்திரம் இல்லை. தயவு செய்து பெரிய பாத்திரங்கள் இரண்டு கொடுங்கள்" என்று கேட்டார். அந்த வீட்டுக்காரரும் இரண்டு பெரிய பாத்திரங்களைக் கொடுத்தார். முல்லா அவற்றை வீட்டுக்கு எடுத்து வந்தார்.

இரண்டு நாட்கள் கழித்து முல்லா ஒரு பாத்திரத்தை மட்டும் எடுத்துக் கொண்டு அண்டை வீட்டுக்காரரிடம் சென்றார்.

"உங்களிடம் வாங்கிய பாத்திரம் இதோ இருக்கிறது. பெற்றுக்கொள்ளுங்கள்" என்றார்.

"நான் இரண்டு பாத்திரம் கொடுத்தேனே. ஒன்றுதான் திருப்பிக் கொண்டு வந்திருக்கிறீர்கள்? என அண்டை வீட்டுக்காரர் கேட்டார்.

முல்லா தமது முகத்தில் வருத்தம் பிரதிபலிக்க "நண்பரே ஒரு தீய நிகழ்ச்சியினைச் சொல்வதற்காக வருந்துகிறேன். தாங்கள் எனக்கு அளித்த பாத்திரங்களில் ஒன்றான பெண் பாத்திரம் கர்ப்பமாக இருந்திருக்கிறது. என் வீட்டுக்கு வந்த இரவே அது பிரசவ வேதனைப்பட ஆரம்பித்து விட்டது. துரதிஷ்டவசமாக அது பிரசவித்த குழந்தையும் செத்து விட்டது. தாயும் இறந்து விட்டது. அவை இரண்டையும் தகனம் செய்து விட்டேன்" என்றார்.

முல்லா தனக்குச் சரியான பதிலடி தருகிறார் என்பதைப் புரிந்து கொண்ட அண்டை வீட்டுக்காரர் அவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

"இனி இந்த மாதிரி உங்களை நையாண்டி செய்ய மாட்டேன். தயவு செய்து என் பாத்திரத்தைத் திருப்பிக் கொடுத்து விடுங்கள்" என்று வேண்டிக் கொண்டார். முல்லா அவருடைய பாத்திரத்தைத் திருப்பிக் கொடுத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கடவுளின் கையில் ஆயுதம் எதற்கு?

## பித்தன் பதில்கள்

**த.இந்திராணி, சாவகச்சேரி**
கே: பித்தரே, பெற்றதாயின் அன்பு கட்டிய மனைவியின் அன்பு இவற்றில் பெறுமதி மிக்கது எது?
ப: ஏதாவதொன்று ஆகிவிட்டால் மனைவியின் அன்பை விவாகரத்தின் மூலம் 'கட்' பண்ணிவிடலாம். ஆனால் ஒரு பெற்றதாயின் அன்பை எந்நாளும் எப்போதாயினும் துண்டித்து விட இயலாதே. அது புனிதமானது. பெறுமதி மிக்கது.



**இந்திரா சங்கர், கொழும்பு 03**
கே: மற்றெந்த மதங்களில் இல்லாத விதத்தில் எமது இந்து மதக் கடவுள்கள் கைகளில் ஏதோவொரு ஆயுதம் வைத்திருப்பதாகச் சித்தரிக்கப்பட்டுள்ளதேன்?
ப: ஆதிகாலத்தில் மனிதர்களைப் பயம் கொள்ள வைத்தே சமூகம் அவர்களை நல்வழி நடக்க வைத்ததென்பது வரலாறு. அதன் அடிப்படையில் அமைந்ததே இந்து மதக் கடவுள்களின் புறத்தோற்றம் குறித்த சித்தரிப்பு. தொன்மை வாய்ந்த மதம் என்பதால் இந்து மதத்தவர்களது அத்தகைய சித்தரிப்பு தொடர்ந்த வழக்கில் இருந்து வருவதாகக் கொள்ளலாம். மற்றப்படி அனைத்து மதங்களும் கருணை, அன்பு, காருண்யத்தை வற்புறுத்துபவையே.

**நாகராஜா ஆனந்த், வசாவிளான்**
கே: ஆண் பிள்ளையானாலும் சரி, பெண் பிள்ளையானாலும் சரி சிறு வயது முதலே அவர்களைக் கட்டுப்பாட்டுடன் வளர்க்காது அவர்களுக்குத் திருமணம் செய்து வைக்கும் வேளையில் அவர்களது சீர்கேடுகளை மறைத்து யாரோ ஒருத்தரினதோ ஒருத்தியினதோ தலையில் கட்டிவிடும் பெற்றோர் குறித்து?
ப: மனித நாகரீகத்தின் உயர் பண்பு ஒழுக்கமும் கட்டுப்பாடும். இவற்றைப் புறந்தள்ளி மனம் போன போக்கில் தமது பிள்ளைகளை வாழ அனுமதிக்கும் பெற்றோர் ஏதோவொரு சந்தர்ப்பத்தில் தமது பிள்ளைகளின் ஒழுக்கச் சீர்கேடு காரணமாக சமூகத்தின் முன்னால் தலை கவிழ்ந்து அவமானப்பட நேரும் என்பது தெரிந்த உண்மை.



**ப.வேலுவேல், கொழும்பு 06**
கே: நாட்டில் இன்று முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு சமூகச் சீர்கேடுகள் மலிந்து விட்டதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறதே. இத்தகைய நிலையை மாற்றியமைக்க இயலாதா பித்தரே?
ப: பொதுவாக ஒரு கை தட்டா ஓசை எழாது என்பது யதார்த்த உண்மை. கிராம மட்டத்தில், சமூக மட்டத்தில் சகலரும் ஒன்றுபட்டு முயற்சித்தால் அந்த முயற்சி திருவினையாகும் என்பது மட்டும் நிச்சயம்.

**சுப.குருகானந்தன், பரந்தன்**
கே: பித்தரே சாமர்த்தியப் பதில் வேண்டாம். எங்கே சொல்லும் பார்க்கலாம். குழந்தை எந்தப் பாலில் அடங்கும்?
ப: ஆண்பாலா பெண்பாலா என்ற ஆராய்ச்சியெல்லாம் இப்போதெதற்கு? எந்த முரண்டு பிடிக்கும் குழந்தையும் தாய்ப்பாலில் அடங்கும்.



**வே.பிரணவன், கிளிநொச்சி**
கே: பித்தரே ஒவ்வொரு தோல்வியும் வெற்றிக்கான படிக்கற்கள் என்கிறார்களே. இது உண்மைதானா?
ப: இது யதார்த்த உண்மை. ஒரு போதும் பொய்யாகிப் போய்விடாத உண்மை. தோல்வி கண்டு துவண்டு விடாத மன உறுதியும் விடா முயற்சியும் இருக்குமானால் தோல்விகள் வெற்றிக்கான படிக்கற்களே.

**க.முருகேசு, வேப்பங்குளம், வவுனியா**
கே: பெண்கள் காட்டும் அன்பு என்பது எம்மைப் பித்தனாக்கி அலைய வைப்பது. இது பாடல் வரி. அது சரி நீரும் காதலித்துக் கல்யாணம் செய்தவர் என்கிறார்களே உண்மையா?
ப: நீரும் என்று விளிப்பதிலிருந்து நீர் கூட அந்த ரகம் தான் போல் தெரிகிறது. காதலித்த போது உலகமே சொர்க்கமாகத் தான் தெரிந்தது. கல்யாணத்தின் பின் காலப்போக்கில் இந்த நிலைக்கு உட்பட நேர்ந்தது தான் பரிதாபம். என்ன செய்வது? கழற்ற முடியாத விலங்கையல்லவா கைகளில் மாட்டிக் கொண்டோம்.



**ப.புவிந்தகுமார், பூநகரி**
கே: நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தும் இன்சுலின் மருந்தைக் கண்டுபிடித்தவர் யார் பித்தரே?
ப: எந்த நோக்கத்துடன் இப்படியொரு கேள்வி கேட்கிறீர் என்று மண்டையை உடைத்துக் கொண்ட பின் பதில் தருகின்றேன்.
குறும்புக்காகக் கேட்டிருந்தால் பதில் - சத்தியமாய் நானில்லை ஐயா அந்த ஆள் என்று சொல்லி விடலாம். மாணவனாக இருந்து தெரிந்து கொள்ளும் ஆவலில் கேட்டிருந்தால் பதில் - 'பாண்டிங் பெஸ்ட்' என்ற கனடா நாட்டுக்காரரால் 1921 ஆம் ஆண்டு இன்சுலின் மருந்து கண்டு பிடிக்கப்பட்டதெனக் கூறி உதவலாம். என்னை மாட்டிவிட்டுத் திக்குமுக்காட வைக்கும் நோக்கில் கேட்டிருந்தால் பதில் - உம்மால் அது முடியவே முடியாதையா! இது கண்ணி புகம். சரியான விடையைத் தேடிப் பெற்றுக் கொள்ள ஒரு நிமிடம் கூட ஆகாது.

## சொற்சிலம்பம் போட்டி இல: 535

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | | ■ | 4 | 5 |
| | ■ | 6 | | ■ | 7 | | |
| 8 | 9 | | | 10 | | ■ | |
| 11 | | | ■ | 12 | | 13 | |
| | ■ | 14 | 15 | | ■ | | ■ |
| ■ | 16 | | | ■ | 17 | | 18 |
| 19 | | ■ | 20 | | | ■ | |
| 21 | | | | ■ | 22 | | |

அனுப்புபவர் பெயர் : ..........................................

விலாசம் : ..........................................

..........................................

கையொப்பம்: ..........................................

### சொற்சிலம்பம் போட்டி இல. 535

சொற்சிலம்பம் 535 போட்டிக்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2012 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 05 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் செப்ரெம்பர் 12 ஆம் திகதிய சுடர் ஒளியின் பிரசுரமாகும். தபாலட்டையில் மட்டுமே அனுப்புதல் வேண்டும். கடிதங்களில் அனுப்பப்படும் விடைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

முதலாவது பரிசாக ரூபா 250உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100உம் வழங்கப்படும். பல சரியான விடைகள் கிடைக்குமிடத்து குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தெரிந்தெடுக்கப்படுவார்கள்.

**அனுப்பவேண்டிய முகவரி:**
**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

### மேலிருந்து கீழ்

01. பிறப்பு நிகழ்வு.
02. சிலப்பதிகாரத்தில் கோவலன் தந்தை
03. தாங்குதடையது
04. கவலை ஆகாரம்
05. நன்மையைக் குறிக்கும் அடைமொழி.
07. நடை வகையில் ஒன்று
09. பெண் ஆடு
10. கட்டுப்பாட்டிற்குள் இருப்பதைக் குறிக்கும்
13. பாட்டு
15. கட்டுப்பாடில்லாமல் கெட்டலைபவன்
16. ஒரு கடல்வாழ் உயிரினம்
17. இது உருவில் மிகச் சிறியது.
18. தங்குமிடம்
19. திருத்தத்தை ஆக்கச் சொல்லும்

### இடமிருந்து வலம்

01. சிறப்பானது என்பதைக் குறிக்கும்
04. திரவத்திற்கும் திண்மத்திற்கும் இடைப்பட்ட நிலை
06. ஒரே மாதிரியான
07. பருத்து இருப்பதைக் குறிக்கும்
08. ஒரே மாதிரியான நிலையைப் பேணுவதைக் குறிக்கும் சொல்
11. வாழ்க்கையில் கதி அற்ற நிலை
12. உணவுக் கலையில் நடப்பது
14. அழிப்பு
16. பாராட்டுக்குரிய சொல்
17. படிப்பு
19. இருவகைப்பாலில் ஒன்று
20. மரத்தின் பாகம்
21. சிறையிருப்பவன் வேண்டுவது
22. இரத்தம்

### சொற்சிலம்பம் போட்டி இல: 532 விடைகள்

**மேலிருந்து கீழ்**
01.முகதா, 02.தருமதி, 03.வரும், 04.துணி, 05.இல்லம், 08.தகரம், 10.தருநாம், 13.அவதரம், 14.அறுநாள், 16.வரதிஸ், 18.கருணி, 19.ஆயலோ, 21.சாப.

**இடமிருந்து வலம்**
01.முதல்வது, 05.இசை, 06.கரு, 07.தணிதல், 09.தாரதம், 11.கலம், 12.திரு, 13.அரம், 15.மதுலம், 17.நுகம், 19.ஆடி, 20.மரு, 21.சாமரம், 22.விசிறியம், 23.லோம்.

### போட்டி இல. 532 இல் பரிசு பெற்றோர்

**1 ஆம் பரிசு** — ஏ.எம்.அஸ்தபா, முனைய வளவு வீதி, ஏறாவூர்-01.

**2 ஆம் பரிசு** — கே.கிருஷ்ணகோபால், அடைக்கலம் தோட்டம், கந்தசுவாமி கோயிலடி, வட்டுக்கோட்டை.

**3 ஆம் பரிசு** — வரதை-சி.மணிமொழியாள், பூம்பொழில் திருநகர் தெற்கு, கிளிநொச்சி.

### பாராட்டுப் பெறுவோர்

(1) திருமதி.தவளாம்பிகை நாகேந்திரன்,
இல-11-3/1, நெல்சன் இடம்,
வெள்ளவத்தை, கொழும்பு-06.

(2) அ.ரஞ்சுரான்,
மகாத்மா வீதி, ஐயனார் கேணியடி,
நெல்லியடி, கரவெட்டி.

(3) செ.சரோஜா,
சில்லாலை, வல்வெட்டித்துறை.

(4) பி.அஞ்சலிக்கா,
இல 32/31 அன்னை திரேசா வீதி,
இறம்பைக்குளம்,
வவுனியா.

(5) எம்.வேலுப்பிள்ளை,
2ம் வட்டாரம், கோம்பாவில்,
புதுக்குடியிருப்பு.

(6) ஆ.கா.ரஞ்சுரான்,
இல-24 5/3, மாதவ் கஹுவத்தை
ஒழுங்கை, கொழும்பு-06.

(7) திருமதி.எஸ்.பாக்கியநாதன்,
நூலகர், பொதுநூலகம்,
கூமாங்குளம்.

(8) சி.சௌமியா,
அளம்பில், முல்லைத்தீவு.

(9) கு.சிவபாலராஜா,
இல-14, சட்டநாதர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(10) இ.அர்ச்சனா
'உதயபுரம்', பெரிய கல்லாறு 03,
கல்லாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு

## அடுத்த போட்டியை நடத்தும் பிரேசிலுக்கு ஒலிம்பிக் கொடி சென்றது



4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் ஒலிம்பிக் போட்டி அடுத்து 2016ஆம் ஆண்டில் பிரேசில் நாட்டில் உள்ள ரியோடி ஜெனிரோ நகரில் நடக்க இருக்கிறது. இதற்காக தற்போது லண்டனிலிருந்த ஒலிம்பிக்கொடி பிரேசில் நாட்டிடம் ஒப்படைக்கப்பட்டது.

ரியோடி ஜெனிரோ நகர மேயர் எடுர்டோ பயஸ், கவர்னர் ஜெர்சியோ கேப்ரல் ஆகியோர் கொடியை தனி விமானத்தில் பிரேசில் நாட்டுக்கு எடுத்து வந்தனர். ரியோடி ஜெனிரோ நகரில் இறங்கிய அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

வாணவேடிக்கை நிகழ்ச்சி, ஆடல், பாடலுடன் அவர்களை ஏராளமானோர் திரண்டு வந்து வரவேற்றனர். லண்டன் ஒலிம்பிக்போட்டியில் பிரேசில் 3 தங்கம் உள்பட 17 பதக்கங்கள் பெற்றது. அடுத்த போட்டி உள்ளூரில் நடப்பதால் அதிகளவு பதக்கங்களைப் பெற வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த நாடு முயற்சி எடுத்துள்ளது.

இது தொடர்பாக மேயர் எடுர்டோ பயஸ் கூறும் போது, பிரேசில் நாட்டில் போட்டி நடத்துவதற்கு கிடைத்த வாய்ப்பு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. நாடு முழுவதும் ஒற்றுமையாகச் செயல்பட்டு இந்த வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம். இது எங்களுக்கு கிடைத்த மிகப்பெரிய கௌரவம், அடுத்த போட்டியில் நிச்சயம் பிரேசில் அதிக பதக்கங்களைப் பெற்று திறமையை வெளிப்படுத்தும் என்றார்.

## ரொனால்டோவுடன் மோதல் எதுவும் இல்லை: மெஸ்ஸி



போர்த்துக்கல் அணியின் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோவுடன் தனக்கு மோதல்கள், எதிர்ப்புத் தன்மைகள் எவையும் கிடையாது என ஆர்ஜென்டினாவின் நட்சத்திர வீரரான லயனொல் மெஸ்ஸி தெரிவித்துள்ளார்.

தங்களுக்கிடையில் எப்போதுமே மோதல் இருந்ததில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

ரியல் மட்ரிட் கழகம் சார்பாகப் போட்டிகளில் பங்குபற்றும் கிறிஸ்டியானோ ரொனால்டோவும், பார்சிலோனா கழகம் சார்பாகப் போட்டிகளில் பங்குபற்றும் லயனொல் மெஸ்ஸியும் நவீன கால்பந்தாட்டத்தில் தவிர்க்கப்பட முடியாத நட்சத்திரங்களாகக் கருதப்படுகின்றனர்.

தங்களுடைய நாட்டிற்காகவும், கழகங்களிற்காகவும் அதிக கோல்களைப் பெற்றுவரும் இருவரும் விளையாட்டின் எதிரிகளாகக் கருதப்படுகின்றனர்.

எனினும் தங்கள் இருவருக்குமிடையில் எந்தவித மோதல்களோ, எதிரித் தன்மைகளோ காணப்படவில்லை எனத் தெரிவித்த மெஸ்ஸி, தான் இதுவரை கிறிஸ்டியானோ ரொனால்டோவுடன் மோதல்களில் ஈடுபட்டதில்லை எனத் தெரிவித்தார். ஊடகங்களே இவ்வாறான கருத்தை எழுப்ப முயற்சிக்கின்றன எனத் தெரிவித்த அவர், ஊடகங்கள் தங்களை எதிரிகளாகக் காண்பிக்க விரும்புகின்றன எனத் தெரிவித்தார். கிறிஸ்டியானோ ரொனால்டோ ஒரு மிகச்சிறந்த வீரர் எனவும் அவர் தெரிவித்தார்.

## ஐ.சி.சி.யின் 2 விருதுக்கு கோலி பெயர் பரிந்துரை



சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) ஆண்டு தோறும் சிறந்த கிரிக்கெட் வீரர்களை தேர்வு செய்து விருது வழங்கி வருகிறது. 2012ஆம் ஆண்டுக்கான ஐ.சி.சி. விருதுக்கு பரிந்துரைக்கப்பட்ட வீரர்கள் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய அணியின் இளம் வீரரான விராட் கோலி 2 விருதுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளார். ஆண்டின் சிறந்த வீரர், ஒருநாள் போட்டியில் சிறந்த வீரர் என 2 விருது பரிந்துரையில் அவர் உள்ளார். வேறு எந்த இந்திய வீரரும் 2 விருதுக்கான பரிந்துரையில் இல்லை.

இந்திய அணி கேப்டன் டோனி, காம்பீர் ஆகியோர் ஒருநாள் போட்டியின் சிறந்த வீரர் விருது பரிந்துரையில் உள்ளனர். ரசிகர்கள் தேர்வு செய்யும் விருதுக்கான பரிந்துரையில் தெண்டுல்கர் உள்ளார். அவருடன் மேலும் 4 பேர் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர். ஒன்லைன் மூலம் ரசிகர்கள் தேர்வு செய்யும் வீரருக்கு இந்த விருது வழங்கப்படும்.

ஒவ்வொரு விருதுக்கும் பரிந்துரைக்கப்பட்ட வீரர்கள் விவரம் வருமாறு:-

ஆண்டின் சிறந்த வீரருக்கான ஐ.சி.சி. விருது:- விராட் கோலி (இந்தியா), அஜ்மல் (பாகிஸ்தான்), ஸ்டுவர்ட் பிராட் (இங்கிலாந்து), ஹசிம் அம்லா (தென்ஆப்பிரிக்கா), மைக்கேல் கிளார்க் (ஆஸ்திரேலியா), பிலாண்டர் (தென்ஆப்பிரிக்கா), சங்ககரா (இலங்கை), கூக் (இங்கிலாந்து), ஸ்டெபானி டெய்லர் (வெஸ்ட் இண்டீஸ்)

ஒருநாள் போட்டியில் சிறந்த வீரர்:- விராட் கோலி, டோனி, காம்பீர் (இந்தியா), அப்ரிடி, அஜ்மல் (பாகிஸ்தான்), மைக்கேல் கிளார்க், வாட்சன் (ஆஸ்திரேலியா), கூக், ஸ்டீவன்பின் (இங்கிலாந்து), சங்ககார, மலிங்கா (இலங்கை), மேக்குல்லம் (நியூசிலாந்து), சுனில் நரீன் (வெஸ்ட்இண்டீஸ்), மார்னே மார்கல் (தென்ஆப்பிரிக்கா), பிரெண்டன் டெய்லர் (ஜிம்பாப்வே), சகீப்-அல்- ஹசன் (வங்காளதேசம்).

டெஸ்ட் போட்டியின் சிறந்த வீரர் விருது:- ஹசிம் அம்லா, காலிஸ், பிலாண்டர், டிவில்லியர்ஸ், ஸ்டெய்ன் (தென்ஆப்பிரிக்கா), ஸ்டுவர்ட் பிராட், கூக், பிரையர் (இங்கிலாந்து), சந்தர்பால், சாமுவேல்ஸ் (வெஸ்ட்இண்டீஸ்), சங்ககார (இலங்கை), மைக்கேல் கிளார்க் (ஆஸ்திரேலியா).

ரசிகர்கள் தேர்வு செய்யும் விருது:-தெண்டுல்கர் (இந்தியா), காலிஸ், பிலாண்டர் (தென் ஆப்பிரிக்கா), ஆண்டர்சன் (இங்கிலாந்து), சங்ககரா (இலங்கை), சங்ககரா, ஹசிம் அம்லா, கிளார்க், கூக், அஜ்மல் ஆகியோர் 3 விருதுக்கான பரிந்துரையில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் போட்டியில் ஸ்ரீகோணேஸ்வரா இந்துக்கல்லூரி வெற்றி

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்ட 50 ஓவர் போட்டிகள் திருகோணமலை ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரி அணிக்கும் கந்தளாய் அக்ரபோதி தேசிய பாடசாலை அணிக்கும் இடையில் (17 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான போட்டி) ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.



நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற அக்ரபோதி அணியினர் முதலில் துடுப்பெடுத்தாடினர். அவர்கள் நிர்ணயிக்கப்பட்ட பந்து பரிமாற்றங்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 210 ஓட்டங்களைப் பெற்றனர். பதிலுக்கு விளையாடிய ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரி அணி 47.3 ஓவர்களில் 8 விக்கெட் இழப்பிற்கு 212 ஓட்டங்களைப் பெற்று 2 விக்கெட்டுக்களினால் வெற்றி பெற்றது.

## ஒலிம்பிக்கில் தங்க பதக்கம் வென்ற சீன வீராங்கனைக்கு அரசியல் பதவி



சீனாவைச் சேர்ந்த நீச்சல் வீராங்கனை ஜியாவோ லியூயாங் (21). இவர் சமீபத்தில் லண்டனில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் 200 மீற்றர் பட்டர்பிளை நீச்சல் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றார். மேலும் 200 மீற்றர் பட்டர்பிளை நீச்சல் போட்டியின் முந்தைய சாதனைகளை முறியடித்தார்.

இவரது இந்த சாதனை சீனாவுக்கு பெருமை சேர்த்தது. எனவே, அவரை சீன அரசு கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியலமைப்பு குழுவில் உறுப்பினராக நியமித்து கௌரவித்துள்ளது.

இப்பதவி சீனாவில் மிக அதிகாரம் படைத்தது. இந்த குழு உறுப்பினர்கள்தான் கம்யூனிஸ்டு கட்சியின் பொதுச் செயலாளர் மற்றும் சீனாவின் அதிபர் போன்ற தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரம் படைத்தது. மேலும் கட்சியில் பெண்களின் பங்கு அதிகம் இருக்க வேண்டும் என்பதற்காக இவரை கம்யூனிஸ்ட் தலைவர்கள் தேர்வு செய்தனர்.

மிகக் குறைந்த வயதில் இந்தக் குழுவின் உறுப்பினரான பெருமை ஜியாவோ லியூயாங்கிற்கு கிடைத்துள்ளது.


விளையாட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொபைல் கோபுரம் அருகில் வசிக்கிறீர்களா?

## மூளை பாதிக்கப்படும்






உங்களுடைய வீடு அல்லது வேலை பார்க்கும் இடத்திலிருந்து 50 மீற்றர் தொலைவில், மொபைல் போன் சிக்னல்களை வாங்கி அனுப்பும் டவர்கள் இருக்கின்றனவா? இது மைக்ரோவேவ் அடுப்பின் உள்ளே 24 மணி நேரம் இருப்பதற்குச் சமம் என்று மும்பையில் உள்ள ஐ.ஐ.டி.யில் எலக்ட்ரிக்கல் இஞ்சினியரிங் பிரிவின் பேராசிரியர் கிரிஷ் குமார் கருத்துத் தெரிவித்துள்ளார். சென்ற 2010 டிசம்பரில் இவர் இந்த ஆய்வு முடிவினை மத்திய அரசின் தொலைத் தொடர்பு துறைக்கு ஓர் அறிக்கையில் அளித்தார். இதனைத் தொடர்ந்து மத்திய அரசின் பல துறைகளுக்கான அமைச்சரவை இணைந்து, மொபைல் போன் டவரின் மின் காந்த அலைக்கதிர் வெளிப்பாட்டினைக் 450 mw/sq m என்ற அளவிற்குக் கட்டுப்படுத்த வேண்டும் என பரிந்துரை செய் தன. ஆனால், இன்றுவரை இது அமுல்படுத்தப்படவில்லை என பேரா. குமார் தெரிவித்துள்ளார்.

இது சார்ந்து மேற்கொண்ட இன்னொரு ஆய்வில், இந்தக் கோபுரங்கள் அருகே வசிப்பவர்களில் ஒரு சிலருக்கு மூளையில் கான்சர் நோய் வரும் வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. இருந்தாலும், மிக அருகே வசிப்பவர்களுக்கு, தூக்கமின்மை, தலைவலி, மயக்கம், மூட்டுவலி போன்றவையும் வரலாம். தொடர்ந்து மொபைல் போன் பயன்படுத்துபவர்களுக்கு மூளையில் கட்டி போன்றவை வர வாய்ப்புள்ளதாக, புது டில்லியில் உள்ள இந்திர பிரஸ்தா அப்பல்லோ மருத்துவமனை புற்றுநோய் அறுவை மருத்துவர் டொக்டர் சமீர் கௌல் தெரிவித்துள்ளார்.

இந்தப் பாதிப்பு மென்மையான தலை ஓட்டினைக் கொண்டுள்ள சிறுவர்களிடம் இன்னும் அதிகமாக இருக்கும் எனவும் சொல்லப்படுகிறது. ஆனால், மொபைல் போன் சேவை வழங்கி வரும் நிறுவனங்களுக்கான அமைப்பு இதனை மறுத்துள்ளது. அரசு வரையறுக்கப்பட்ட நிலையில் கதிர்வீச்சுடன்தான் தற்போது மொபைல் போன் கோபுரங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. எனவே பாதிப்பு வர வாய்ப்பில்லை என்று அந்த அமைப்பின் முதன்மை இயக்குநர் மாத்யூஸ் விளக்கம் அளித்துள்ளார்.

கோபுரங்கள் பாதுகாப்பாகத்தான் இயங்குகின்றன என்றால், ஏன் அது குறித்து இத்தனை சட்டங்களும், ஆய்வுகளும் இருக்கின்றன என்று பொது நல அமைப்பாளர்கள் கேட்கின்றனர். இதனால் பாதிப்பு ஏற்பட்டவர்கள், கோபுரங்கள் உள்ள இடங்களில் இருந்து மற்ற இடங்களுக்குச் செல்லத் தொடங்கி உள்ளனர்.

## புதிய விண்டோஸ் 8 போனை களமிறக்கும் நொக்கியா



நொக்கியா தனது புதிய நவீன விண்டோஸ் 8 போனை வெகு விரைவில் களமிறக்கப் போவதாக நோக்கியாவின் தலைமை இயக்குநர் ஸ்டீபன் இலோப் அறிவித்திருக்கிறார். இந்தப் புதிய விண்டோஸ் போன் அப்பிளின் புதிய ஐபோன் வருவதற்கு முன்பாக அதாவது வரும் செப்டம்பர் மாதத் தொடக் கத்தில் களமிறங்கும் என்று தெரிவித்திருக்கிறார்.

உலகச் சந்தையில் தன்னை நிலை நிறுத்திக்கொள்ள கடுமையாகப் போராடிவரும் நொக்கியா இந்த புதிய விண்டோஸ் போன் மூலம் தன் இழந்த பெருமையை மீட்கலாம் என்று நம்புகிறது.

வரும் செப்டம்பர் 12ல் அப்பிள் தனது புதிய ஐபோனைக் களமிறக்குகிறது. அதனால் அதற்கு முன்பாகவே தனது விண்டோஸ் போனை களமிறக்குவதில் தீவிரமாக இருக்கிறது நோக்கியா.

இந்த ஆண்டின் 2வது காலாண்டில் மட்டும் 1.53 பில்லியன் ஈரோக்களை இழந்தது அநாக்கியா. மேலும் இந்தக் கால கட்டத்தில் நோக்கியா தனது 4 மில்லியன் விண்டோஸ் போன் களை மட்டுமே விற்க முடிந்தது.

ஆனால் அதே காலக்கட்டத்தில் அப்பிள் 26 மில்லியன் ஐபோன்களையும் சாம்சங் 50 மில்லியன் ஸ்மார்ட்போன்களையும் விற்றுத் தீர்த்து நொக்கியாவிற்கு கிலியை ஏற்படுத்தியது.

எனவே இந்தப் புதிய விண்டோஸ் போன் நொக்கியாவை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் செல்லும் என்று மிகவும் நம்பப்படுகிறது.

## கணினி விளையாட்டுகளுக்காக புதிய தொழில்நுட்பம் அறிமுகம்





பொழுதுபோக்கிற்காகவும், மூளை விருத்தியை அதிகரிக்கவும் அதிகமானவர்களால் கணினி விளையாட்டுக்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதனால் நாளுக்கு நாள் கணினி விளையாட்டுக்கு புதிய தொழில் நுட்பங்கள் உட்புகுத்தப்பட்டு மெருகூட்டப்பட்டு வருகின்றது. இம்மாற்றங்களின் அடிப்படையில் தற்போது கணினி விளையாட்டுக்களைக் கட்டுப்படுத்துவதற்கென புளூருத் தொழில்நுட்பத்துடன் கூடிய புதிய தொடுதிரைக் கட்டுப்படுத்திகள் உருவாக்கப்பட்டு அறிமுகப் படுத்தப் பட்டுள்ளன.

ரிங்போவ் என அழைக்கப்படும் இந்த நவீன தொழில் நுட்பமானது அன்ராயிட் சாதனங்கள் மற்றும் ஐ.ஓ.எஸ் சாதனங்கள் போன்றவற்றில் செயற்படக்கூடியதுடன் ஒருமுறை சார்ச் செய்து தொடர்ச்சியாக ஐந்து மணி நேரங்கள் வரை பயன்படுத்தக்கூடியது.

## சாம்சங்'கின் புதிய மஞ்சள் நிற லேப்டாப்..



கணினிச் சந்தையை அதிரடியாகக் கலக்கிக் கொண்டிருக்கும் கொரியாவைச் சேர்ந்த சாம்சங் நிறுவனம் சமீபத்தில் உயர்தரம் கொண்ட ஒரு புதிய லேப்டாப்பைக் களம் இறக்கி இருக்கிறது. இந்த லேப்டாப்புக்கு சாம்சங் சீரீஸ் 7 கேமர் எல்லோ 3டி என்று பெயர் சூட்டப் பட்டிருக்கிறது.

இந்தப் புதிய லேப்டாப்பின் பெயரிலேயே எல்லோ என்று இருப்பதால் இந்த லேப்டாப் மஞ்சள் நிறத்தில் மட்டுமே வரும். மஞ்சள் நிறம் மக்களின் மனங்களை மயக்கிவிடும் என்ற நம்பிக்கையில் இந்த லேப்டாப்பை மஞ்சள் நிறத்தில் களமிறக்குகிறது சாம்சங். அட்டகாசமான வடிவத்தில் வரும் இந்தப் புதிய லேப்டாப் ஏராளமான தொழில்நுட்ப வசதிகளுடன் களமிறங்குகிறது. குறிப்பாக இந்த லேப்டாப் மிகவும் சக்தி வாய்ந்த எஎம்டி ரேடியோன் எச்டி 7870 எம் மொபைல் ஜிபியுவைத் தாங்கி வருகிறது. இதனால் இந்த லேப்டாப் க்ராபிக்ஸில் பட்டையைக் கிளப்பும் என்று நம்பலாம்.

அதோடு இந்த லேப்டாப் 1டிபி எச்டிடி மற்றும் அதிரடி வேகம் கொண்ட 128ஜிபி எஸ்எஸ்டியுடன் வருகிறது. அதனால் இது தாறுமாறான வேகத்துடன் இயங்கும். இதன் 14.3 இன்ச் 3டி திரையில் வீடியோ கேம் விளையாடுவது ஒரு புதுமையான அனுபவத்தைத் தரும்.

இன்டல் கோர் ஐ7-3610 க்யுஎம் ப்ராசஸருடன் இந்த லேப்டாப் வருவதால் இது மிகவும் உறுதியாக இருக்கும். அதோடு இன்டலின் ஐவி பிரிட்ஜ் சிபியுவை இந்த லேப்டாப் கொண்டிருப்பதால் இதன் இயங்கு திறனும் அமர்க்களமாக இருக்கும்.

குறைந்த எடையில் மிகவும் அடக்கமாக இருக்கும் இந்த மஞ்சள் லேப்டாப் 2,643 அமெரிக்க டொலர்களுக்கு விற்கப்படுகிறது.

## 'லாஜிடெக்' கின் புதிய வீடியோ கேம் மவுஸ்




கணினி உதிரி பாகங்களைத் தயாரித்து வரும் லாஜிடெக் நிறுவனம் ஒரு புதிய ஆப்டிக்கல் கேமிங் மவுசை தயாரித்திருக்கிறது. இந்த புதிய கேமிங் மவுசிற்கு ஆப்டிக்கல் கேமிங் மவுசிற்கு ஜி400 என்ற பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. உயர்தர ஆப்டிக்கல் சென்சார், தரமான சென்சிட்டிவிட்டி மற்றும் சூப்பரான கட்டுப்பாட்டு வசதிகள் ஆகியவை இந்த மவுசின் விசேஷமான அம்சங்களாகும்.

இந்த ஜி400 மவுஸ் யுஎஸ்பி வழியாக ஒரு நிமிடத்தில் 1000 தகவல்களை பரிமாற்றம் செய்கிறது. அதனால் இந்த மவுஸ் மிக வேகமாக இயங்கும் என்று நம்பலாம். அதோடு இந்த மவுஸ் மிக உறுதியாக இருக்கும். இந்த மவுஸ் கைக்கு அடக்கமாக இருப்பதால் இதை சூப்பராக எளிதாக இயக்க முடியும்.

இந்த புதிய மவுஸ் வீடியோ கேம் பிரியர்களுக்காக தயாரிக்கப்பட்டிருப்பதாக லாஜிடெக்கின் இந்தியா விற்பனை மேலாளர் சுப்ரோதோ பிஸ்வாஸ் கூறுகிறார். இந்த கேமிங் மவுசை ரூ.2,095க்கு வாங்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவரத்தினங்கள் எவ்வாறு தோன்றுகின்றன?



நவரத்தினங்களில் அனைவருக்கும் தெரிந்தது வைரம். அது தவிர இரத்தினம், புஷ்பராகம், முத்து, பவளம், மாணிக்கம், வைடூரியம், மரகதம், கோமேதகம் போன்றவை உள்ளன.

இரத்தினம் என்பது அலுமினியமும், ஒக்சிஜனும் அதிகம் சேர்ந்த கலவை. காலையில் அடர் நிறத்திலும், மாலையில் வெளிர் நிறத்திலும் ஜொலிக்கும். 17 ஆம் நூற்றாண்டில் இரத்தினக் கற்கள் அரச ஆபரணமாக இருந்தன. அதை மற்றவர்கள் யாரும் பயன்படுத்த தடை விதிக்கப்பட்டிருந்தது. தேன் மஞ்சள் நிறத்தில் இருக்கும் புஷ்பராகக் கல் பிரேசில் மற்றும் சைபீரியாவில் அதிகம் கிடைக்கிறது.

18 ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேய மன்னன் புரகோன்ஷாவின் கிரீடத்தை அலங்கரித்த புஷ்பராகத்தின் எடை 1,608 கரட், உலகின் பெரிய தொழிலதிபர்கள், வன ஆய்வாளர்கள் புஷ்பராகம் அணிகிறார்கள்.

கடலில் கிடைப்பது முத்து. வெள்ளை, பழுப்பு, நீலம், பச்சை, இளஞ்சிவப்பு, கறுப்பு நிறத்திலும் கூட முத்துக்கள் உள்ளன. இது முழுக்க முழுக்க கல்சியம் கார்பனேட் தான். கடலுக்கு அடியில் இருந்து கிடைப்பதால் விலை அதிகம். தற்போது செயற்கை முத்துக்கள் தான் அதிகம் பயன்பாட்டில் உள்ளன.

முத்துக்களைப் போலவே பவளத்திற்கும் கடல்தான் வீடு. வெதுவெதுப்பான நீர்ப்பகுதியில் இது விளையும். பவளப்பூச்சி என்ற கடல் வாழ் உயிரினம், கறையான் கூடு போன்று கட் டும் புற்றே பவளப் பாறைகள் ஆகும். இரத்தம் போல் ஜொலிக்கும் பவளம் தான் சிறந்தது. சுற்றுச் சூழல் சீர்கேட்டால் பவளப் பாறைகள் அழிய தொடங்கிய பிறகு, பவளத்தின் விலை உச்சத்தைத் தொட்டுள்ளது.

மாணிக்கம், இரத்தினம் இவை இரண்டுமே பூமியில் இருந்து வெட்டி எடுக்கப்படும் ஒரு வகை கல் தான். காதலின் அடையாளமாக காதலர்கள் மத்தியில் மாணிக்கத்திற்கு மவுசு அதிகம். பூமிக்கு அடியில் அதிக அழுத்தத்தில் இருக்கும் லாவா என்ற எரிமலை குழம்பு வெளியே வந்தால் அது தான் வைடூரியம்.

வைரம், மாணிக்கம் வரிசையில் வைடூரியத்திற்கு 3 வது இடம். பச்சை நிறத்தில் பளபளப்பது மரகதம். சிறிய கல் கூட பல இலட்சம் விலை கொண்டது. மதுரை மீனாட்சி, உத்திரகோசமங்கை போன்ற முக்கிய கோயில்களில் மூலவர் சிலையே மரகதத்தால் ஆனது. பாகிஸ்தானில் உள்ள ஸ்வாட் பள்ளத்தாக்கில் ஏராளமாகக் கிடைக்கிறது. நவரத்தினங்களில் மிக வும் விலை குறைந்தது கோமேதகம். பசுவின் கோமிய நிறத்தில் இது இருப்பதால் அந்தப் பெயர் வந்தது. நகைகளின் பளபளப்பை கூட்டுகிறது. இதில் போலிகளை அவ்வளவு எளிதில் கண்டு பிடிக்க முடியாது. கோமேதக வர்த்தகம் இந்தியாவில் கொடிகட்டிப் பறக்கிறது.

# பிளாஸ்டிக் பீரங்கிகள்



பழம் தின்று கொட்டை போட்ட பிளாஸ்டிக் பீரங்கிகள் ஏதோ குழந்தைகளின் விளையாட்டு சமாசார மென்று நினைத்துவிட வேண்டாம். பாதுகாப்புத் துறையில் 21ஆம் நூற்றாண்டிற்கான புதிய வரவு என்று வர்ணிக்கப்படும் பிளாஸ்டிக் பீரங்கி, மிக வலிமையான போர்க்கருவியாக உருவாக்கப்பட்டுள்ளது. காலம் காலமாக போர்க்கருவிகள் செய்யும் தொழிலில் பழம் தின்று கொட்டை போட்டிருக்கிறது விக்கர்ஸ் என்ற பிரிட்டன் நிறுவனம். அந்நிறுவனம்தான் தற்போது வலுவூட்டப்பட்ட பிளாஸ்டிக்கைக் கொண்டு புதிய வகை பீரங்கிகளைத் தயாரிப்பதற்கான தொழில்நுட்பத்தைக் கண்டறிந்துள்ளது.

எடை குறைந்த இந்த பிளாஸ்டிக் பீரங்கி, நடைமுறையிலுள்ள 70 டொன் பீரங்கிக்கு ஒரு மாற்றாக விளங்கும். கம்ப்யூட்டர் பொருத்தப்பட்டுள்ள இந்த பீரங்கியை ரிமோட் மூலமும் இயக்க முடியும். ஆறு மீட்டர் நீளமும் 2 மீட்டர் உயரமும் கொண்ட இந்த பீரங்கி வெறும் ஒன்றரை டொன் எடை கொண்டது. மின் காந்தங்களின் உதவியுடன் இயங்கும் பிளாஸ்டிக் பீரங்கி மிகவும் வேகமாக நகரும்; அதே சமயம் கரடுமுரடான பகுதிகளில் தாக்குதலை மேற்கொள்ளும்படியும் வடிவமைக்கப்பட்டுள்ளது. நவீன கால போர் உத்திகளுக்கு ஏற்றதாக இது கருதப்படுகிறது. உலக நாடுகளிடையே இதற்குப் பெருத்த வரவேற்பு இருக்குமென விக்கர்ஸ் நிறுவனம் எதிர்பார்க்கிறது. சமாதானப் பிரியர்களுக்கு இது கவலையளிக்கும் செய்தி என்பதில் சந்தேகமில்லை!





# மூளையைப் பலப்படுத்தும் சொக்லேட்!

மூளையின் செயற்பாட்டை சொக்லேட் மேம்படுத்தக் கூடியது என்று புதிய ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது. சொக்லேட்டில் கோகோ என்ற வேதிப்பொருள் உள்ளது. இத்தகைய சொக்லேட்டை தினந்தோறும் உட்கொண்டால், மூளையின் செயல்பாடு மேம்படுவதுடன், வயதான நோயாளிகளுக்கு ஏற்படும் பைத்தியம், ஞாபக மறதி போன்ற நோய்களை தடுத்து விடும் என்று இந்த ஆய்வு தெரிவிக்கிறது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 06, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைஸ் ஸ்தாபனத்தினால், 2012 ஒகஸ்ட் 22 ஆம் திகதி வெளியிடப்பட்டது.